"யாரேனும் தாகமாயிருந்தால் என்னிடம் வரட்டும்.
என்னிடம் நம்பிக்கை கொள்வோர் பருகட்டும்" யோவா 7: 37

# தாகம்



தேடல் - 06 ஆனி - ஆவணி 2008 ஊற்று - 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம்

அன்பு உள்ளங்களுக்கு,

தாகம் மூலமாக மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. இந்நூல் நாளாந்த நற்செய்தியின் அடிப்படையில் இறைவனையும் எமது வாழ்வையும் தியானித்து ஆன்மீகத்தில் முன்னேற வழிவகுக்கும் என்பது எனது நம்பிக்கை, எனது செபம்.

இந்த நூல் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களுக்கான ஆன்மீகச் சிந்தனைகளைத் தாங்கி வருகின்றது. திருவழிபாட்டு ஆண்டில் பொதுக்காலம் 9ம் ஞாயிறு முதல் 22ம் ஞாயிறு வரைக்குமான நாளாந்த தியானங்களை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது.

கடவுளை அணுகிச் செல்லுங்கள். அவரும் உங்களை அணுகி வருவார் (யாக் 4: 8). இறைவனை அனுபவிப்பதற்கு வயதெல்லையில்லை. அவரது அன்பையும் இரக்கத்தையும் நாளாந்தம் சுவைக்கும்போது நாம் சிறிது சிறிதாக ஆன்மீகத்தில் வளர்கின்றோம். இந்த வளர்ச்சி எம்மை இறைவார்த்தையை வாழ்ந்துகாட்ட அழைக்க வேண்டும். 'இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள்' என்று அழைக்கிறார் யாக்கோபு (யாக் 2: 22). மனமாற்றத்தை நோக்கியதாக எமது சிந்தனை, வாழ்வு அமைந்திருக்க வேண்டும். அந்த மனமாற்றம் எம்மை ஒப்புரவின் மக்களாகவும் வாழ்ந்து காட்டத் தூண்டும். இறைவனில் நம்பிக்கை வைத்து வாழ்ந்துகாட்டுவோம்.

இறைவாக்கு வாசிப்பு, சிந்தனை, தியானம், ஒப்புரவு எம்மை எப்போதும் இறைவனின் பிள்ளைகளாக சேர்த்துவைக்க ஆசித்து முடிக்கிறேன். நன்றி.

அருட்தந்தை நோயல் இம்மானுவேல்
**தொகுப்பாசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம்

ஆனி – ஆவணி 2008

தேடல் – 06 ஊற்று – 03


***ஆசிரியர்:*** அருட்தந்தை நோயல் இம்மானுவேல்

***வெளியீடு:*** அருட்தந்தை நோயல் இம்மானுவேல்

***அட்டைப்படம்:*** சகோதரர் அமில ரவிந்த

***விலை:*** 50/–

***பதிப்பகம்:*** **Teleprints, Kandy**


***உங்கள் தொடர்புகளுக்கு:***


**Rev. Fr. Noel Emmanuel,**
**"Thagam"**
**National Seminary,**
**Ampitiya 20160**
**Phone: 081-2219586 / 0602822160**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 9ம் ஞாயிறு

### 01 – ஆனி 2008

*இச 11: 18, 26–28 திபா 31: 1–3, 16, 24 உரோ 3: 21–25, 28 மத் 7: 21–27*

### வாக்கு – வாழ்வு

இறைவனின் கட்டளைகளை அவரது மக்கள் எவ்வாறு கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை இன்றைய இறைவாக்குகள் எடுத்தியம்பு கின்றன. மனிதனைப் படைத்த கடவுள் அவனுக்கு முழுமையான சுதந்திரத்தையும் கொடுத்துள்ளார். அந்த சுதந்திரத்தைப் பயன்படுத்துவதும் அதன் விளைவுகளைச் சந்திப்பதும் மனிதனின் முடிவிலேயே தங்கியுள்ளது. ஆனால் மனிதரின் உள்ளங்களை அறியும் இறைவனை வெறும் சோடனைகள் நிறைந்த வார்த்தைகளால் ஏமாற்ற முடியாது என்பதையும் வாசகங்கள் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றன. வாசகங்களுக்குள் நுழைவோம்.

### நெஞ்சில், நினைவில்...

இறைவனின் வார்த்தைகளை, நியமங்களை மக்கள் நெஞ்சிலும் நினைவிலும் கொண்டிருந்து அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பது இணைச்சட்ட நூலில் தரப்படும் கட்டளை. இதை நினைவுபடுத்த மக்கள் இந்த நியமங்களை தமது கைகளில் கட்டியும், கண்களுக்கிடையே அடையாளப்பட்டமாகவும் அமைத்திருக்க வேண்டும். இதில் இரண்டு விடயங்களை நாம் கவனிக்க வேண்டும். 1. உள்ளார்ந்த செயல்பாடு 2. உள்ளார்ந்த செயல்பாட்டிற்கு இட்டுச்செல்லும் வெளியடையாளம்.

இறைவனின் இந்த நியமங்களை அன்று மக்கள் முறையாகக் கடைப்பிடித்தாலும் காலப்போக்கில் மக்களின் தலைவர்கள் வெளியடையாளங்களுக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுத்து உள்ளார்ந்த செயல்பாடுகளையும் அதன் முக்கியத்துவத்தையும் மறந்துவிட்டனர். இயேசுவும் வேறொரு சந்தர்ப்பத்தில் பரிசேயர் மறைநூல் அறிஞர்களைக் கடுமையாகக் கண்டிக்கும்போது 'தங்கள் மறைநூல் வாசகப்பட்டைகளை அகலமாக்கு கிறார்கள், அங்கியின் குஞ்சங்களைப் பெரிதாக்குகிறார்கள்' (மத் 23: 5) என்றார். ஏனெனில் இயேசுவின் காலத்தில் இவர்கள் மக்களது நன்மதிப்பையும் பாராட்டுதல்களையும் பெறவேண்டுமென்று இவ்வாறு செயல்பட்டனர். இறைவனின் சட்டங்களை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமெனும் எண்ணம் இவர்களுக்குக் குறைவாகவே இருந்தது.

இயேசுவின் இந்த கண்டிப்பு இன்று எமக்கும் பொருந்துமா? இயேசுவின் வார்த்தைகளைக் கடைப்பிடிக்க எந்தளவிற்கு நாம் ஆர்வம் காட்டுகிறோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லும் செயலும்

இறைவனின் நியமங்களை எப்போதும் நாம் வாழ்ந்து காட்டவேண்டும். 'என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு' என்றார் இயேசு (யோவா 4: 34). இதுவே இயேசுவின் ஒரே இலக்காக இருந்தது.

இயேசுவைப் பின்செல்வோருக்கு செபம் அவசியம். ஆனால் அந்த செபம் வாழ்வாகாவிட்டால் அதில் முழுமையிராது. எனவேதான், தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே விண்ணரசு செல்வர், என்றார் இன்றைய நற்செய்தியில். இவ்வாறு ஆண்டவரின் வாக்கில் நம்பிக்கை வைத்து அதன்படி வாழ்வோர் பாறைமீது வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார் என்றார் (மத் 7: 24). அதேபோல கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவோர் என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார் என்றும் வேறு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார் (காண். மாற் 3: 35).

இவ்வாறு இறைவனின் வாக்கை ஒருவர் தன்னில் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதை அவர் ஆர்வத்தோடு வாழ்ந்து காட்டவும் முன்வர வேண்டும். அதுவே இறைவனுக்கு மகிழ்ச்சியளிக்கும்.

## நம்பிக்கையால் மீட்பு

இறைவனின் நம்பிக்கை, வாக்கு, வாழ்வு போன்றவை பற்றிய சிந்தனையை சிலர் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் குழம்பிப் போகலாம். இயேசு செயல்களுக்கு முன்னுரிமை கொடுக்க, பவுலோ நம்பிக்கைக்கு முன்னுரிமை கொடுப்பதாக இங்கு தோன்றலாம். இறைவனின் முழுமையான நம்பிக்கை எம்மை புதிய மனிதராக்குகின்றது:

1. நம்பிக்கை சுய முயற்சியால் வரக்கூடிய பெருமையை அழித்துவிடுகின்றது. ஏனெனில் நம்பிக்கையின் ஊற்றே இறைவன்.
2. நம்பிக்கை எமது செயல்களை அல்ல, மாறாக இறைவனின் செயல்களைப் புகழ்கின்றது.
3. எமக்கு உதவி தேவை என்றும் இறைவனின் நிலைக்கு எம்மை உயர்த்த முடியாது என்றும் நம்பிக்கை ஏற்றுக்கொள்கின்றது.
4. எமது செயல்களில் அல்ல, மாறாக, இறைவனோடு எமக்குள்ள உறவையே நம்பிக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இன்று இறைவனில் எமது நம்பிக்கையையும், அவரது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் எமக்குள்ள ஆர்வத்தையும் ஆராய்ந்து பார்க்க இது ஓர் சிறந்த சந்தர்ப்பம். எமது சுயநலன்களுக்கு இடம்கொடாமல் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் எப்போதும் கருத்தாயிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02 ~ திங்கள் _ ஆனி 2008

2பேது 1: 1-7 திபா 91: 1-2, 14-16 மாற் 12: 1-12

## நேரிய வாழ்வு

'இவன்தான் சொத்துக்கு உரியவன். வாருங்கள் நாம் இவனைக் கொன்றுபோடுவோம்' (மாற் 12: 7).

### சிந்தனைக்கு...

மீட்பின் வரலாறையே சுருக்கமாக எடுத்துக்காட்டுவதாக கொடிய குத்தகைக்காரர் உவமை அமைந்துள்ளது எனலாம் (காண். எசா 5: 1-7). இங்கு திராட்சைத் தோட்டம் இஸ்ரயேலரையும் (எசா 5: 1, மாற் 12: 1), உரிமையாளர் கடவுளையும் (மாற் 12: 1), தோட்டத் தொழிலாளர்கள் இஸ்ரயேலின் தலைவர்களையும் (மாற் 12: 1), பணியாளர்கள் இறைவாக்கினரையும் (மாற் 12: 2), அன்பு மகன் இயேசுவையும் (மாற் 12: 6) குறிப்பிடுகின்றது.

கொடிய குத்தகைக்காரர் உவமையைக் கூறுவதன் மூலமாக இயேசு பரிசேயர் சதுசேயரின் கொடிய, சூழ்ச்சிகள் நிறைந்த மனதை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தார். இவர்கள் மக்களைவிட பழைய ஏற்பாட்டு நூல்களையும் இறைவாக்குகளையும் அதிகமாக அறிந்திருந்தனர். ஆனாலும் இயேசுவின் வருகையின், வாழ்வின் வித்தியாசத்தை உணர மனமில்லாமல் செயல்பட்டனர். ஏனெனில்:

அ. இவர்கள் தொடக்கத்திலிருந்து இயேசுவை ஓர் எதிரியாகவே பார்த்தனர். ஏனெனில் இயேசுவின் போதனைகள் இவர்களது சுயநல வாழ்வுக்கு அமைவாக இருக்கவில்லை.

ஆ. இயேசு மோசே கொடுத்த சட்டங்களை மீறுகின்றார் எனும் கருத்து இவர்களுக்குள் இருந்ததாலும் மக்கள் இயேசுவிற்கு சார்பாக இருந்ததாலும் இயேசு ஓர் தடையாகவே யூதத் தலைவர்களுக்கு இருந்துள்ளார்.

எனவே இயேசுவை ஒழித்துக்கட்டுவது ஒன்றே பதில் என்பது இவர்களது எண்ணங்களில் இருந்தது (காண். யோவா 11: 50).

### வாழ்வுக்கு...

இன்று நாமும் எம்மையும் அறியாமல் கொடிய குத்தகைக்காரர் போல செயல்படலாம். எமது சுயநல வாழ்வுக்குச் சவாலாக வருவோரை எதிர்க்கவோ, ஒழித்துக்கட்டவோ நாம் முனையலாம். ஆண்டவரின் விருப்பு ஒன்றே எமது இலக்காக இருக்கட்டும். அதையே வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03 – செவ்வாய் – ஆனி 2008

2பேது 3: 12–15, 17–18 திபா 90: 2–4, 10, 14, 16 மாற் 12: 13–17

### அரசரா? கடவுளா?

'சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்' (மாற் 12: 17).

**சிந்தனைக்கு...**

இயேசுவை வார்த்தையில் சிக்கவைத்து அவரைத் தீர்த்துக்கட்ட விரும்பிய பரிசேயர் ஏரோதியரோடு சேர்ந்து செயல்பட்டனர். பரிசேயர்கள் யூதர்களின் சமய தூய்மை பற்றிக் கருத்தாயிருந்தனர். ஏரோதியர்களோ உரோமையரின் ஆட்சிக்கு சார்பாக இருந்த ஓர் யூத அரசியல் குழு. பரிசேயர்களுக்கும் ஏரோதியர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாவிட்டாலும் இயேசு தமக்கு எதிரியாக வர பரிசேயர்கள் ஏரோதியரோடு சேர்ந்து செயல்பட்டனர். யூதர்கள் பொதுவாக வணங்காக் கழுத்துள்ளவர்கள். கடவுளைத் தவிர யாருக்கும் அடிபணிய மாட்டார்கள். ஆனால் இயேசுவின் காலத்தில் இவர்கள் உரோமையருக்கு அடிமைகளாகவே இருந்தனர். இதன் அடையாளமாக இவர்கள் உரோமையருக்கு வரி செலுத்தவேண்டி இருந்தது. இவ்வரி அரச உருவம் பொறிக்கப்பட்ட நாணயத்தினால் செலுத்தப்பட வேண்டும் (காண். இச 4: 16, 5: 9–10). இதை இஸ்ரயேலர் வெறுத்தாலும் தமது அரச, சமய அடிமைத்தனத்தை இச்செயல் எடுத்துக்காட்டியது.

சீசருக்கு வரி செலுத்துவது முறையா இல்லையா என்பதே இவர்களது கேள்வி. இயேசுவும் நாணயம் ஒன்றைக் கேட்டு வாங்கி சீசருக்கு உரியதை சீசருக்குக் கொடுக்கச் சொன்னார்.

**வாழ்வுக்கு...**

அரசன், கடவுள் இருவரும் முக்கியமானவர்கள். ஆனால் அரசரா அல்லது கடவுளா என்ற கேள்வி எழும்போது அது கடவுளாகவே இருக்க வேண்டும். 'கடவுளிடமிருந்து வராத அதிகாரம் எதுவுமில்லை' (உரோ 13: 1). ஓர் அரசு கடவுளின் கட்டளைகளுக்கு எதிராகப் போனால் நாம் அதை துணிந்து எதிர்க்கவும் முன்வரவேண்டும். கடவுளே அரசர்க்கெல்லாம் அரசர் (காண். திவெ 4: 8, பிலி 2: 10 திவெ 5: 13). மனிதருக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்குக் கீழ்ப்படிய நாம் உறுதிபூண்டு (காண். திப 5: 29) நம்பிக்கையோடு செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 – புதன் – ஆனி 2008

2திமொ 1: 3, 6–12 திபா 123: 1–2 மாற் 12: 18–27

### உயிர்ப்பு

'அவர் இறந்தோரின் கடவுள் அல்ல. மாறாக, வாழ்வோரின் கடவுள்' (மாற் 12: 27).

### சிந்தனைக்கு...

சதுசேயர் உயிர்ப்பில் நம்பிக்கை வைக்காதவர்கள். இயேசுவை சிக்கலில் மாட்ட பரிசேயர் உரோமையருக்கு வரி செலுத்துதல் பற்றிக் கேட்டுத் தோல்வியுற சதுசேயர் உயிர்ப்பு பற்றிய வாதத்தில் இறங்கினார்கள். யூதர்களின் எண்ணப்படி ஒருவர் வாரிசு இல்லாமல் இறந்தால் அது இறைவனின் சாபத்தைக் காட்டுகின்றது. எனவே ஒருவர் வாரிசு இல்லாமல் இறந்தாலும் அவருக்கு வாரிசு ஏற்படுத்துவதற்காக அவரது சகோதரர் இறந்தவரின் மனைவியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் (காண். இச 25: 5–6, தொநூ 38: 8). இந்த பழைய ஏற்பாட்டுச் சட்டத்தை சதுசேயர்கள் தமக்குச் சார்பாகப் பயன்படுத்தினர். இவர்கள் ஓர் கதையையும் உருவாக்கி ஏழு சகோதரர்கள் இவ்வாறு ஒரே பெண்ணைத் திருமணம் செய்து வாரிசு இல்லாமல் இறந்தால் உயிர்த்தெழுதலின்போது இவர் யாருடைய மனைவியாக இருப்பார் என்று கேட்டனர்.

இயேசுவின் போதனை இவர்களது சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டிருந்தது. இறைவன் இறந்தோரின் கடவுளல்ல, மாறாக, வாழ்வோரின் கடவுள். உயிர்ப்பு வாழ்வில் பெண் கொள்வதும் இல்லை, கொடுப்பதும் இல்லை. அங்கு உறவு, சூழ்நிலைகளே வேறாக இருக்கும் என்பது இயேசுவின் போதனை. உயிர்ப்பு பற்றி பழைய ஏற்பாட்டு நூல்களிலேயே பல இடங்களில் கூறப்பட்டுள்ளன (ஓசே 6: 1–3, எசா 51: 17, எசே 37: 1–14). தூய பவுலும் தனது கடிதங்களில் உயிர்ப்பும், நிலைவாழ்வும் உண்டு என்பதை வலியுறுத்துகின்றார் (1கொரி 15: 52).

### வாழ்விற்கு...

இயேசுவின் இறப்பும் உயிர்ப்பும் எமக்கு உயிர்ப்பிலும் நிலைவாழ்விலும் உறுதியான நம்பிக்கையைத் தருகின்றது. எனவே நிலைவாழ்வை அடைய நாம் உயிர்த்த ஆண்டவரில் நம்பிக்கை வைத்து உயிர்ப்பின் மக்களாக வாழ்ந்து காட்டவேண்டும். எமது நம்பிக்கையும், அன்பும் நிறைந்த வாழ்வு அடுத்தவர்க்கு உயிரைக் கொடுக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05 – வியாழன் – ஆனி 2008

2திமொ 2: 8–15  திபா 25: 4–5, 8–10, 14  மாற் 12: 28–34

### கட்டளை

'நீர் இறையாட்சியினின்று தொலைவில் இல்லை' (மாற் 12: 34).

### சிந்தனைக்கு...

பரிசேயர், ஏரோதியர், சதுசேயர் என்று பலதரப்பினர் இயேசுவிடம் கேள்விகள் கேட்டு அவரை சிக்கலில் மாட்டவைக்க முயன்று தோல்வி காண, இன்றைய நற்செய்தியில் மறைநூல் அறிஞருள் ஒருவர் இயேசுவிடம் இறைகட்டளைகள் பற்றிய கேள்வியைக் கேட்கிறார்.

இயேசுவின் காலத்தில் யூதர்கள் மத்தியில் ஏறக்குறைய 613 சட்டங்கள் இருந்தன என்பர். இவற்றுள் பெரிய கட்டளை, சிறிய கட்டளை என்று சமய வல்லுனர்கள் சிலர் பிரித்து விளக்கம் கொடுக்க முயன்றாலும் அனைத்தும் சமமாக மதிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று பலர் கருதினர். இந்நிலையில் மறைநூல் அறிஞர் இயேசுவிடம் முதன்மையான கட்டளை பற்றிய கேள்வியை எழுப்பினார். இயேசுவின் பதிலும் தெளிவாகவே இருந்தது.

பழைய ஏற்பாட்டில் இறை–மனித அன்பு பற்றிக் கூறப்பட்டுள்ளது (காண். இச 6: 5, லேவி 19: 18). இந்த இரண்டு கட்டளைகளையும் ஒரே கட்டளையாக இயேசு குறிப்பிட்டு இவற்றைவிட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை என்றார்.

### வாழ்விற்கு...

**இறையன்பு:** கடவுள் உடன்படிக்கையின் ஆண்டவர். அவரை முழுமையாக அன்பு செய்யவேண்டும் என்பது பழைய ஏற்பாட்டின் போதனை. தன்னைத் தவிர வேறு தெய்வங்கள் இருக்கக்கூடாது என்பது கடவுளின் நேரடியான கட்டளை (விப 20: 1–3, விப 15: 11–12). ஆனால் இன்று நாம் எமது வாழ்வில், உள்ளத்தில் பல கடவுளர்களைத் தாங்கிநிற்கிறோம். மண், பெண், பொன், சுயநலம், பதவி, செல்வாக்கு போன்றவற்றின்மேல் எமக்கு அளவுக்கதிகமான ஆசை வரும்போது அவையே எமது தெய்வங்களாகி விடுகின்றன.

**பிறரன்பு:** அடுத்தவரை அன்பு செய்வது கடவுள்மேல் நாம் காட்டும் அன்பின் வெளிப்பாடாகும். எம் சகோதரரை அன்பு செய்யாமல் கடவுளை அன்பு செய்ய முடியாது (காண். 1யோவா 4: 20–21). எமது அன்பு தூய அன்பாக இருக்கட்டும். வாழ்வு இனிமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06 - வெள்ளி - ஆனி 2008

2திமொ 3: 10-17 திபா 119: 157-161, 165-166, 168 மாற் 12: 35-37

### மெசியா

மெசியா தாவீதின் மகன் என்பது தெளிவு. தாவீது அந்த மெசியாவையே தலைவர் என்று அழைக்கின்றார். இதைக் குறிப்பிடும் இயேசு தான் தாவீதைவிட மேலானவர் எனப் போதிக்கின்றார்.

### தாவீதின் மகன் மெசியா

மெசியா அல்லது கிறிஸ்து தாவீதின் மரபிலே தோன்றுவார் என்பது பழைய ஏற்பாட்டு நூல்களின் போதனை. இயேசுவின் தலைமுறைப் பட்டியலில் 'ஆபிரகாமின் மகனும் தாவீதின் மகனுமாகிய இயேசுக் கிறிஸ்து...' (மத் 1: 1) என்று குறிப்பிடப்படுவதைக் காணலாம். இயேசு தாவீதின் மரபில் வந்தவர் என்றார் பவுல் (காண். 2திமொ 2: 8). தாவீது ஓர் அரசர். அவர் அரசராக திருப்பொழிவு செய்யப்படுமுன் சிறந்த ஆயராக இருந்துள்ளார். அதேபோல மெசியா கிறிஸ்துவும் மக்களை வழிநடத்தும், ஆளும், பராமரிக்கும் சிறந்த நல்லாயனாக இருப்பார் என்பது தெளிவு. தன் மந்தைக்காக தனதுயிரையும் கொடுப்பார் (காண். யோவா 10: 11, எரே 23: 3-5, எசே 34: 23-25). இவ்வாறு அவருள் அன்பு, பரிவு, பாசம், இரக்கம், நீதி குடிகொள்ளும்.

### தாவீதின் ஆண்டவர் மெசியா

நற்செய்தியில் இயேசு திபா 110: 1 பகுதியைக் குறிப்பிட்டு தாவீதின் மகன் மெசியா என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் தாவீதுக்கும் ஆண்டவர் மெசியா, கிறிஸ்து என்பதை வலியுறுத்தினார். தாவீதே அவரை 'ஆண்டவர் என் தலைவர்' என்று அழைக்கின்றார். இதனால் தாவீதுக்கும் மேலானவர் மெசியா என்பது புலப்படுகின்றது.

இயேசுவை தாவீதின் மகன் என்று கண்ட யூதர்களுக்கு அவர் கடவுளின் மகன் என்பதையும் உணர்த்த விளைகிறார் இயேசு. தாவீது இவ்வுலகிலிருந்து வந்த ஒருவர். ஆனால் இயேசு இவ்வுலகில் மனிதனாகப் பிறந்தாலும் அவர் கடவுளின் மகன் என்பதே உண்மை. புதுமைகள் செய்பவல்ல, உண்மைப் போதனைகளைக் கொடுக்கும் ஒருவராக இயேசுவைப் பார்த்த மக்களுக்கு இந்த போதனை ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கும்.

இன்று எனக்கு இயேசு வெறும் போதகரா? அல்லது எனது ஆண்டவரா? அவரில் நிறைவான நம்பிக்கை வைத்து, அந்த நம்பிக்கையை வாழ்ந்துகாட்டி வாழ்வு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 – சனி – ஆனி 2008

2திமொ 4: 1–8 திபா 71: 8–9, 14–17, 22 மாற் 12: 38–44

## உண்மை வாழ்வு

'இந்த ஏழைக் கைம்பெண்,... மற்ற எல்லாரையும்விட மிகுதியாகப் போட்டிருக்கிறார்...' (மாற் 12: 43).

### சிந்தனைக்கு...

வெளிச்சடங்குகளுக்கும் புறத்தூய்மைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்துவந்தனர் மறைநூல் அறிஞர்கள். மக்களும் இவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென மக்களுக்கு அழுத்தம் கொடுத்தும் வந்தனர். பொது இடங்களில் மக்களின் பாராட்டுதல்களையும் நன்மதிப்பையும் எதிர்பார்த்த இவர்கள் தமது சுயநல எண்ணங்களை இவ்வாறு வெளிப்படுத்தினர். அதைவிட மேலாக அடுத்தவர் உதவியில் தங்கி வாழும் ஏழைகள், கைம்பெண்கள், சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களின் உடமைகளையும் இவர்கள் சுரண்டி வாழ்ந்தனர். தமக்கிருந்த அதிகாரத்தை மக்களின் நன்மைக்காகவும் இறைவனின் புகழ்ச்சிக்காகவும் பயன்படுத்தாமல் தமது புகழ்ச்சிக்காகப் பயன்படுத்தினார்கள். இவர்களைச் சாடினார் இயேசு (காண். லூக் 11: 37–44). லூக்கா 23ம் அதிகாரம் முழுவதிலும் இவர்களுக்கு எதிரான இயேசுவின் கண்டனங்களைக் காணலாம்.

இயேசு நற்செய்தியில் ஏழைக் கைம்பெண்ணின் நல்ல செயலை இவர்களோடு ஒப்பிட்டுக் காட்டுகின்றார். இவரது தாராள குணம் அடுத்தவர்க்கு சிறந்த முன்மாதிரியானது.

1. கைம்பெண் தன் ஏழ்மையிலும் மனம் வைத்துக் காணிக்கை போட்டார்.
2. தன்னிடமிருந்த அனைத்தையும் போட்டார். இனி எதுவுமே இல்லை எனும் நிலை.
3. தன் பிழைப்புக்கானது முழுவதையும் போட்டார். இவரது எதிர்கால பிழைப்பு கேள்விக்குறியானது.

ஆடம்பரங்களையும், புகழ்ச்சியையும் எதிர்பார்த்த பரிசேயர், மறைநூல் அறிஞர்களுக்கு இது சிறந்த பாடமாகும்.

### வாழ்விற்கு...

நாமும் இன்று பகட்டையும், புகழையும் விரும்பி கடவுளை மறக்கலாம். எமது நல்லுணர்வு பணியில், பகிர்வில், தியாகத்தில் வெளிப்படவேண்டும். ஆண்டவருக்காக எதையும் இழக்கத் தயாராவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 10ம் ஞாயிறு

### 08 - ஆனி 2008

ஓசே 6: 3-6 திபா 50: 1, 8, 12-15 உரோ 4: 18-25 மத் 9: 9-13

### இரக்கம்

இஸ்ரயேல் மக்களின் போலி வாழ்வையும் இறைவனின் இரக்க உள்ளத்தையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவருகின்றன இன்றைய ஞாயிறு வாசகங்கள். 'பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்' (மத் 9: 13).

## போலி மனமாற்றம்

***மக்களது மனநிலை:*** 'நாம் அறிவடைவோமாக, ஆண்டவரைப் பற்றி அறிய முனைந்திடுவோமாக' என்று செயல்பட மக்கள் முனைந்தனர். இறைவனை அறிதல் மட்டும் முழுமையானதல்ல. மாறாக இறைவனில் நம்பிக்கை வைத்து அவரது உடன்படிக்கைக்கு இசைவாக இவர்கள் வாழ்ந்துகாட்ட வேண்டும். ஆனால் இவர்களது மனமாற்றம், இறைவனை அறியவேண்டும் எனும் ஆர்வமெல்லாம் போலியானதாக அமைந்துவிடுகின்றது. மக்களது பலி இறைவனோடு நல்ல உறவை வளர்க்க உதவும். பழைய ஏற்பாட்டில் விருத்தசேதனம் போன்ற பல சடங்குகள் முக்கியமானதாக இருந்தாலும் மக்கள் அதையும் தாண்டி இறையன்பிலும், நேரிய வாழ்விலும் நிலையாக இருக்க வேண்டும் என்பதையும் மறந்துவிடக்கூடாது. இந்த நற்செயல்கள் இறைவன் ஏற்படுத்திய உடன்படிக்கையில் மக்களின் அர்ப்பணத்தை வெளிப்படுத்தும். அல்லது அவை வெறும் போலிச் சடங்காகவே முடிந்துவிடும்.

சீனாயில் இறைவன் ஏற்படுத்திய உடன்படிக்கையை (காண். விப 19-20) மக்கள் தொடர்ச்சியாக மறந்து வாழ்ந்தனர். இது ஓசேயா நூலில் நாம் காணும் முக்கிய செய்தியாகும். தன் மக்கள் மக்களினத்தார்க்கு ஆசீராகவும், ஒளியாகவும் (தொநூ 12: 2, 3, எசா 49: 6) அமையவேண்டுமென்பதே இறைவனின் விருப்பம். அவ்வாறு இஸ்ரயேலர் அமையும்போது அவர்களை இறைவன் ஆசீர்வதிப்பதாகவும் வாக்களித்திருந்தார். ஆனால் மக்களோ தமது நம்பிக்கையின்மையை தமது போலி வாழ்வின் மூலமாக தொடர்ச்சியாக வெளிப்படுத்தினார்.

***இறைவனின் கண்டனம்:*** உங்கள் அன்பு காலைநேர மேகம் போலவும் கதிரவனைக் கண்ட பனிபோலவும் மறைந்துபோகிறதே என்றார் இறைவன். பலிசெலுத்தி இறைவனைத் திருப்திப்படுத்த முனைந்த மக்களுக்குத் தான் விரும்புவது இரக்கத்தையே என்பதை வலியுறுத்திக் கூறுகின்றார் இறைவன் ஓசேயா இறைவாக்கினர் மூலமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபிரகாமின் நம்பிக்கை

இறைவனின் மீட்புத்திட்டத்தில் ஆபிரகாம் இஸ்ரயேல் எனும் புதிய இனத்தின் தந்தையாக இறைவனால் அழைக்கப்பட்டவர். இவர் தனது வாழ்வில் பல தடைகள், குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் இறைவனில் நிறைவான நம்பிக்கை வைத்திருந்தார். எனவேதான் இவர் விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படுகின்றார்.

## பாவிகளை அழைக்க...

தன்னைப் பின்செல்ல மத்தேயுவை அழைத்தார் இயேசு. மத்தேயுவின் வீட்டில் உணவருந்தியபோது பாவிகள், வரிதண்டுபவர்களோடு அமர்ந்திருந்தார் அவர். மத்தேயு வரிதண்டுபவர். அவருக்கு பல வரிதண்டுபவர்களின் நட்பு இருந்திருக்கும். உரோமையருடைய அரசாட்சிக்கு சார்பாக வரிவசூலித்தவர்களை யூதர்கள் வெறுத்தும் பாவிகள் என்று கருதியும் வந்தனர். இவர்களுக்கு பெரும் அதிகாரமும் இருந்தது. இவர்கள் தமது அதிகாரம், அரசு தந்த சலுகைகளை வைத்துக்கொண்டு தமது வாழ்வை வளமாக்கிக்கொண்டனர். இவர்களுள் ஒருவரான மத்தேயுவை இயேசு அழைத்தபோது அவரும் மறுப்புத் தெரிவிக்காமல் தனது வளமான எதிர்காலத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின்தொடர்ந்தார். இயேசுவில் ஓர் வித்தியாசத்தைக் கண்ட இவர் தனது நண்பர்களாக ஏனைய வரிதண்டுவோரையும் விருந்திற்கு அழைத்திருப்பார்.

பாவிகள், வரிதண்டுவோருடன் இயேசுவிற்கு இருந்த நெருக்கத்தைப் பார்த்த பரிசேயர் அவருடைய செயலைக் கண்டித்தனர். ஆனால் இயேசுவோ தனது வருகையின், பணியின் நோக்கத்தைப்பற்றித் தெளிவாகவே இருந்தார். 'நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்' என்று அவர் குறிப்பிட்டார். இப்பகுதியில் மூன்று தடவைகள் இயேசு பாவிகளோடு இணைத்துக் காட்டப்படுகின்றார் (9: 10, 11, 13). பாவிகள்மீது இயேசுவிற்கு இருந்த இரக்கம், நெருக்கம், அன்பு, ஆதரவு மேலானது எனலாம். இதை நாம் நற்செய்திகளில் பல இடங்களிலும் காணலாம். முடக்குவாதமுற்றவரைக் குணமாக்கியது (மத் 9: 1-8), விபசாரத்தில் பிடிபட்ட பெண் (யோவா 8: 1-11), சமாரியப் பெண் (யோவா 4: 1-43), பேதுரு (யோவா 21: 15-17) போன்ற பல உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

பாவிகளைத் தேடி வந்தவர் ஆண்டவர். அந்த பாவி ஏழையோ, பணக்காரரோ என்பது அவருக்கு முக்கியமல்ல. நான் இன்று பாவியா? அப்படியானால் அவர் என்னையே தேடி வருகின்றார். அவரை சந்திக்க, ஏற்று மனம்மாற நான் ஆயத்தமா? அவரண்டை நோக்கி வந்தால் அவரது அன்பையும் இரக்கத்தையும் நிறைவாக சுவைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 ~ திங்கள் _ ஆனி 2008

1அர 17: 1-6 திபா 121: 1-8 மத் 5: 1-12

## மலைப்பொழிவு

இயேசுவின் மலைப்பொழிவு பல உண்மைகளை எமக்கு விளக்குகின்றது. இது இயேசுவின் பணிக்கால முக்கிய போதனைகளின் தொகுப்பு என்றும் சில அறிஞர்கள் கூறுவர். அதுவும் 'பேறுகள்' மலைப்பொழிவின் சிகரம் என்று கூறலாம். மோசே சீனாய் மலையில் பத்துக் கட்டளைகளைக் கொடுத்ததுபோல புதிய ஏற்பாட்டில் புதிய மோசே புதிய சட்டங்களைக் கொடுக்கின்றார்.

### 'பேறுகள்"

தனது சீடர்கள் தம் பணிவாழ்வில் வரக்கூடிய புகழ்ச்சி, பெருமையில் நிலைத்திராமல் அவர்களுக்கு வரக்கூடிய துன்பங்கள் சவால்களுக்கு முகம்கொடுக்கவும் தம்மை தயார்செய்துகொள்ள வேண்டும் என்று இயேசு எச்சரிக்கின்றார். இயேசு தரும் பேறுகளை இவ்வாறு நாம் புரிந்துகொள்ளலாம்.

1. அவை இயேசுவின் சீடர்களுக்கு ஒழுக்கவியல் படிப்பினைகளாகவும் விசுவாசிகளுக்கு தம் நடத்தையின் அளவுகோலாகவும் உள்ளன.
2. அவை இறையாட்சியின் மதிப்பீடுகளையும், உலக மதிப்பீடுகளையும் ஒப்பிட்டுப் பார்க்க உதவுகின்றன.
3. அவை மேலெழுந்தவாரியான பரிசேயரின் நம்பிக்கையையும், இயேசு எதிர்பார்க்கும் உண்மையான நம்பிக்கையையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன.
4. பழைய ஏற்பாட்டு எதிர்பார்ப்புகள் எவ்வாறு புதிய இறையாட்சியில் நிறைவேறவுள்ளன என்பதையும் காட்டுகின்றன.

மலைப்பொழிவில் வரும் இந்த 'பேறுகளை' நாம் எமது விருப்பம், வசதிகளின்படி தனித்து தெரிவுசெய்து கடைப்பிடித்து ஏனையவற்றை விட்டுவிட முடியாது. அவை முழுமையாக, பூரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். கிறிஸ்துவின் சீடர்களாக நாம் எவ்வாறு வாழ்ந்துகாட்ட வேண்டும் என்பதை இவை எடுத்துக்காட்டுகின்றன.

### வாழ்விற்கு...

எமக்கு தாழ்ச்சி, கனிவு, இரக்கம், தூய்மை போன்ற பண்புகள் எப்போதும் இருக்க வேண்டும். அதேவேளை நாம் நீதியான வாழ்வு வாழவும் அதனால் வரும் சவால்களை எதிர்கொள்ளவும் ஆயத்தமாக இருக்க வேண்டும். இதுவே நற்செய்தி தரும் சவால். வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 – செவ்வாய் – ஆனி 2008

1அர 17: 7–16 திபா 4: 1–4, 6–7 மத் 5: 13–16

## உப்பு, ஒளி

'நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாக இருக்கிறீர்கள்... நீங்கள் உலகிற்கு ஒளியாக இருக்கிறீர்கள்... இவ்வாறே உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க!' (மத் 5: 13, 14, 16).

### சிந்தனைக்கு...

உலகின் உப்பாகவும், ஒளியாகவும் தன் சீடர்கள் இருக்க வேண்டும் எனப் போதிக்கின்றார் இயேசு. நடைமுறை வாழ்வில் உப்பும் ஒளியும் அவசியமானவை. ஆனால் அவை தன்னிலே பயனற்றவை. உப்பு உணவோடு கலக்கப்படும்போது அது தன்னைக் கரைத்து உணவிற்கு சுவை தருகின்றது. உணவும் உண்ணக்கூடியதாக மாறுகின்றது. அதேபோல ஒளியும் தன்னையே அழித்து பிறருக்கு ஒளியாகின்றது. தன்னை அழிக்க முடியாது என்று அது பிடிவாதமாக இருந்தால் அடுத்தவர்க்கு பயன் கொடுக்க முடியாது.

அவ்வாறே கிறிஸ்தவரும் உலகின் உப்பாகக் கரைந்து, ஒளியாக தம்மை அழிக்கும்போதே உலகிற்கு வாழ்வையும் சுவையையும் கொடுக்க முடியும். அல்லது பயனற்றவர்களாக இருந்துவிடுவர்.

இயேசு இவ்வுலகிற்கு சாரமுள்ள உப்பாகவும், குன்றின்மீது வைக்கப்பட்ட ஒளியாகவும் திகழ்ந்து காட்டினார். அவரது ஒவ்வொரு சிந்தனையும் செபமும் உலகிற்காகவே இருந்தது, அவரது ஒவ்வொரு வார்த்தையும் மக்களுக்கு நலவாழ்வைக் காட்டுவதாகவும், பாவங்களிலிருந்து மன்னிப்பைக் கொடுப்பதாகவும், நோய்களிலிருந்து குணமாக்கலைக் கொடுப்பதாகவும், பசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுப்பதாகவுமே அமைந்தது.

### வாழ்விற்கு...

இன்று நான் சமூகத்திற்கு ஒளியாகத் திகழத் தடையாக இருக்கும் காரணிகள் என்ன? 1. பேச வேண்டிய நேரத்தில் அமைதி காத்தல், 2. சமூகத்தின் சுயநலப் போக்கோடு ஒத்துப்போதல், 3. ஒளியை மறுத்தல், 4. பாவம் எனது ஒளியை மறைக்க அனுமதித்தல், 5. ஒளியை விளக்காது விடுதல், 6. அடுத்தவரது தேவையை உணரத் தவறுதல் போன்ற காரணங்களால் நான் ஒளியாக சமூகத்தில் வாழத் தவறலாம். உவர்ப்புள்ள உப்பாக, உலகின் ஒளியாக வாழ்ந்து காட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திப 11: 21–26, 13: 1–3 திபா 98: 1–6 மத் 10: 7–13

## திருத்தூதரான தூய பர்னபா நினைவு

'விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது எனப் பறைசாற்றுங்கள்' மத் 10: 7).

### சிந்தனைக்கு...

இயேசுவின் காலத்தில் யூத மக்கள் மெசியாவின் வருகையை எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். ஆனால் அவர் கொண்டுவரும் ஆட்சி இந்த உலகைச் சார்ந்ததாக இருக்கும் எனவும் பெரிதும் எதிர்பார்த்தனர். தாவீது, சாலமோன் அரசர்களின் காலத்தில் இருந்ததுபோல இஸ்ரயேல் அன்னிய அரசுகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற்று நிலையான ஆட்சியைப் பெறும். மெசியா அதை நிறுவுவார் என்பதே இவர்களது எண்ணம், எதிர்பார்ப்பு. இறையாட்சிக் கனவுகள் இவ்வாறு நிறைவேறும் என இவர்கள் எண்ணினர்.

**1. செய்தியைத் தாங்கிச் செல்வோர்:** இயேசு கொண்டுவந்ததோ ஆன்மீக அரசு. அந்த அரசு நெருங்கி வந்துவிட்டது என்பதே உண்மையான நல்ல செய்தி. இதையே தன் சீடர்கள் சென்று பறைசாற்ற வேண்டுமென இயேசு அவர்களை அனுப்பி வைத்தார். அந்த பணியின்போது அவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டுமென்றும் கூறிவைத்தார். எனவே அவர்கள் கொண்டுசென்ற செய்தி 'விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது' என்பதாகும். அந்த நல்ல செய்தியின் வெளிப்பாடுகள் குணமாக்குதல்களும், பேய்களை விரட்டுதலுமாகும். பணிக்கென செல்லும் சீடர்கள் அவசியமில்லாத எதையும் தம்மோடு எடுத்துச் செல்லக்கூடாது எனவும் இயேசு வலியுறுத்தினார். ஆனால் மக்கள் செய்தியை ஏற்றுக்கொள்வார்களா?

**2. செய்தியைப் பெறுவோர்:** இறை பணிக்காக வருவோரை மக்கள் நல்மனதோடு ஏற்று உபசரிக்க வேண்டும். அதேபோல அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பைக் கொடுக்கவும் வேண்டும் என்பது நற்செய்தியிலிருந்து புலனாகின்றது.

### வாழ்விற்கு...

இன்று நாமும் இயேசுவின் நல்ல செய்திகளை வார்த்தையின் மூலமாகவோ எமது வாழ்வின் மூலமாகவோ கொண்டுசெல்ல அழைக்கப்படு கின்றோம். இதை உணர்ந்து பொறுப்போடு செயல்படுகின்றோமா? எமது தனித்துவ அழைப்பை உணர்ந்து செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 – வியாழன் – ஆனி 2008

1அர 18: 41–46 திபா 65: 9–12 மத் 5: 20–26

### பிறரன்பு

'மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும்' (மத் 5: 20).

### சிந்தனைக்கு...

பழைய ஏற்பாட்டுச் சட்டங்களுக்கு இயேசு புதுப் பொழிவு கொடுக்கின்றார். 'நான் உங்களுக்குச் சொல்கிறேன்...' என்ற பதத்தின் மூலமாக அவர் தனது அதிகாரத்தையும் தானே புதிய மோசே என்றும் எண்பிக்கின்றார்.

'கொலை செய்யாதே...' என்பது பழைய ஏற்பாட்டுச் சட்டம். அது இன்றும் பொருந்தும். இறைவனே அனைத்து உயிர்களுக்கும் சொந்தமானவர். எனவே ஒருவரது உயிரைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் இங்கு இயேசு 'உள்ளக் கொலை' செய்வதே தவறு என்பதை சுட்டிக் காட்டுகின்றார். சினம் கொள்ளுதல், முட்டாளே, அறிவிலியே என்பதெல்லாம் கொலைக்கு இட்டுச் செல்ல வல்லன. இவ்வாறு கொலை போன்ற பாரிய தீய செயலுக்கு இட்டுச் செல்லக்கூடிய சிறிய எண்ணங்கள், வார்த்தைகளே தவறானவை, கண்டிக்கப்பட வேண்டியன என்றார் இயேசு.

மாறாக, நாம் நல்லுறவுகளை வளர்க்க முயல வேண்டும். பலி செலுத்துவதைவிட ஒப்புரவுக்கும் சமரசத்திற்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அப்போது உறவும் மலரும், செலுத்தும் பலியும் பயனுள்ளதாக அமையும். சினங்கொள்வதில் தாமதம், கேட்பதில் வேகம், சகோதர அன்பு போன்றன பலிகளைவிட மேலானவை (காண். யாக் 1: 19–20, 1யோவா 4: 21). அன்று சடங்குகள், ஆசாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த யூத மக்களுக்கு இயேசு உறவின் முக்கியத்துவத்தைக் காட்டினார்.

### வாழ்விற்கு...

எமது எதிராளிகளை மன்னித்து, அடுத்தவரோடு சமரசம் செய்வதில் நாம் எப்போதும் கருத்தாய் இருக்க வேண்டும். தீமைக்கு இட்டுச் செல்லக்கூடிய அனைத்து விடயங்கள் பற்றியும் நாம் கருத்தாய் இருக்க வேண்டும். எமது சிந்தனைகள் பற்றிய விழிப்பு எப்போதும் எமக்கு இருக்க வேண்டும். எம் சகோதரரை வெறுத்துக்கொண்டு பலிசெலுத்துவது பயனற்றது என்பதை நாம் எப்போதும் உணர்ந்து ஒப்புரவின் மக்களாக எம் சமூகத்தில், பங்குச் சமூகத்தில் வாழ்ந்து காட்டுவோம். வாழ்வு வளம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 – வெள்ளி – ஆனி 2008

1அர 19: 9, 11–16 திபா 27: 7–9, 13–14 மத் 5: 27–32

## தூய பதுவை அந்தோனியார்

'ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கெனவே அப்பெண்ணோடு விபசாரம் செய்தாயிற்று' (மத் 5: 28).

### சிந்தனைக்கு...

'விபசாரம் செய்யாதிருப்பாயாக' என்பது பத்துக்கட்டளைகளுள் ஒன்று. இங்கு இயேசு அதே கட்டளைக்கு ஆழமான விளக்கமும் அர்த்தமும் கொடுக்கின்றார். கடவுள் தொடக்கத்தில் ஆணையும் பெண்ணையும் படைத்து இருவரையும் திருமணம் எனும் புனித நிலைக்கு உயர்த்தினார். பெண் ஆணுக்குத் துணையாகப் படைக்கப்பட்டார் (காண். தொநூ 2: 18). திருமணத்தின் மூலமாக இணையும் இருவரும் ஒரே உடலாயிருப்பார்கள் (தொநூ 2: 23–24) என்று இறைவனே ஆணையிட்டார். எனவே திருமணம் இறைவனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஓர் புனித அருட்சாதனமாகும். இதனால் ஒரு ஆண், ஒரு பெண் என்பது விவிலிய தரும் போதனையாகும். எனவே ஆண்–பெண் உறவு ஓர் புனிதமான ஒன்று, அது திருமண உறவினுள் மட்டுமே நிறைவேற வேண்டும்.

இந்நிலையில் இறைவன் கொடுத்த இந்த சட்டத்தை மனிதன் தனது சுயநலத்தினால் மீறத் தொடங்க 'விபசாரம் செய்யாதிருப்பாயாக' எனும் கட்டளை கொடுக்கப்பட்டது. இயேசுவோ இந்த விபசாரம் எனும் பாவத்திற்குக் காரணமாயிருக்கக்கூடிய தீய இச்சை அல்லது தீய எண்ணமே தவறு என்று சொன்னார். உலகு சார்ந்த உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வச் செருக்கு ஆகியவை... உலகிலிருந்தே வருகின்றன (காண். 1யோவா 2: 16–17). விபசாரத்தில் ஒருவர் பாவத்தில் விழுவதோடு மட்டுமல்லாமல் அடுத்தவரையும் பாவத்தில் விழச் செய்கின்றார். எனவே அதற்குத் தடையாக வரக்கூடிய எதையும் விலக்கிவிடுவது மேலானது. ஏனெனில் திருமணம் என்பதும் திருமண உறவு என்பதும் இந்த உலகில் நாம் காணும் ஒன்று. நிலைவாழ்வில் இந்த நிலை இல்லை (காண். மாற் 12: 25).

### வாழ்விற்கு...

இன்று பத்திரிகை, சஞ்சிகைகள், தொலைக்காட்சி, சினிமா போன்ற ஊடகங்கள் ஒருவரை தீய இச்சைகளுக்கு இட்டுச் செல்லவல்லன. நாம் தெளிவாக இருந்து சோதனைகளை வென்றெடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 – சனி – ஆனி 2008

1அர 19: 19–21 திபா 16: 1–2, 5, 7–10 மத் 5: 33–37

## பேச்சு

"நீங்கள் பேசும்போது 'ஆம்' என்றால் 'ஆம்' எனவும் 'இல்லை' என்றால் 'இல்லை' எனவும் சொல்லுங்கள்" (மத் 5: 37).

### சிந்தனைக்கு...

ஆணையிடுதல் பற்றிய போதனை இன்று. எமது பேச்சு உண்மையுள்ளதாக இருக்க வேண்டும். எமது பேச்சு நேர்மையான, ஒளிவுமறைவில்லாத பேச்சாக இருக்கும்போது அது பல சிக்கல்களிலிருந்து எம்மைக் காக்கும். இவ்வாறு எமது பேச்சு நேர்மையானதாக இருக்கும்போது அங்கு பொய் ஆணையிடுவதற்கோ, கடவுள் பெயரால் ஆணையிடுவதற்கோ, ஏன், ஆணையிடுவதற்கே தேவையிருக்காது. இவ்வாறு ஆண்டவர் பெயரால் ஆணையிடுவது தவறானது என்று கூறுகிறார் இயேசு.

கடவுளின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே என்பது பத்துக்கட்டளைகளுள் ஒன்று (விப 20: 7). கடவுளின் பெயரை வீணாகப் பயன்படுத்துபவருக்குத் தண்டனையும் உண்டு. இயேசுவோ பொய் ஆணையிடுவது மட்டுமல்ல, ஆணையிடுவதே பாவம் என்கிறார். தூய யாக்கோபுவும் தனது கடிதத்தில் இதையே வலியுறுத்தினார் (காண். யாக் 5: 12). அன்று ஆணையிடுவது பரவலாக யூத மக்களிடையே இருந்த ஓர் வழக்கம். அன்றும் இன்றும் ஒருவர் ஒருவரில் நம்பிக்கை இழந்த சமூகம் தனது பேச்சில் உறுதி சேர்க்க ஆணையிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறது.

### வாழ்விற்கு...

இந்நிலையிலிருந்து விடுபட உண்மையின் மக்களாக நாம் மாற வேண்டும். ஒரு விடயத்தை நாம் கூறவேண்டுமானால் அதை நேராக, தெளிவாகக் கூறிவிடுவதே நல்லது. உண்மையிலிருந்து விலகி அதில் பலவற்றை சேர்த்து, திரித்து, மிகைப்படுத்தி, சிதைத்துக் கூறும்போது அடுத்தவர் எம்மில் நம்பிக்கை இழந்துவிடுவார்கள். இதனால் நாம் எதைக் கூற முயன்றாலும் ஆணையிடவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றோம். மாறாக, நாம் எப்போதும் உண்மையை மட்டும் பேசினால் அதை உணர்ந்துகொள்வோர் எம்மில் நம்பிக்கை வைத்து எமது வார்த்தைகளை ஏற்றுக்கொள்வார்கள். எனவே உண்மையின் மக்களாக வாழ்ந்து காட்டுவோம். அப்போது எமக்குள் நம்பிக்கை, வாழ்வு, அமைதி பிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 11ம் ஞாயிறு
## 15 – ஆனி 2008

விப 19: 2–6 திபா 100: 1–2, 3, 5 உரோ 5: 6–11 மத் 9: 36–10: 8

## இறைபராமரிப்பு

இறைவனின் ஆழமான பராமரிப்பு விவிலியத்தில் பல இடங்களில் பல வடிவங்களில் வர்ணிக்கப்படுவதை இன்றைய ஞாயிறு வாசகங்களில் நாம் காண்கிறோம். மக்கள் இறைவனைவிட்டு விலகிச் சென்றாலும் இறைவன் உலகின் மீது கொண்டிருந்த அன்பினால் இறுதிவரைக்கும் விசுவாசமாயிருந்து மக்களை நிலைவாழ்விற்கு அழைத்துச் செல்கின்றார். இயேசுவோ நல்லாயனாக இருந்து தனது மக்களின் ஆன்மீக விடுதலைக்காக தனதுயிரையும் கொடுத்த ஆழமான உண்மையை ஆராய்வோம்.

### எகிப்திலிருந்து விடுதலை

இஸ்ரயேல் மக்களால் அன்றும் இன்றும் மறக்க முடியாத ஓர் அனுபவம் அவர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற அனுபவமாகும். இந்த அனுபவத்தை மையமாக வைத்து இவர்கள் இறைவன் தம்மை ஓர் இனமாக ஆபிரகாம் முதல் அழைத்ததையும், எகிப்திய அடிமைத்தனையிலிருந்து விடுவித்ததையும், உடன்படிக்கைகளை செய்துகொண்டதையும் நினைவு கூர்ந்தனர். முதல் வாசகத்தில் இரண்டு முக்கிய விடயங்களைப் பார்க்கலாம்.

1. **இறைவனின் பராமரிப்பு:** இறைவன் தனது மக்களை கழுகுகளின் இறக்கைகளின்மேல் ஏந்தி தம்மிடம் வரச்செய்துள்ளார் எனக் வாசிக்கின்றோம் (விப 19: 4).

2. **உடன்படிக்கையின் நன்மைகள்:** தன் மக்களோடு உடன்படிக்கை செய்து கொண்ட இறைவன் அந்த உடன்படிக்கைக்கு விசுவாசமாக எப்போதும் இருந்துள்ளார். ஆனால் மக்களோ உடன்படிக்கையை மீறும் மக்களாகவே இருந்துள்ளனர். உடன்படிக்கை என்பது இருவர் செய்துகொள்ளும் ஒப்பந்தமாகும். இந்த சடங்கின் அடையாளமாக ஆடு அல்லது மாடு இரு துண்டுகளாக வெட்டப்பட்டுத் தரையில் பரப்பப்படும். அவற்றின் இடையே உடன்படிக்கை செய்துகொள்ளும் இருவரும் நடந்து செல்வர். உடன்படிக்கையை மீறினால் மீறுபவர் இந்த மிருகத்தைப் போல இரண்டாகத் துண்டிக்கப்படுவார் என்பதை இந்த சடங்கு உணர்த்துகின்றது. அதேபோல இறைவனும் மக்கள் உடன்படிக்கையை முறையாகக் கடைப்பிடித்தால் இறைவனின் தனிச்சொத்தாவார்கள் என்கிறார் முதல் வாசகத்தில். மக்கள் தவறியபோது அவர்களைத் தண்டித்தும் திருத்தினார் இறைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயனில்லா ஆடுகள்

இயேசு எளிமையானவர். யாதும் அவரை அணுக முடியும். அவரது அன்பு, அக்கறை, இரக்கம், பராமரிப்பு மக்களை அவரண்டை ஈர்த்தது. அவரது போதனைகளைக் கேட்டு வாழ்வுக்கு வழிகாட்டலைப் பெறவேண்டும், மனதில் அமைதி பெறவேண்டும் என்றும், அவரது சக்தியைப் பார்த்து நோய் நொடிகளிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்றும், சரீர, ஆன்மீக விடுதலை வேட்கையுடன் மக்கள் திரள் திரளாக அவரைத் தேடிவந்தனர். இவர்களது நம்பிக்கை, நிலை, தேவை அறிந்து இவர்கள் மீது இயேசு இரக்கம் கொண்டார். ஆயனில்லா ஆடுகள் போல அலைவதை அவர் பார்த்து, அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அறுவடைக்கு அனுப்பும்படி இறைவனிடம் மன்றாட தன் சீடரிடம் கூறினார் இயேசு (காண். மத் 9: 38).

இயேசுவின் இந்த பரிவு அவரது வாழ்வில் பல கட்டங்களில் பிரதிபலித்தது. 'நல்ல ஆயன் நானே' (யோவா 10: 14) என்று கூறிய இயேசு மக்களுக்காக தனதுயிரைக் கொடுத்துமுள்ளார். இவ்வாறு இயேசு தனது வாக்கு, வாழ்வின் மூலமாக நல்ல ஆயனாக மக்களின் ஆன்மீக விடுதலையில் கருத்தாயிருந்தார்.

## நாம் பாவிகளாய் இருந்தபோதே...

இயேசுவின் முழுமையான அர்ப்பணத்தை தூய பவுல் உரோமையருக்கு எழுதிய கடிதத்தில் தெளிவாக்குகின்றார்.

1. கிறிஸ்து நமக்காக தனதுயிரைக் கொடுத்தார். இது அவரது இரக்கத்தையும் உலகின் மீது அவர் கொண்டுள்ள அன்பையும் காட்டுகின்றது.

2. நாம் பாவிகளாக இருந்தபோதே எம்மைத் தண்டிக்கும் நோக்கத்துடன் செயல்படாமல் தனதுயிரைக் கொடுத்தும் எம்மை மீட்கும் நோக்கத்தோடு செயல்பட்டார்.

3. அவரது இரத்தத்தால் நாம் இன்று கடவுளுக்கு ஏற்புடையவர்களானோம்.

4. கடவுளோடு ஒப்புரவாகினோம். இதற்கு கிறிஸ்துவின் மரணமே உதவியாக அமைந்தது.

## வாழ்விற்கு...

கிறிஸ்துவின் மரணம் தரும் நன்மைகளை இன்று அனுபவிக்கும் நாம் அவரது உண்மைச் சீடர்களாக அவரது பணிதொடர விருப்போடு முன்வர வேண்டும். கிறிஸ்துவின் இரக்கம், அன்பு, பராமரிப்பு, மன்னிப்பு இன்று எம்மில் வெளிப்படும்போது அவரது நல்ல செய்தியைத் தாங்கியவர்களாக நாம் வாழ்கிறோம் என்பது உறுதி. செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1அர 21: 1–16 திபா 5: 1–2, 4–6 மத் 5: 38–42

## அன்பு

'தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம்,... கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் காட்டுங்கள்,... உங்கள் மேலுடையையும் எடுக்க விட்டுவிடுங்கள்,... இரு கல் தொலை செல்லுங்கள்' (காண். மத் 5: 38–41).

### சிந்தனைக்கு...

கிறிஸ்தவத்தில் நன்னெறியின் ஒரு பகுதி இன்றைய நற்செய்தி எனலாம். 'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' என்பது அன்று யூத இனத்தால் மட்டுமல்ல, அண்டை நாடுகளிலும் வழக்கமாக இருந்த முறையாகும். அன்று நாகரீகம் முழுமையாக வளராத நிலையில் மக்களின் மனநிலை மிகவும் கடினமான ஒன்றாகவே இருந்தது. எனவே இவர்களை ஓரளவுக்கு மாற்றவேண்டும் எனும் நோக்கோடு இந்த கட்டளைகள் கொடுக்கப்பட்டன. 'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், கீறலுக்குக் கீறல் என நீ கொடுப்பாய்' விப 21: 24–25). ஏனெனில் ஒருவர் தனது பகையாளிக்கு சிறிய காயத்தை ஏற்படுத்தினாலே அவர் பதிலாக கொலைசெய்துவிடுவது வளமையாக இருந்து வந்தது.

பழிவாங்கத் துடிக்கும் மனநிலையை ஓரளவு கட்டுப்படுத்துவதாக அமைந்த இச்சட்டத்தை கிறிஸ்து மாற்றுகின்றார். பழிவாங்கும் பகையுணர்ச்சியை மக்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். இரண்டு மடங்காகப் பழிவாங்கத் துடிப்பதிலிருந்து ஒருவர் தனது மனதை மாற்றி இரண்டு மடங்காக அன்பு செய்யத் தொடங்க வேண்டும். இதையே இயேசுவும் தனது வாழ்நாட்களில் செய்துகாட்டினார். சிலுவையில் இறக்கும்போதும் தனக்கு எதிராக செயல்பட்டவர்களை மன்னிக்கும்படி தந்தையிடம் மன்றாடினார்.

### வாழ்விற்கு...

'ஒருவருக்கொருவர் அன்பின் அடிமைகளாக இருங்கள்' (கலா 5: 13) என்றார் பவுல். இன்று நாமும் அன்பின் அடிமைகளாக, ஒப்புரவின் மக்களாக, பொறுமையின் சின்னங்களாக வாழ்ந்துகாட்ட வேண்டும். பகைமைக்குப் பதிலாக அன்பைக் கொடுக்க நாம் பக்குவப்பட்டால் அதனால் பல நன்மைகளை நாம் சாதிக்கலாம். இயேசுவின் அன்பையும் மன்னிப்பையும் நாம் எப்போதும் எம் வாழ்வில் பிரதிபலிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 – செவ்வாய் – ஆனி 2008

1அர 21: 17–29 திபா 51: 1–4, 9, 14 மத் 5: 43–48

### பகைவருக்கும் அன்பு

'உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்து வோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்' (மத் 5: 44).

**சிந்தனைக்கு...**

அன்பு செய்வோருக்குப் பதில் அன்பு செய்வது இலகுவானது, நியாயமானது. ஆனால் பகைவருக்கும் அன்பு செய்வது கிறிஸ்தவ வாழ்வில் உச்சமாகின்றது. அன்பு எனும் சொல் பல வடிவங்களைப் பெறுகின்றது.

1. பெற்றோர்–பிள்ளைகள் அன்பு. இது இயல்பானது, இலகுவானது.
2. இளைஞன்–மங்கை இவர்களுக்கிடையே உருவாகும் அன்பு.
3. உணர்ச்சி தழுவிய ஆர்வத்தோடு கூடிய அன்பு.
4. அடுத்தவரின் நலவாழ்வை மட்டும் கருத்தில் கொண்டு அவர்மீது காட்டும் தூய்மையான, சுயநலமற்ற அன்பு. இதை 'ஆகப்பே' என்கிறோம். அடுத்தவர் அன்பு செய்தாலும் செய்யாவிட்டாலும், எதிர்த்தாலும், பழிவாங்கினாலும், அவமானப்படுத்தினாலும், ஏமாற்றினாலும் இந்த அன்பு மாறாது. அவர்களின் நன்மையை மட்டுமே இந்த அன்பு குறியாகக் கொண்டிருக்கும்.

கிறிஸ்தவ அன்பு என்பது நாம் தெரிந்துகொண்டவர்களை (நண்பர் நண்பிகள், நமக்கு நன்மைகள் செய்வோர்) அன்பு செய்வது மட்டுமல்ல, மாறாக, எமது பராமரிப்பில் கொடுக்கப்பட்டிருப்போரையும் (பெற்றோர், குடும்பத்தவர், அயலவர்) குறையின்றி அன்பு செய்வதாகும். இவ்வாறு கிறிஸ்தவ அன்பானது உறவுகள், பகைமைகள், சுயநலங்களையும் தாண்டி எவரையும் எந்நிலையிலும் அன்பு செய்ய அழைக்கின்றது. நாம் விரும்பாதவர், நம்மை விரும்பாதவர்களுக்கும் காட்ட வேண்டிய அன்பையே எமது ஆண்டவர் குறிப்பிடுகின்றார்.

**வாழ்விற்கு...**

அன்பிற்கு ஒரே உதாரணம், நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரோனை உதிக்கச் செய்யும் இறைவனாகும். நாம் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் தண்டனை கொடுக்க இறைவன் தொடங்கினால் உலகில் யாரும் நிலைக்க முடியாது. இறைவனின் அன்பை நாம் நாளாந்தம் சுவைக்கின்றோம். அதே அன்பை நாம் வாழ்ந்துகாட்ட வேண்டாமா? இதுவே எமது ஒரே சவாலாக, இலக்காக இருக்கட்டும். வாழ்வு நலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 – புதன் – ஆனி 2008

2அர 2: 1, 6–14 திபா 31: 19, 20, 23 மத் 6: 1–6, 16–18

## வெளிவேடம்

'நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்' (மத் 6: 3).

### சிந்தனைக்கு...

தர்மம் செய்தல், செபித்தல், நோன்பிருத்தல் யூத சமூகத்தில் இருந்த முக்கிய பண்புகளாகும். பொருள் சேர்ப்பதைவிட பிச்சையிடுவது மேலானது என்கிறது விவிலியம் (காண். தோபி 12: 8). பொதுவாக மனிதர்கள் சுயநல நோக்கோடு நன்மைகள் செய்யாவிட்டாலும் அவர்கள் கைமாறு கருதியே நற்செயல்களைச் செய்கின்றனர். யூதர்களோ பிச்சையிடுவதையும் நீதிமான்களாகக் கருதப்படுவதையும் ஒரே கண்ணோட்டத்தோடு பார்த்தனர். இது கிறிஸ்தவர் மத்தியில் இருக்கக்கூடாது என்பது இயேசுவின் போதனை.

**1. தர்மம் செய்யும்போது...** தம்பட்டம் வேண்டாம், அங்கீகாரம் வேண்டாம். மக்களிடமிருந்து வரக்கூடிய புகழ்ச்சியும் அங்கீகாரமும் நிலையற்றது. மாறாக, அனைத்தையும் அறியும் இறைவனே உண்மையான அங்கீகாரத்தைத் தரவேண்டும்.

**2. செபிக்கும்போது...** மக்களது பாராட்டை எதிர்பார்க்க வேண்டாம். யூதர்கள் ஒரு நாளில் பல தடவைகள் செபித்தனர். குறிப்பிட்ட நேரம் வந்ததும் அவர்கள் எந்த இடத்தில் இருந்தாலும் அந்த இடத்தில் நின்றோ, முழந்தாளிட்டோ செபித்தனர். ஆனால் காலப்போக்கில் யூத ராபிகளின் செபம் கடவுளை நோக்கியதாக இராமல் மனிதரை நோக்கியதாக இருந்தது. இதையே இயேசு தவறென சுட்டிக்காட்டினார். இவர்கள் தங்கள் கைமாறு பெற்று விட்டனர். மாறாக, தனிமையில் அனைத்தையும், அனைத்து உள்ளங்களையும் அறியும் இறைவனிடம் பேசுவதே மேலானது.

**3. நோன்பு இருக்கும்போது...** முகவாட்டமாக இருக்க வேண்டாம். இது மக்களுக்குத் தெரியவேண்டியதில்லை. நோன்பு இருந்தாலும் நாளாந்த செயல்பாடுகள் நடைபெறட்டும். அனைத்தையும் அறியும் இறைவன் எமக்கு கைமாறு செய்வார்.

எமது வாழ்விலும் தர்மம், செபம், நோன்பு மூன்றும் பின்னிப் பிணைந்துள்ளன. இவற்றை நாம் கடைப்பிடிக்கும்போது மனிதரின் புகழ்ச்சியையா எதிர்பார்க்கின்றோம்? தெளிவாயிருப்போம். இறைவனின் உள்ளத்தை மகிழ்விப்பதை இலக்காகக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 - வியாழன் - ஆனி 2008

சீஞா 48: 1-15 திபா 97: 1-7 மத் 6: 7-15

## செபம்

'மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்' (மத் 6: 14).

### சிந்தனைக்கு...

செபம் இட்டுச் செல்லும் வாழ்வு பற்றிய முக்கிய போதனையாக இன்றைய நற்செய்தி அமைந்துள்ளது. இயேசுவே ஓர் மாதிரி செபத்தை தனது சீடருக்குக் கற்றுக்கொடுத்தார். அதில் பல அம்சங்கள் அடங்கியுள்ளன. கிறிஸ்தவ மறையுண்மைகள் பல அடங்கியுள்ளன எனலாம். ஆயினும் நற்செய்தியில் இரண்டு முக்கிய கருத்துகளை இந்த சிந்தனையில் பார்ப்போம்.

**1. செபிக்கும் முறை:** பிற இனத்தவரைப்போல பிதற்ற வேண்டாம். செபம் அடிப்படையில் இறை-மனித உள்ளங்களை இணைக்கின்றது. இறை-மனித உள்ளங்கள் இணையும்போது அங்கு வார்த்தைகள் முடங்கிவிடுகின்றன. மௌனம் பேசத்தொடங்கிவிடும். ஆனால் மக்கள் தமது செபங்களையும் செபிக்கும் விதத்தையும், செபிக்கும்போது ஒவ்வொரு அசைவுகளையும் பார்த்து பிரமிக்க வேண்டும், பாராட்ட வேண்டும் என்று குறுகிய கண்ணோட்டத்தோடு செயல்படுபவர்கள் செபிக்கும்போது வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போவார்கள். மாறாக, வார்த்தைகள் பல பாவித்தாலும், மௌனம் காத்தாலும் இறை-மனித உள்ளங்கள் ஒன்றிக்கின்றனவா என்பதே முக்கியமானது.

**2. மன்னிக்கும் பண்பு:** செபம் எம்மை இறைவனோடு நிலைத்திருக்கச் செய்தாலும் அது எம்மை வாழ்விற்கு அழைத்துவர வேண்டும். இறையன்பை செபத்தில் அனுபவித்த ஒருவர் அதை வாழ்ந்துகாட்ட வேண்டும். கிறிஸ்தவ வாழ்வில் ஒப்புரவு மிக முக்கியமானதாகும். மனிதருக்கிடையே வரும் முரண்பாடுகள் பிரிவிலேயே முடிந்துவிடும். செப அனுபவம் பெறும் ஒருவரில் மன்னிக்கும் பண்பு இருக்கும்போது அது நல்ல உறவுகளுக்கு இட்டுச்செல்லும்.

### வாழ்விற்கு...

இன்று நாமும் செபிக்கின்றோம். எமது சூழ்நிலை, நேரம் போன்றவற்றை அடிப்படையாக வைத்து தனித்தோ, குழுவாகவோ செபத்தில் நாளாந்தம் ஈடுபடுகின்றோம். ஆயினும் இதில் இறை-மனித உறவு, அனுபவம் எந்தளவிற்கு உள்ளது என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். செபத்தில் இறையனுபவம் நிறைவாகப் பெற்று ஒப்புரவின் மக்களாக வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 – வெள்ளி – ஆனி 2008

2அர 11: 1–4, 9–18, 20 திபா 132: 11–14, 17–18 மத் 6: 19–23

### செல்வம்

'உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்' (மத் 6: 21).

### சிந்தனைக்கு...

பொருட்செல்வத்தால் மனிதர் அன்றும் இன்றும் கவரப்பட்டு நிலையான செல்வத்தை இழந்த சம்பவங்கள் சரித்திரத்தில் பல உள்ளன. உலகில் மனிதருக்கு செல்வம் சேமிக்க வேண்டிய அவசியம் இருந்தாலும் அவை அழியக்கூடியன என்றும் அழியாத செல்வத்தைத் தேடியே அனைவரது இலக்கும் இருக்க வேண்டும் எனவும் இயேசு நற்செய்தியில் வலியுறுத்து கின்றார் இயேசு. பொன், மண், பெண் ஆசையால் மனிதன் கவரப்படுகின்றான். அவற்றை சேமிப்பதில் தனது நேரம், சக்தி, அறிவை விரயம் செய்கின்றான். இந்த முயற்சியில் அடுத்தவரோடு போட்டி, முரண்பாடுகள், சண்டை என்று பல துன்பங்களும் வந்துவிடுகின்றன. இதன் விளைவாக உறவு முறிவுகள், மரணம், மனப்பாரங்களும் சேர்ந்துவிடுகின்றன. கடைசியில் மரணத்திற்கு முன்பாக மனிதன் தனது முயற்சிகள் பற்றிப் பெருமைப்படுவதற்கு எதுவும் இருக்காது. அறிவற்ற செல்வனின் உவமை (காண். லூக் 12: 13–21), செல்வரான இளைஞர் (மத் 19: 16–24) போன்றன இயேசு முன்வைக்கும் நல்ல உதாரணங்களாகும்.

இவ்வாறு உலக செல்வத்தில் நாட்டம் இருக்கும்போது ஒருவரது சிந்தனை, சக்தி, அறிவு, முயற்சிகள் எல்லாம் அதிலேயே விரயமாகிவிடும். மாறாக இயேசு செல்வந்தரான இளைஞருக்கு கொடுத்த பதில் பல உண்மைகளை தெளிவாக்குகின்றது. 'நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்' (மத் 19: 21) என்றார்.

### வாழ்விற்கு...

பொருள் சேர்ப்பது, எதிர்காலத்திற்குத் தேவையானதை சேமிப்பது தன்னிலே தீமையானதல்ல. ஆனால் இது ஒன்றே எனது வாழ்வின் இலட்சியமாக இருக்கும்போது அது எனக்கே ஆபத்தாகிவிடும். எனவே எனது உள்ளம் எங்குள்ளது? உலக செல்வங்களிலா அல்லது இறைவனிலா என்பதில் நான் தெளிவாக இருக்க வேண்டும். இறைவனே எனது எல்லாமாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2குறி 24: 17–25 திபா 89: 3–4, 28–29, 30–33 மத் 6: 24–34

## கவலை

'கவலைப்படுவதால் உங்களில் எவர் தமது உயரத்தோடு ஒரு முழம் கூட்ட முடியும்?... அனைத்திற்கும் மேலாக அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள்' (மத் 6: 27, 33).

### சிந்தனைக்கு...

கவலைப்படாமல் மனித வாழ்வு இல்லை எனலாம். கவலை அவசியம். ஆனால் அது எல்லை கடந்து போனால் அதனால் பயன் என்ன என்று சிந்திக்கத் தூண்டுகின்றது இன்றைய நற்செய்தி.

கவலைப்படுவதால் வரும் விளைவு என்ன? அது எமது உடல்நலனைப் பாதிக்கும். எமது உற்பத்தித்திறனைக் குறைக்கும். அடுத்தவரோடு எமக்குள்ள உறவையும் பாதிக்கும். இறைவனில் நம்பிக்கையையும் இழக்கச் செய்துவிடும். இறைவனே எம்மைப் படைத்தவர். அவரே எமக்கு உடல், உயிர் அளித்து பாதுகாக்கின்றார். தன்கையில் அவர் எம்மைப் பொறித்துள்ளார். அவரே எமக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றையும் தந்து எம்மை எப்போதும் வழிநடத்துவார் என்பது உறுதி.

கவலையைப் போக்க இயேசு உதாரணமாகத் தருவது வானத்துப் பறவைகளும் காட்டுமலர்ச் செடிகளுமாகும். இவை இறைவனை எப்போதும் நம்பியிருக்கின்றன. ஆனால் கடவுளே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் என்று சோம்பித்திரிவதில்லை. அவை நாளாந்த கடமைகள், பணிகளில் ஈடுபடுகின்றன. நாமும் எமது கவலைகளைத் தவிர்த்து இறைவனில் நம்பிக்கை வைக்கவேண்டும். அதேபோல எமது நாளாந்த கடமைகளை பொறுப்போடு நிறைவேற்றவும் வேண்டும்.

### வாழ்விற்கு...

அனைத்திற்கும் மேலாக இறைவனின் ஆட்சிக்கும் அவருக்கு விருப்ப மானவற்றிற்கும் முதலிடம் கொடுத்து செயல்பட வேண்டும். 'விண்ணகத்தில் இருக்கும் எங்கள் தந்தையே, உமது நாமம் போற்றப்படுக, உமது அரசு வருக...' (காண். மத் 6: 9,10) என்பதே எமது செபமாக இருக்க வேண்டும். நாம் எமது கவலைகளை அவரிடம் கொடுத்துவிட்டு அவரது புகழுக்காக வாழ முன்வருவோம். இறையரசை நாடுவோம், அதில் இடம் பிடிக்க ஏற்ற வாழ்வு வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 12ம் ஞாயிறு

## 22 – ஆனி 2008

எரே 20: 10–13   திபா 69: 7–9, 13, 16, 32–34   உரோ 5: 12–15   மத் 10: 26–33

## நம்பிக்கை

இறைவனின் பணியில் வரக்கூடிய துன்பங்கள், போராட்டங்கள் பற்றியும் அவற்றையும் தாண்டி இறைவனில் எமக்கு இருக்க வேண்டிய நம்பிக்கை பற்றியும் இன்றைய ஞாயிறு வாசகங்கள் குறிப்பிடுகின்றன. இறைபணியின்போது பல துன்பங்களை அனுபவித்த இறைவாக்கினர் பலர். நிராகரிப்பு, தனிமை, ஏமாற்றம், அவதூறு, கல்லெறி என்று பலவித துன்பங்களை இவர்கள் எதிர்கொண்டாலும் இறைவனில் இருந்த நம்பிக்கையை ஒருபோதும் கைவிடவில்லை. கடவுளே தம்மை அழைத்து இந்த சிறப்பான பணிக்கென அனுப்பியுள்ளார் என்பதில் இவர்கள் எப்போதும் உறுதியாக இருந்தனர். இவர்களுள் இறைவாக்கினர் எரேமியா யூத மக்கள் கையில் பல இன்னல்களை அனுபவித்தவர்.

### எரேமியாவின் குமுறல்

இஸ்ரயேலர் பாபிலோனியப் பேரரசை எதிர்க்க எகிப்துடன் கூட்டுச் சேர்ந்ததை எரேமியா கடுமையாக எதிர்த்தார். பாபிலோனிய அரசால் எருசலேமும் திருக்கோவிலும் அழிந்ததைப் பார்த்தார். இவர் மென்மையான உள்ளம் கொண்டவர். ஆயினும் கடுமையான செய்தியைத் தாங்கிவந்தார். மக்கள் இவரது செய்தியையும் இவரையும் எதிர்த்தனர். சிறையில் அடைத்தனர், பாழும் கிணற்றில் தள்ளிவிட்டனர். இதனால் இவர் பல துன்பங்களுக்கும் ஆளானார். 'துன்புறும் மனிதர்' என்று பல பகுதிகள் இவரை வர்ணிக்கின்றன. ஏனைய இறைவாக்கினரைவிட இவரே அதிகம் துன்புற்றார் எனலாம். இவரோ தனது கஷ்டங்களை உள்ளம் திறந்து இறைவனிடம் கூறினார். 'தாய் வயிற்றில் நான் இருந்தபோதே, அவள் ஏன் என்னைக் கொல்லவில்லை?' (எரே 20: 17) என்று குமுறினார்.

### எரேமியாவின் நம்பிக்கை

எரேமியாவின் முறைப்பாடுகள் நியாயமானவை. ஆயினும் அவர் இறைவனில் நம்பிக்கை இழக்கவில்லை. 'ஆண்டவர் வலிமை வாய்ந்த வீரரைப்போல என்னோடு இருக்கின்றார்' (20: 11). இவ்வாறு இறைவனில் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினார் எரேமியா. அவரது நம்பிக்கை இன்றும் எமக்கு பலமாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீடர்களுக்கு வரும் துன்பங்கள்

பணிக்கென அனுப்பப்படுவோர் பல துன்பங்களுக்கும் ஆளாக வேண்டிவரும் என்று நற்செய்தியில் எச்சரிக்கின்றார் இயேசு. ஆயினும் அஞ்ச வேண்டாம் என்று நம்பிக்கையையும் தருகின்றார். உண்மைக்குச் சான்று பகர வந்தவர் இயேசு. அவரது பணியைத் தொடரவேண்டியவர்கள் அவரது சீடர்கள். இயேசுவைவிட இவர்களுக்கு வரும் துன்பங்கள் கொடியது. ஆயினும் இப்பணியில் வரக்கூடிய எதிர்ப்புகள், தடைகளுக்கு மத்தியிலும் இவர்கள் தமது வார்த்தை, வாழ்வின் மூலமாக உண்மையாகிய இயேசுவிற்குச் சான்று பகர வேண்டும்.

'ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்' என்று வலிமையூட்டுகின்றார் இயேசு. அதேபோல இறைவனின் பார்வையில் உயிரினங்களையும்விட மனிதர் மேலானவர்கள். அதுவும் தன் பணியை நிறைவேற்றச் செல்லும் சீடர்களை அவர் பாதுகாக்காமல் விடமாட்டார் எனும் நம்பிக்கை இயேசுவின் போதனைகளிலிருந்து எழுகின்றது.

## இயேசுவே உதாரணம்

இயேசு பற்றிய தூய பவுலின் அனுபவம் மிக ஆழமானது. தொடக்கத்தில் கிறிஸ்தவர்களை எதிர்த்தவர் பவுல். ஆயினும் அழைப்புப் பெற்றபின்பு கிறிஸ்து அனுபவம் மிகப்பெற்றவராக கிறிஸ்துவின் வருகையின் நோக்கத்தை உரோமையருக்கு எழுதிய கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இது ஆழமான மறையுண்மை. ஆதாமினால் பாவம் உலகில் நுழைந்தது. புதிய ஆதாமாகிய கிறிஸ்துவினால் அதே உலகிற்கு மீட்புக் கிடைத்தது என்பது பவுலின் விசுவாசம். கிறிஸ்து என்றாலே அருள்பொழிவு பெற்றவர், அர்ச்சிக்கப்பட்டவர் என்பது பொருள். இந்த மெசியா, கிறிஸ்து உலகை மீட்க உலகிற்கு வந்து, பாடுகள் பல பட்டு, சிலுவையை ஏற்று, சிலுவை மரணத்தையும் தழுவி தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினார்.

## வாழ்விற்கு...

1. கிறிஸ்து தனது துன்பங்களின்போது தந்தையோடு இணைந்திருந்தார். தந்தையாம் இறைவனிடமிருந்து அனைத்து சக்தியையும் பெற்றார்.
2. தூய பவுல் தனது துன்பங்களின்போது கிறிஸ்துவிடமே வந்தார்.
3. நாமும் இன்று உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ முயலும்போது வரும் துன்பங்களை எதிர்கொள்ள கிறிஸ்துவின் ஆசீரையே வேண்டுவோம். அவரோடு எப்போதும் இணைந்திருந்து வெற்றிகொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 – திங்கள் உ ஆனி 2003

2அர 17: 5–8, 13–15, 18 திபா 60: 1–3, 10–12 மத் 7: 1–5

### தீர்ப்பு

'பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள். அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள்' (மத் 7: 1).

**சிந்தனைக்கு...**

இவ்வுலகில் மற்றவர்கள் பற்றித் தீர்ப்புக் கொடுக்காதவர்களோ, தீர்ப்பு கொடுக்கப்பட்டதால் பாதிக்கப்படாதவர்களோ யாரும் இல்லை எனலாம். ஒருவருக்குத் தீர்ப்பிடுவது இலகு. ஆனால் அவரைப் புரிந்துகொண்டு உதவுவது கடினமானது. எடுத்த எடுப்பிலேயே நாம் தீர்ப்புக் கொடுத்துவிடலாம். அது உள்ளத்தளவில் அல்லது வார்த்தைகளில் அமையலாம். ஆனால் ஒருவரது நிலையறிந்து அவரைப் புரிந்துகொள்ள நேரம் எடுக்கும், சக்தியும் விரயமாகும்.

சூழ்நிலைகள், குடும்பப் பின்னணிகள், அனுபவங்கள், கல்வி, கலாச்சாரம், மனநிலை, இறைநம்பிக்கை, அர்ப்பணம் என்று மனிதர் ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றனர். இவற்றை நாம் கருத்திற்கொள்ளாது ஒருவரைத் தீர்ப்பிடும்போது எமது தீர்ப்பு தவறாகிவிடும்.

அதேபோல நாமும் அடுத்தவரால் தீர்ப்பிடப்படும்போது எமது மனமும் புண்படும். எனவே அனைத்துச் செயல்களுக்கும் பொது விதியாகக் கொண்டிருக்க வேண்டிய பாடத்தை இயேசுவே தருகின்றார். 'நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்' என்றார்.

**வாழ்விற்கு...**

அன்பு செய்வதில் வேகமாகவும், தீர்ப்பிடுவதில் மெதுவாகவும் செயல்படுவோம். மேலாக, அடுத்தவரைப் புரிந்துகொள்ள நாம் முற்படும்போது, அவர்களது செயல்களின் பின்னணிக்குச் சென்று நாம் அச்செயல்களுக்கான காரணங்களை திறந்த மனதோடு அறிய முற்படும்போது எமது முடிவுகள், தீர்ப்புகள் நீதியானவையாகவும் சரியானவையாகவும் அமைந்துவிடும். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணைத் தீர்ப்பிட யூதத் தலைவர்கள் இயேசுவிடம் வந்தபோது, 'உங்களுள் பாவமில்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்' என்றார் இயேசு. எனவே எம்மிடமுள்ள கறைகளைப் போக்குவதில் எப்போதும் கருத்தாயிருப்போம். பின் அடுத்தவரில் பிழைகண்டால் நல்மனதோடு சகோதர அன்போடு அவர்களை அணுகி (காண். மத் 18: 15–17) அவர்களைத் திருத்தப் பார்ப்போம். அப்போது உறவு வளரும், வாழ்வு வளம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 – செவ்வாய் – ஆனி 2008

எசா 49: 1–6 திபா 139: 1–3, 13–15 திப 13: 22–26 லூக் 1: 57–66, 80

# தூய திருமுழுக்கு யோவான் பிறப்புப் பெருவிழா

'இக்குழந்தையின் பெயர் யோவான்' (லூக் 1: 63).

## சிந்தனைக்கு...

திருமுழுக்கு யோவான் இயேசுவிற்கு முன்னோடியாக வந்தவர். அவரது பிறப்பைச் சுற்றி நடைபெற்ற சம்பவங்கள் எமக்கு இன்று தரும் பாடம் என்ன என்பதை தியானிப்போம்.

**1. செக்கரியாவிற்கு வந்த அழைப்பு:** செக்கரியா அழைப்புப் பெற்றபோது அதன் அடையாளமாக அவர் பேசமுடியாதிருந்தார். இதைப் பார்த்த மக்கள் இறைவன் தம்மத்தியில் செயலாற்றுகின்றார் என்பதை உணர்ந்துகொண்டனர்.

**2. மரியாவிற்கு வானதூதர் செய்தி:** இயேசுவின் பிறப்பு பற்றிய செய்தியின் முடிவில் எலிசபெத் கருத்தரித்திருக்கிறார் என்ற செய்தி அடையாளமாகக் கொடுக்கப்பட்டது. மரியா எலிசபெத்தைச் சந்தித்தபோது மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபோது அவரது வயிற்றில் குழந்தை அக்களிப்பால் துள்ளியது. இவ்வாறு மரியா தனது அழைப்பையும், எலிசபெத்து தனது நிலையையும் அறிந்துகொண்டனர்.

**3. குழந்தைக்குப் பெயர் வைத்தல்:** குழந்தைக்குப் பெயர் வைக்கும் சடங்கில் எதிர்பாராத விதமாக பெயர் உறுதிசெய்யப்பட்டது, செக்கரியாவின் வாய் திறந்து நா கட்டவிழ்ந்தது. இதைப் பார்த்த உறவினர்கள் இறைவனின் செயலை உணர்ந்து அவரைப் புகழ்ந்தனர்.

இவ்வாறு திருமுழுக்கு யோவானின் பிறப்பு பல செய்திகளைத் தர அவரது வாழ்வும் சிறந்த உதாரணம் மிக்க வாழ்வாகின்றது.

1. பாலைநில வாழ்வு, போதனை.
2. ஏரோது மன்னரது ஒழுக்கக்கேடான வாழ்வைத் துணிந்து கண்டித்தது.
3. தலை வெட்டப்பட்டு இறந்தது.

எனவேதான் இயேசுவும் திருமுழுக்கு யோவானைப் பற்றிக் கூறும்போது 'மனிதராய்ப் பிறந்தவர்களுள் யோவானைவிடப் பெரியவர் ஒருவருமில்லை. ஆயினும் இறையாட்சிக்கு உட்பட்டோருள் மிகச் சிறியவரும் அவரினும் பெரியவரே...' (லூக் 7: 28) என்றார்.

இன்று திருமுழுக்கு யோவானைப் போல அடுத்தவருக்கு இயேசுவை அறிமுகம் செய்ய வேண்டிய கடமையும் பணியும் எமக்குண்டு. உணர்ந்து எமது வாக்கு, வாழ்வின் மூலம் அதை நிறைவேற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 - புதன் - ஆனி 2008

2அர 22: 8-13, 23: 1-3 திபா 119: 33-37, 40 மத் 7: 15-20

## போலிகள்

'நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும். கெட்ட மரம் நச்சுக் கனிகளைக் கொடுக்கும்' (மத் 7: 17).

### சிந்தனைக்கு...

போலி இறைவாக்கினர்களைக் குறித்து எச்சரிக்கிறார் இயேசு. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இறைவனால் அழைக்கப்பட்டு மக்களிடம் அனுப்பப்பட்ட இறைவாக்கினர் இருந்தாலும் போலி இறைவாக்கினரும் காலத்துக்குக் காலம் தோன்றி தமது சுய இலாபத்திற்காக செயல்படத் தொடங்கினார்கள். இவர்கள் மக்களை தவறாக வழிநடத்தினர். ஆபத்துகள் வந்தபோது இவர்களை மக்களே இனம்கண்டுகொள்வர். "அமைதியே இல்லாதபொழுது, 'அமைதி, அமைதி' என்று கூறி என் மக்களுக்கு ஏற்பட்ட காயத்தை மேலோட்டமாகவே குணப்படுத்தினர்" (எரே 6: 14) என்கிறார் ஆண்டவர். இறைவனின் கோபம் இவர்களைத் தொடும் (காண். எரே 29: 21-22) எனும் எச்சரிக்கையையும் காணலாம். இவ்வாறு பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மட்டுமல்ல, இயேசுவின் காலத்திலும் யூதத் தலைவர்கள் (பரிசேயர், சதுசேயர், யூத குருக்கள்) பலர் தமக்காகவே வாழ்ந்து வந்தனர். இவர்கள் மக்களை இறைவனிடம் அழைத்து வரவேண்டும் என்பதில் கருத்தாய் இருக்கவில்லை. இவர்களை மக்கள் இனம்கண்டு விலகிநிற்க வேண்டும் என்கிறார் இயேசு. இவர்கள் வெறும் போலிகளாக மட்டுமல்ல, ஓநாய்கள்போல மக்களுக்கு ஆபத்தாகவும் வரக் கூடியவர்கள் என்பதும் இயேசுவின் எச்சரிக்கையில் தெளிவு.

இவர்களது செயல்களைக் கொண்டே இவர்களை இனம்கண்டு கொள்ளலாம் என்றும் இயேசு குறிப்பிட்டார். இவர்களுக்குத் தண்டனை நிச்சயம் உண்டு.

### வாழ்விற்கு...

இன்று நாமும் ஏதோவொரு வகையில் பொறுப்புள்ளவர்களாக தலைவர்களாக இருக்கின்றோம். நாமும் போலிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோமா? அல்லது இயேசுவில் வாழ்ந்து மக்களை முறையாக வழிநடத்துகின்றோமா? குடும்பம், சமூகம், பங்கு என்று எமது பொறுப்பு, கடமைகளை உணர்ந்து அழைப்புக்கேற்ப செயல்பட முன்வருவோம். அப்போது இறைவனின் ஆசீரையும், வழிகாட்டலையும் நாம் உணர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 – வியாழன் – ஆனி 2008

2அர 24: 8–17 திபா 79: 1–5, 8–9 மத் 7: 21–29

### செயல்

"என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை... தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்" (மத் 7: 21).

### சிந்தனைக்கு...

வார்த்தைக்கும் வாழ்வுக்கும் உள்ள வித்தியாசத்தை இன்றைய நற்செய்தியில் இயேசு தெளிவாகக் காட்டுகின்றார். மனிதரின் புறச்செயல்களை மட்டுமல்ல, உள்ளங்களின் சிந்தனைகளையும் அறிபவர் ஆண்டவர். எமது செயல்களில் அன்பை வெளிப்படுத்தாமல் உதட்டளவில் 'ஆண்டவரே' என்றால் நாம் எம்மைச் சுற்றியிருப்பவர்களை ஏமாற்றலாம். ஆனால் இறைவனை ஏமாற்ற முடியாது. எனவேதான் 'என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே விண்ணரசு செல்வார்' என்று குறிப்பிட்டார் இயேசு.

இறைவாக்குகளை மனனம் செய்து ஒப்புவிப்பதன் மூலமாகவோ, செபம் செய்வதில் வல்லவராக இருப்பதாலோ, வழிபாடுகளை கவர்ச்சிமிக்க வகையில் நடாத்துவதாலோ ஒருவர் இறைவனின் உள்ளத்தை குளிரச் செய்ய முடியாது. இறைவனின் வாக்கின்படி வாழ்ந்துகாட்டும்போதே இறைவனின் அன்பைப் பெறலாம். 'மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்' என்றார் இயேசு (மத் 25: 40). வாழ்ந்து காட்டலின் முக்கியத்துவம் இதிலிருந்து தெளிவாகின்றது.

இவ்வாறு ஆண்டவரில் வாழ்பவர் பாறைமீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பிடுகின்றார் இயேசு. உமது வாக்கின்படியே எனக்கு ஆகட்டும் என்று இறையழைத்தலுக்குப் பணிந்த மரியா எமக்கு உதாரணமாகின்றார்.

### வாழ்விற்கு...

இறைவனில் எமக்கு அசையாத நம்பிக்கை இருக்கலாம். அந்த நம்பிக்கை வாழ்வாகின்றதா? எமது வாக்கிற்கும் வாழ்விற்கும் தொடர்புண்டா என்பதில் நாம் எப்போதும் தெளிவாக இருக்க வேண்டும். ஆண்டவரில் வாழ்கின்றோமா? ஆம் என்றால் நாம் ஆண்டவரை எமது வாழ்வில் தாங்கிச் செல்கின்றோமா? 'கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே இனி வாழ்வது நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்' (கலா 2: 19–20) என்று தூய பவுல்போல நாமும் கூறமுடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 ~ வெள்ளி - ஆனி 2008

2அர 25: 1-12 திபா 137: 1-6 மத் 8: 1-4

## இரக்கம்

"இயேசு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு, 'நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!' என்றார்." (மத் 8: 3).

### சிந்தனைக்கு...

தொழுநோய் மிகக் கொடிய நோய். அன்று அதற்கு மருந்து இருக்க வில்லை. குணமாக்க முடியாத வேறுபல நோய்களையும் தொழுநோய் என்றே அன்று அழைத்தனர். தொழுநோயால் பீடிக்கப்பட்டவர் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவார். ஏனெனில் அது அடுத்தவரையும் பாதிக்கக்கூடியது. நோய் ஒருவரைத் தாக்கினால் குரு அவரை தொழுநோயாளி என்று பகிரங்கமாக அறிவிப்பார். அப்போது நோயாளி சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டு ஏனைய தொழுநோயாளிகளோடு குகைகளிலும் ஊர் எல்லையிலும் வாழ வேண்டும். அதிஷ்டவசமாகக் குணமடைந்தால் அல்லது அவரது மரணம் வரைக்கும் அவர் அந்த இடங்களிலேயே வாழவேண்டும். குணமடைந்தால் அவர் குருவிடம் காட்டி உறுதிசெய்து அதைப் பகிரங்கப்படுத்த வேண்டும் (காண். லேவி 14).

நற்செய்தியில் தொழுநோயாளி ஒருவர் துணிவோடு இயேசுவிடம் வந்து தன்னைக் குணமாக்கும்படி கேட்கின்றார். இயேசுவைப் பற்றி இவர் அடுத்தவரிடமிருந்து கேள்விப்பட்டிருக்கலாம். இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் இயேசுவிடம் வந்தார் இவர். இயேசுவும் தொலைவில் நின்று செயல்படாமல் தனது கையை நீட்டி அவரைத் தொட்டுக் குணமாக்கினார். பின் சென்று குருவிடம் காட்டச் சொன்னார். அன்று சமூகத்தில் நோயாளிகள் மட்டுமல்ல பாவிகளும் விலக்கிவைக்கப்பட்டனர். இயேசு நோயாளிகளைவிட பாவிகளைத் தேடிவந்து அவர்களைத் தொட்டுக் குணமாக்கினார். ஆன்மீக குணமாக்கலையும், விடுதலையையும் கொடுத்தார்.

### வாழ்விற்கு...

அன்று மட்டுமல்ல, இன்றும் இயேசு ஒப்புரவு அருட்சாதனத்தின் மூலமாக பாவிகளாகிய எங்களுக்கு மன்னிப்பும் பாவங்களிலிருந்து விடுதலையும் தருகின்றார். அவரண்டை வந்து எமது பாவங்களை ஏற்று, அறிக்கையிட்டு, அவரிடம் மன்னிப்பு வேண்டுவது எமது செயல். அவரிடம் வருவோம். மன்னிப்பும், வாழ்வும் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28 ~ சனி – ஆனி 2008

புல 2: 2, 10-14, 18-19 திபா 74: 1-7, 20-21 மத் 8: 5-17

## நம்பிக்கை

'உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை' (மத் 8: 10).

### சிந்தனைக்கு...

நூற்றுவர் தலைவர் ஓர் பிறஇனத்தவர், உரோமைய அதிகாரி. இவர்கள் யூதர்களால் வெறுக்கப்பட்டு வந்தனர். உரோமைய அதிகாரி இயேசுவை அணுகுவதற்குப் பல காரணிகள் தடையாக இருந்திருக்கலாம். பெருமை, சந்தேகம், விசுவாசமின்மை, பணம், மொழி, தன்னிறைவு, அதிகாரம், இனம் போன்றன தடையாக அமைந்திருக்கலாம். இவற்றிற்கு இவர் இடம் கொடுத்திருந்தால் இயேசுவின் ஆசீரை தன் பையனுக்குப் பெற்றுக் கொடுத்திருக்க முடியாது. ஆனால் நற்செய்தியில் வரும் நூற்றுவர் தலைவரின் விசுவாசம் யூதரையும் விஞ்சுகின்றது.

இவர் கேட்டதோ, 'ஒரு வார்த்தை மட்டும் சொல்லும். என் பையன் நலமடைவான்' என்றார். கடவுளின் வாக்கினால் வானங்கள் உண்டாயின. இங்கு இவர் கேட்டுநின்றதும் அந்த வாக்கின் சக்தியையே. இயேசுவின் புதுமைகளைப் பார்த்தும் அவரை நம்பாத யூதர்கள் பலர் இருந்தனர். ஆனால் இந்த பிறஇன நூற்றுவர் தலைவரோ இயேசுவின் சக்தியில் முழு நம்பிக்கை வைத்திருந்தார்.

இயேசுவும் அவரது நம்பிக்கையைப் பாராட்டினார். ஆண்டவரின் பாராட்டைப் பெறுவது எத்துணை நல்லது, பாக்கியமானது. தமக்கு மட்டும்தான் மீட்புண்டு எனும் எண்ணம் யூதரிடையே இருந்தது. பிறஇனத்தவர் மீட்புப் பெற வேண்டுமாயின் அவர் விருத்தசேதனத்தின் மூலமாக யூதராக மாறவேண்டும். ஆனால் இயேசுவோ இந்த சந்தர்ப்பத்தில் 'கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து... விண்ணரசின் பந்தியில் அமர்வர் என்றும் அரசுக்கு உரியவர்கள் இருளில் தள்ளப்படுவர்' என்றும் எச்சரித்தார்.

### வாழ்விற்கு...

இன்று எமது விசுவாசம் எந்தளவு வளர்ந்துள்ளது? இயேசு தன் வாழ்வில் பலரை குணமாக்கினார். அவர் நம் துன்பங்களை சுமந்துகொண்டார். அந்த ஆண்டவரிடம் நம்பிக்கையோடு செல்வோம். எமது உடல் ஆன்ம நோய்களிலிருந்து விடுதலை பெற்று புதுவாழ்வு வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்காலம் 13ம் ஞாயிறு
## 29 - ஆனி 2008

*திப 12: 1-11 திபா 34: 1-8 2திமொ 4: 6-8, 17-18 மத் 16: 13-19*

## திருத்தூதர்களான தூய பேதுரு, பவுல் பெருவிழா

திருச்சபையின் இரு மாபெரும் தூண்களாகிய தூய பேதுரு, பவுல் பெருவிழா இன்று. இறைவனின் மீட்புத் திட்டத்தில் இவர்களும் பெரும் பங்காற்றியிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இருவரும் வெவ்வேறு பின்னணிகள், அனுபவங்கள், சூழ்நிலைகளிலிருந்து வந்தாலும் இறைவன் தனது திட்டத்திற்கேற்ப இவர்களை அதிசயிக்கத்தக்க வகையில் பயன்படுத்தியுள்ளார். இவர்களது விசுவாச அனுபவங்களும் மிக ஆழமானவை. இவர்களது வாழ்வும் பணியும் எவ்வாறு இன்று எமக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளன என்பதைப் பற்றித் தியானிப்போம்.

### பேதுருவின் பணி

பேதுருவிற்கு நேரடியான இயேசு அனுபவங்கள் பல. இயேசுவின் போதனைகள், புதுமைகள், பேய்களை ஓட்டிய சம்பவங்கள், யூத மதத் தலைவர்களை வாதத்தில் எதிர்கொண்ட சம்பவங்கள் என்று பல அனுபவங்களை பேதுரு தன்னுள் கொண்டிருந்தார். அதைவிட மேலாக அவரது தனிப்பட்ட விசுவாச அனுபவங்களும் உள்ளன. இயேசு தோற்றம் மாறியபோது யோவான், யாக்கோபுவோடு பேதுருவும் இருந்தார் (காண். மாற் 9: 2-13). இறக்கவேண்டி வந்தாலும் நான் உம்மைக் காட்டிக்கொடுக்க மாட்டேன் என்று சவால்விட்டது (காண். மத் 26: 35), கெத்சமெனித் தோட்டத்தில் இயேசு பிடிபட்டது (காண். மத் 26: 47-54), இயேசுவை மறுதலித்தது (காண். மத் 26: 69-75), திபேரியாக் கடலில் இயேசுவின் கேள்விகளும் பணிப்பும் (காண். யோவா 21: 15-19) என்று பல விசுவாச அனுபவங்களும் பேதுருவிற்கு இருந்தன.

### விசுவாச அறிக்கை

பேதுருவின் அனுபவ பின்னணியில் இயேசுவின் கேள்விக்கு அவர் விடைகொடுத்தார். 'மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?' இயேசுவின் இக்கேள்விக்கு இலகுவாக யாரும் விடைகொடுக்கலாம். 'ஆனால் நீங்கள் நான் யார் எனச் சொல்கிறீர்கள்?' என்று இயேசு கேட்ட கேள்வி ஆழ்ந்த அர்ப்பணிப்புள்ள பதிலை எதிர்பார்த்து நின்றது. இங்கு பேதுரு முன்வந்து பதில் கொடுத்தார். 'நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்' என்றார். இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலை இயேசு பேய்களை ஓட்டியபோது அவையும் கூறின. ஆனால் பேதுருவின் வார்த்தையில் அர்த்தம் இருந்தது, ஆழம் இருந்தது, அர்ப்பணம் இருந்தது. மெசியாவாகிய இயேசுவின் பணி என்ன என்பதை அவர் முழுமையாக உணர்ந்திருக்கவில்லை. எனவேதான் இயேசு பிடிபட்டபோது பேதுரு அவரை மறுதலித்தார். ஆனால் தூய ஆவியின் வருகையின் பின்பு பேதுரு ஆண்டவருக்காகத் தன்னை ஒப்படைத்தார். அந்த அனுபவங்களில் ஒன்றே இன்றைய முதல் வாசகத்தில் நாம் வாசிக்கும் சிறைக்கூட அனுபவம். வானதூதர் அவரை விடுவித்து பாதுகாப்போடு பேதுருவை வீதிக்குக் கொண்டு வந்துவிட்டார். இவ்வாறு பேதுரு விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்து தனது கடைசிக்காலத்தில் சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு இறந்தார்.

## பவுலின் தொடக்கம்

கிறிஸ்தவத்தையே பூண்டோடு அழித்துவிட வேண்டுமென்று தீவிரமாக ஈடுபட்டவர் பவுல். இவர் ஓர் பரிசேயர். கமாலியேல் பாதத்தண்டை பாடம் கற்றவர். இவ்வாறு தன்னைப் பற்றி அவரே குறிப்பிட்டுள்ளார் (காண். கலா 1: 11~24). ஆனால் அவருக்கான இறைவனின் திட்டமோ வேறாக இருந்தது. ஆண்டவர் பவுலை தமஸ்கு சாலையில் எதிர்கொண்டு தன்னை வெளிப்படுத்தி அவரை அழைத்தார் (காண். திப 9: 1~19). 'நீ செல், பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாய் இருக்கிறார்' என்று அனனியாவுக்குக் குறிப்பிட்டார் ஆண்டவர் (திப 9: 15). இவ்வாறு பவுலின் வாழ்க்கை, மனநிலை, குறிக்கோள் எல்லாம் கிறிஸ்துவின் அழைப்பால் மாற்றம் பெற அவர் ஆண்டவரின் பணிக்காகத் தன்னை முழுமையாகத் தியாகம் செய்தார். 'கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்' (கலா 2: 19~20). இதுவே இவரது ஆழமிக்க கிறிஸ்து அனுபவம். கிறிஸ்துவைத் தாங்கியவராக தனது வாழ்வின் இறுதிக் காலத்தில் தனது ஓட்டத்தை முடித்துவிட்டதாகக் குறிப்பிடுகின்றார்.

## என் வாழ்வில் கிறிஸ்து

பேதுரு, பவுல் இருவரும் ஆரம்பத்தில் பெரும் புனித வாழ்வு வாழவில்லை. ஆனால், கிறிஸ்துவை அறிந்து அவரது அழைப்பை உணர்ந்தபோது அவருக்காக தம்மைத் தியாகம் செய்தார்கள். இன்று எனது கிறிஸ்து அனுபவம் என்ன? என்னுள் கிறிஸ்து வாழ்கிறார் என்று என்னால் கூறமுடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 ~ திங்கள் – ஆனி 2008

ஆமோ 2: 6-10, 13-16 திபா 50: 16-23 மத் 8: 18-22

### அழைப்பு

'நீர் என்னைப் பின்பற்றி வாரும். இறந்தோரைப்பற்றிக் கவலை வேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள்' (மத் 9: 22).

### சிந்தனைக்கு...

அழைப்பின் சில தன்மைகள் பற்றி விளக்குகின்றது இன்றைய நற்செய்தி. இருவர் நற்செய்தியில் இடம்பெறுகின்றனர். ஒருவர் முன்வந்து பின்செல்வேன் என்றார். அடுத்தவர் சில பணிகள் முடிந்தபின் பின்செல்வேன் என்றார்.

**முதலாமவர்:** இவருக்கு பெரிய மனது. தாராள மனதோடு நீர் எங்கு சென்றாலும் உம்மைப் பின்செல்வேன் என்றார். இங்கு வார்த்தையில் உறுதிப்பாடு போதாது. மாறாக அந்த வாக்குறுதிகள் செயலில் காட்டப்பட வேண்டும். இங்கு இவருக்கு எளிமை தேவையாக உள்ளது. இயேசுவைப் பின்செல்வதென்பது இலகுவானதல்ல. பல தியாகங்கள் செய்ய வேண்டிவரும். கிறிஸ்துவைப் பின்செல்வதால் உள்ள புகழ், பெருமை, நட்புகள், வசதிகளை இழக்கவேண்டிவரலாம். ஆயினும் கிறிஸ்துவின் சீடர் எனும் நிலை உலக செல்வங்கள், உலகம் தரும் வசதிகளைவிட மிக உயர்வானது. எனவே இவருக்கு எளிமை, பணிவு அவசியமானது.

**இரண்டாமவர்:** இங்கு 'இறந்தவர் அடக்கம் செய்யப்படுவர்' என்று இயேசு குறிப்பிட்டது இறைபணிக்கு ஒருவர் கொடுக்கவேண்டிய முன்னுரிமையைக் குறிக்கின்றது. 'முதலில் நான் சென்று என் தந்தையை அடக்கம் செய்துவிட்டு வர அனுமதியும்' என்றார் இவர். இவர் சுயநலத்தோடு இந்த விடயத்தை முன்வைத்திருக்கலாம். இவர் குடும்பத்தில் முதல் பிள்ளையாக இருந்தால் தந்தையின் சொத்துகளை பெற்றுக்கொள்ளலாம் அல்லது குடும்ப பொறுப்புகளைப் பொறுப்பேற்க வேண்டும் போன்ற பல சிந்தனைகள் பல இவருள் இருந்திருக்கலாம். இறைவன் ஒருவரை அழைத்தால் அவரது வாழ்வை அவரே பொறுப்பேற்கிறார் என்பது உண்மை. சில சில கடமைகள் எமக்கிருந்தாலும் இறைவனில் எமது நம்பிக்கையும் முக்கியமானது.

### வாழ்விற்கு...

கிறிஸ்துவைப் பின்செல்ல எனக்கு பெரிதும் தடையாக இருப்பதென்ன? அவற்றிலிருந்து விடுபட்டு கிறிஸ்துவை முழுமையாகப் பின்செல்ல நான் முன்வரவேண்டும். ஆயத்தமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01 ~ செவ்வாய் – ஆடி 2008

ஆமோ 3: 1-8, 4: 11-12 திபா 5: 4-7 மத் 8: 23-27

## இயேசுவின் அதிகாரம்

'காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே! இவர் எத்தகையவரோ?' (மத் 8: 27).

### இயேசுவின் அதிகாரம்

இயேசு தனது இவ்வுலக வாழ்வில் பல புதுமைகள் செய்துள்ளார். இவற்றின் மூலம் அவரது அதிகாரத்தையும், இறைத்தன்மையையும் அறிந்து கொள்ளலாம். இயேசுவின் புதுமைகளை, அதிகாரத்தை நாம் மூன்று வகையாக வகுக்கலாம். இயற்கையின்மேல் வெற்றி (மத் 8: 23~ 27), நோய்களின்மேல் வெற்றி (மத் 8: 1~17), மரணத்தின்மேல் வெற்றி (யோவா 11). இறைவனின் சக்தி, அதிகாரம், வல்லமை உலகில் உள்ளது, இறையாட்சி வந்து விட்டது என்பதை இவை சுட்டிநிற்கின்றன. பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கால் நனையாமல் கடக்கச்செய்ய கடலைக் கட்டாந்தரையாக்கினார் இறைவன்.

இங்கு இயேசு காற்றையும் கடலையும் கடிந்துகொண்டு அவற்றைக் கட்டுப்படுத்தினார். இயேசுவின் அதிகாரத்தைப் பார்த்து சீடர்கள் மலைத்துப்போயினர். இயேசுவோ தனது இறைத்தன்மையை, அதிகாரத்தை இவ்வாறு இவர்களுக்குக் காட்டினார். இயேசு படகில் தூங்கிக் கொண்டிருந்தாலும் அவர் தன் சீடர்களை மறந்துவிடவில்லை. அவர் இயற்கையின் ஆண்டவர். அவருக்கு உறக்கம் என்றோ, விழிப்பு என்றோ இல்லை. ஆனால் ஆண்டவர் தம்மோடு இருக்கிறார் என்பதை சீடர்கள் உணர்ந்தனரா?

### மலைத்துப்போன சீடர்கள்

காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே என்பது சீடர்களின் ஆச்சரியம் நிறைந்த வெளிப்பாடு. உலகெங்கும் சென்று போதியுங்கள் என்று தனது இறுதி நாட்களில் சீடர்களுக்குப் பணித்த இயேசு உலக முடிவுவரை நான் உங்களோடு இருக்கிறேன் என்றார். இந்த வாக்குறுதியை சீடர்கள் தமது பணிவாழ்வில் பல தடவைகள் உணர்ந்தனர்.

இன்று எம்மோடு இருக்கும் ஆண்டவரை, எம்மை வழிநடத்தும் ஆண்டவரை நாம் எப்போதும் உணர்ந்து வாழ்ந்துகாட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02 ~ புதன் _ ஆடி 2008

ஆமோ 5: 14-15, 21-24 திபா 50: 7-13, 16-17 மத் 8: 28-34

## அதிகாரம்

'போங்கள்' (மத் 8: 32).

### அலகைமேல் அதிகாரம்

இயற்கையைக் கட்டுப்படுத்திய இயேசு இப்போது அலகையை விரட்டியடிக்கின்றார். இது நோயின்மேல் அவருக்கு இருக்கும் அதிகாரத்தைக் குறிக்கின்றது. பாவம் அலகையின் சூழ்ச்சியால் இவ்வுலகில் நுழைந்தது. அன்றிலிருந்து அலகையின் ஆட்சி உலகில் இருந்தது. ஆனால் இயேசுவின் வருகையோடு அலகையின் ஆட்சி ஓர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது எனலாம். பொதுத்தீர்வை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

நற்செய்தியில் அலகை இருவருள் நுழைந்து அப்பகுதியில் செல்வோரை வதைத்தது. இவர்கள் கல்லறைகளில் வாழ்ந்தனர். மக்களால் இவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இறையாற்றலே இங்கு அவசியமாகியது. இயேசுவின் சக்தியை அறிந்திருந்த அலகை அவரைப் பார்த்து 'இறைமகனே' என்றழைத்தது. இறுதித் தீர்வையின் காலம் வந்துவிட்டது. காலம் வருமுன்னே எங்களை வதைக்கவா இங்கு வந்தீர் என்று கேட்டதில் அலகையின் தோல்வி தொடங்கிவிட்டது எனலாம்.

### அசுத்த மிருகம்

பன்றிகள் யூதர்களுக்கு அசுத்த மிருகம். எம்மைப் பன்றிகளுக்குள் அனுப்பிவிடும் என்று இம்மனிதர்கள் இயேசுவிடம் கேட்டதிலிருந்து இது பிற இனத்தவர் வாழும் இடம் என்பது புலனாகின்றது. சாத்தானும் தீயவன், அசுத்தமானவன் என்பது தெளிவு. இவர்கள் கேட்டதற்கேற்ப 'போங்கள்' என்று இயேசு கட்டளையிட அவை பன்றிகளுக்குள் புக அவை கடலில் வீழ்ந்து மடிந்தன. சாத்தானின் மேல் இயேசுவிற்கிருந்த வல்லமை தெளிவாக இங்கு காட்டப்படுகின்றது. பன்றிகள் இறந்துவிட்டன என்பது இங்கு முக்கியமல்ல. மாறாக, இதுவரை உலகில் வலியவனாக இருந்த சாத்தானைவிட வலிமையான இறைவன் வந்துவிட்டார். அவரது ஆட்சி தொடங்கிவிட்டது என்பதே நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய நற்செய்தியாகும்.

வலியவர் ஆண்டவர். அவரில் நம்பிக்கை வைத்து, அவரிடம் வேண்டி எம்மை ஆட்டிப்படைக்கும் எமது பெருமை, அகந்தை, சுயநலம், நோய், பாவம், பொறாமை, பழி போன்ற சக்திகளிலிருந்து விடுபடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03 ~ வியாழன் - ஆடி 2008

எபே 2: 19-22 திபா 117: 1, 2 யோவா 20: 24-29

# திருத்தூதரான தோமா திருவிழா

'நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்' (யோவா 20: 29).

## தோமாவின் அவநம்பிக்கை

தோமா என்றாலே அவரது அவநம்பிக்கைதான் நினைவிற்கு வரும். அவருக்கு இயேசுவில் நம்பிக்கை இருந்தாலும் சில சில விடயங்களில் அவர் கண்களால் கண்டால்தான் நம்புவார். அவரது அவநம்பிக்கை இன்று எமக்கும் நல்ல பாடத்தைக் கற்றுத்தருகின்றது எனலாம். இயேசுவின் உறுதியான சொற்கள் அர்த்தமுள்ளவை. இறைவன் எங்கும் உள்ளார். எனவே அவரை எமது குறிப்பிட்ட வரையறைக்குள் அடக்குவது முறையாகாது. சீடர்களோடு இயேசு இருந்தபோது அவர்களால் இயேசுவின் பிரசன்னத்தை முழுமையாக அறியமுடிந்தது. ஆனால் அவரது உயிர்ப்பிற்குப் பின் நிலமை வேறு என்பதை சீடர்கள் சிறிது சிறிதாக அறிந்திருப்பர்.

தோமாவிற்கு இயேசுவின் சரீரப் பிரசன்னம் அவசியமாக இருந்தது. ஆனால் இறைவனின் திட்டமோ வேறு. சரீர பிரசன்னம் எனும் வட்டத்துக்குள் இயேசு தன்னை கட்டுப்படுத்த விரும்பவில்லை. அவர் எப்போதும், எங்கும், எல்லாக் காலங்களிலும் இருக்க விரும்புகிறவர். பாலஸ்தீனா, 2000ம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சரித்திர இயேசு இப்போது காலங்களுக்கு அப்பாற்பட்டவராக வாழ்கின்றார். மீட்பு வரலாற்றில் இயேசு ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறித்த சமூகத்தில், குறித்த இடத்தில் பிறந்து வளர்ந்தாலும் அவர் அப்படியே இருந்திருந்தால் எங்கும் வியாபித்திருக்க முடிந்திருக்காது. இயேசுவின் உயிர்ப்பிற்குப் பின்பு அவர் அனைவருக்கும் உரியவராகின்றார்.

## காணாமலே நம்புவோர்...

எமக்கு சந்தேகம் எழுவது இயல்பு. சந்தேகங்கள் கேள்விகளாக மாறி, அவற்றிற்கு நாம் விடைகாணும்போது அவை பலனளிக்கின்றன. ஆனால் நாம் சந்தேகப்பட்டு அதில் முரண்பட்டுக்கொண்டிருந்தால் அது நன்மை தராது. சீடர்கள் தாம் உயிர்த்த ஆண்டவரைக் கண்டதாகக் கூறியும் தனது பிடிவாதத்தில் இருந்த தோமாவையே கிறிஸ்து கடிந்துகொண்டார். இன்று எமது சந்தேகம் பிடிவாதத்தோடு நிற்கின்றதா? அல்லது நம்பிக்கைக்கு இட்டுச் செல்கின்றதா? நம்புவோம், வாழ்வு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 ~ வெள்ளி — ஆடி 2008

ஆமோ 8: 4–6, 9–12 திபா 119: 2, 10, 20, 30, 40, 131 மத் 9: 9–13

### அழைப்பு

'என்னைப் பின்பற்றி வா' (மத் 9: 9).

### வரி தண்டுவோர்

யூதர்கள் இயல்பாகவே தீவிரமானவர்கள். கடவுள், அவரது சட்டம், யூத மத வழிபாடுகளுக்கு எதிராக யார் வந்தாலும் அவர்களை ஒழித்து விடுவார்கள். பாவிகள், பிற இனத்தவர், நோயாளிகள் என்று பலரையும் இந்த சமூகம் விலக்கியே வைத்திருந்தது. இவர்கள் பாவிகள், கடவுளின் தண்டனை இவர்களுக்குண்டு என்பது இவர்களது சிந்தனை.

வரி தண்டுபவர்கள் உரோமைய அரசாட்சிக்கு சார்பாக செயல்படு பவர்கள். இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனா உரோமையரின் ஆட்சியில் இருந்தது. கடவுளைத் தவிர யாருக்கும் தலைவணங்காதவர்கள் இவர்கள். ஆனால் கட்டாயத்தின் பேரில் உரோமைய அரசாட்சிக்கு பணியவேண்டிய துர்ப்பாக்கிய நிலை இவர்களுக்கு. சிலர் உரோமையருக்கு எதிராக கிளர்ச்சியும் செய்துள்ளனர். வரி தண்டுபவர்கள் (ஆயக்காரர்) உரோமைய அதிகாரிகளுக்கு மக்களிடமிருந்து வரி வசூலித்துக் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட தொகைக்கு மேல் கிடைக்கும் வருமானம் இவர்களுக்குரியது. இந்த சலுகையைப் பயன்படுத்தி இவர்கள் அநீத முறையில் மக்களிடமிருந்தும், நகருக்குள் வரும் வியாபாரிகளிடமிருந்தும் வரி வசூலித்ததால் யூதர்களின் சினத்திற்கு ஆளாகினர். இவர்களைப் பாவிகள் என்றே யூதர்கள் கருதி ஒதுக்கி வந்தனர்.

### மத்தேயு அழைக்கப்பட்டார்

மத்தேயுவும் ஓர் வரி தண்டுபவரே. இவரையும் மக்கள் பாவியென்று ஒதுக்கி வைத்தாலும் இயேசுவின் பார்வையில் இவரும் இறைவனின் பிள்ளை. தனது பணி தொடர இயேசு இவரை அழைத்தார். வீட்டில் விருந்துண்டார். இயேசு கொடுத்த இந்த அழைப்பு, விருந்தில் பங்கேற்றது ஏனைய பாவிகளையும் கவர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு பாவிகளைத் தேடி வந்த இயேசு தனது போதனை, வாழ்வு, பணி மூலம் அவர்களுக்கு புதுவாழ்வைக் காட்டினார்.

இன்று நானும் பாவியாக, பாவிகளுக்கெல்லாம் பெரும் பாவியாக இருக்கலாம். இயேசு என்னைத்தான் தேடி வருகின்றார். அவரிடம் சென்று மனம்மாறி புதுவாழ்வு பெறுவேன். அவரோடு ஒப்புரவாவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05 ~ சனி - ஆடி 2008

ஆமோ 9: 11-15 திபா 85: 8, 10-13 மத் 9: 14-17

### நோன்பு

நோன்பு பற்றிய உரையாடல் இயேசுவிற்கும் யோவானின் சீடர்களுக்கும் ஏற்படுகின்றது. இயேசு அதற்கு உரிய விளக்கம் கொடுத்தார்.

### நோன்பு இருத்தல்

யூதர்களுக்கு மூன்று முக்கிய கடமைகள் உண்டு. அவை பிச்சையிடுதல் (மத் 6: 1~4), செபம் செய்தல் (மத் 6: 5~15), நோன்பிருத்தல் (மத் 6: 16~18) ஆகும். இவர்கள் வாரத்தில் இருமுறை நோன்பு இருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாலும் ஆண்டிற்கு ஒருமுறை வரும் பரிகாரத் திருநாளன்று இவர்கள் நோன்பிருக்க வேண்டுமென்பது யூதச் சட்டமாகும் (காண். லேவி 16: 29, 23: 27, எண் 29: 7).

### மணமகனின் வருகை

அனைவரும் நோன்பிருக்க இயேசுவின் சீடர்கள் ஏன் நோன்பிருக்க வில்லை என்பது யோவானின் சீடர்களின் கேள்வி. இங்கு இயேசு தன்னை மணமகன் என்று வர்ணித்தார். மணமகன் இருக்கும் காலம் கொண்டாட்டத்தின் காலம். எனவே மணமகன் இருக்கும்போது அவர் தோழர்கள் நோன்பிருக்கத் தேவையில்லை என்றும் மணமகன் அவர்களை விட்டுச் சென்றபின் தோழர்கள் நோன்பிருப்பார்கள் என்றும் குறிப்பிட்டார். பழைய ஏற்பாட்டில் இறைவன் மணவாட்டியைத் தேடிவரும் மணமகனுக்கு ஒப்பிடப்படுகின்றார் (ஓசே 1: 2). இயேசுவும் இந்த மரபைப் பின்பற்றி தன்னை மணமகனாகக் காட்டினார். இயேசு நோன்பு இருப்பதற்கு எதிரானவரல்ல. ஆனால் அதன் அர்த்தத்தையும், நோக்கத்தையும் சரியாகப் புரிந்துகொண்டு செயல்படுதல் அவசியமாகும். சட்டம் சொல்கிறது என்பதற்காக ஒருவர் நோன்பிருந்தால் அவர் சட்டத்திற்கு அடிமையாகவே செயல்படுகின்றார். மாறாக, ஒருவர் சுயமாக நோன்பிருப்பதன் தேவையை உணர்ந்து நோன்பிருக்கும்போது அது அர்த்தமுள்ள செயலாக மாறும். நற்பயனும் கிடைக்கும்.

இன்று நாமும் நோன்பு இருக்கிறோம். நோன்பு ஒருவரை உடல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் தூய்மையாக்க வல்லது. மனமாற்றம் ஏற்படும்போது நாம் அதற்கான பரிகாரம் தேடி நோன்பிருக்கிறோம். உண்மையான நோக்கத்தோடு செய்யப்படும் நோன்பு நல்ல பலனைத் தரும் என்பதில் ஐயமில்லை. இறைவனோடு ஒப்புரவாவது எமது இலக்காகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 14ம் ஞாயிறு

**06 – ஆடி 2008**

*செக் 9: 9–10 திபா 145: 1–2, 8–11, 13–14 உரோ 8: 9, 11–13 மத் 11: 25–30*

## இயேசுவே ஆறுதல்

இயேசு நீதியுள்ள அரசர். உலகம் எண்ணும் அரசாட்சிக்கு எதிர்மாறாக அவர் நீதியோடும், இரக்கத்தோடும் தம் மக்களை வழிநடத்துவார். மக்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களைத் துன்பங்களிலிருந்து விடுவிப்பார் என்பதை இன்றைய ஞாயிறு வாசகங்கள் குறிப்பிடுகின்றன.

### மெசியாவின் வருகை

மெசியா யூத மக்களால் எதிர்பார்க்கப்பட்டவர். அவர் வந்து மக்களை விடுவிப்பார் என்பது மக்களின் பெரும் எதிர்பார்ப்பு. இயேசு வெற்றியோடு எருசலேம் நுழைந்த சம்பவம் (மத் 21: 1–11) இங்கு 500 ஆண்டுகளுக்கு முன்பு முன்னுரைக்கப்படுகின்றது. இயேசுவின் முதல் வருகையோடு இந்த இறைவாக்கு நிறைவேறுகின்றது. முதல் வருகை 9ம் வாக்கியத்திலும் இரண்டாம் வருகை 10ம் வாக்கியத்திலும் முன்னுரைக்கப்படுகின்றது.

இந்நிலையில் செக்கரியா தனது நூலில் மெசியாவின் பண்புகள் எளிமை, நீதி, சமாதானம் என்று குறிப்பிட்டார். மெசியாவின் எளிமையைக் காட்ட அவர் கழுதையின்மேல், கழுதைக் குட்டியாகிய மறியின்மேல் ஏறி வருகிறார் என்றார்.

**1. அவர் நீதியுள்ளவர்:** இயேசு தரும் நீதி உலகத் தலைவர்கள் தரும் நீதி போன்றதல்ல. உலக நீதி மனிதரின் செயல்களை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் ஆண்டவர் மனிதரின் மனங்களை அறிபவர். அவர் நீதி எப்போதும் தவறாது. மனிதரின் அழிவதையும் அவர் விரும்புவதில்லை.

**2. அவர் வெற்றி வேந்தர்:** உலகைப் படைத்தவர் ஆண்டவர். உலகமே அவருக்கு எதிராக எழுந்தாலும் அவர் வெற்றி வீரராய் வருவார். மெசியாவின் இரண்டாம் வருகையின்போது உலகையே ஆட்டிப்படைத்த சாத்தான் வெற்றிகொள்ளப்படும். 'இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்' (பிலி 2: 10) என்றார் தூய பவுல்.

**3. அவர் எளிமையுள்ளவர்:** குதிரைகள் வேதாகமத்தில் போர், போர் வீரர்களோடு இணைத்துக் காட்டப்படும். மெசியாவோ இங்கு எளிமையோடு கழுதையின்மீது வருகின்றார். இயேசுவின் இந்த எளிமையான கோலம் உலகின் சிந்தனையையே மாற்றியமைத்தது. இயேசுவின் வெற்றி அடுத்தவரை அழித்து வருவதல்ல. மாறாக சாத்தானை வென்று மக்களை விடுவிக்கும் வெற்றியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நற்செய்தியில் இரு பிரிவினரைக் காணலாம். ஞானிகள், அறிஞர்கள் ஒரு சாரார். பல காரணங்களுக்காகச் சோர்ந்திருப்போர் இன்னொரு சாரார். இவர்கள் பற்றிய மனநிலையை இயேசுவின் வார்த்தைகளிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

## இயேசு நன்றி கூறினார்

இயேசு யோசேப்பின் மகன்தானே என்றும் (காண். லூக் 4: 22), கலிலேயாவிலிருந்து இறைவாக்கினர் யாரும் தோன்றுவதில்லை (காண். யோவா 7: 52) என்றும் இயேசுவைக் குறித்து இடறல் பட்டவர்கள் பலர். விசேடமாக யூதத் தலைவர்கள் இயேசுவின் போதனைகளையும், புதுமைகளையும் ஏற்று அவரை நம்ப மறுத்தனர். தமக்கு எல்லாம் தெரியும், சட்டங்களை முறையாகப் படித்தவர்கள் தாமே என்று இவர்கள் இறுமாப்போடு இருந்தனர்.

ஆனால் இயேசுவின் போதனைகளைக் கேட்டு, நம்பி வாழ்வு பெற்றவர்கள் பலர். இவர்கள் பாமர மக்களே. இவர்கள் எளிய மனத்தினர், பணிவோடு இயேசுவிடம் நன்மைபெற வந்தவர்கள். இவர்களுக்காக இயேசு இறைவனுக்கு நன்றி கூறினார்.

## சோர்ந்திருப்போரை அழைத்தார்

'பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்போரே...' என்று இயேசு வாழ்வின் பாரங்கள், சுமைகள் தாங்க முடியாது தவிப்போரை அழைத்தார். ஏனெனில் அவரிடம் வருவோருக்கு வாழ்வில் துன்பங்கள், சுமைகள் வந்தாலும் ஆண்டவரே பார்த்துக்கொள்வார். அன்று மக்கள் சட்டங்கள் எனும் சுமையால் பெரிதும் தவித்தனர். எதற்கெடுத்தாலும் சட்டம், சடங்கு, தீட்டு என்று பல தடைகள். இவற்றிலிருந்து விடுபட்டு புதுவாழ்வு வாழ்ந்துகாட்ட இயேசு அழைத்தார். புதுவாழ்வில் இயேசுவின் போதனைகளை வாழ்ந்துகாட்டும்போது தடைகள் வந்தாலும் அவை இறுதியில் மகிழ்வையும் நிறைவையும் தரும்.

## எம் வாழ்வில் சுமைகள்

இன்று எமது பாவம், சட்டங்கள், அரசியல், சமூக காரணங்களுக்காக ஒடுக்கப்படுதல், இறைவனைத் தேடும் முனைப்பில் தோல்வி போன்ற காரணங்களால் நாம் பல அழுத்தங்களுக்கும் உள்ளாகலாம். இயேசுவிடம் வருவோம். அவரே எமக்கு நிலையான ஆறுதலைத் தரவல்லவர். அவரில் நம்பிக்கை வைப்பது மட்டுமல்ல. அவர் தரும் கட்டளைகளையும் உறுதியோடு நிறைவேற்ற வேண்டும். அப்போது அவரது ஆசீரையும் வழிகாட்டலையும் நாம் உணர்ந்து வாழ்வில் வெற்றி காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 ~ திங்கள் _ ஆடி 2008

ஓசே 2: 14-16, 19-20 திபா 145: 2-9 மத் 9: 18-26

## நம்பிக்கை

'நீர் வந்து அவள் மீது உம் கையை வையும். அவள் உடனே உயிர் பெறுவாள்' (மத் 9: 18).

நம்பிக்கை கிறிஸ்தவ வாழ்விற்கு அடிப்படை. நற்செய்தியில் நம்பிக்கை கொண்ட இருவரின் செயல்பாடுகளை ஆராய்வோம். செபக்கூடத்தலைவர் ஒருவர் இறந்த தனது மகளை உயிர்ப்பிக்கும்படி இயேசுவிடம் பணிந்து கேட்டார். நீர் வந்து உம் கையை வையும் அவள் குணமாவாள் என்றார். அடுத்தது ஓர் நோய்வாய்ப்பட்ட பெண்.

### செபக்கூடத் தலைவர்

இவர் பெயர் யாயிர் என்று மாற்கு குறிப்பிடுகின்றார் (காண். மாற் 5: 22). இவர் சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் இருப்பவர். ஆயினும் இயேசுவால் தனது மகளை உயிர்ப்பிக்க முடியும் என்று நம்பினார். அவர் கை பட்டாலே அவள் உயிர் பெறுவாள் என்பது இவரது நம்பிக்கை. மக்கள், தனது அந்தஸ்து என்று பாராது நம்பி இயேசுவிடம் வந்தவர் இவர். இவரது நம்பிக்கை வீண்போகவில்லை. சிறுமி உயிர்பெற்றாள்.

### இரத்தப்போக்குடைய பெண்

இப்பெண் ஓர் பெரிய நோயாளி. இவர் சமூகத்தினுள் வருவதற்கே தகுதியற்றவர். தீட்டுப்பட்டவர் என்று விலக்கி வைத்தது யூத சமூகம். ஆயினும் இவரது நம்பிக்கை இவரை இயேசுவிடம் அழைத்து வந்தது. கூட்டத்தினுள் வந்து தனது நோய்பற்றி இயேசுவிடம் சொல்லி அவரையும் தன்னையும் சிக்கலில் மாட்டிவைக்க விரும்பாமல் நம்பிக்கையோடு அவரண்டை வந்து அவரின் ஆடையைத் தொட்டாலே போதும். நான் குணமடைவேன் என்றெண்ணி செயல்பட்டார். இயேசுவிற்கு நடைபெறும் ஒவ்வொரு விடயங்களும் தெரிந்திருந்தாலும் இவரது நம்பிக்கையைப் பாராட்டவும் அடுத்தவர்க்கு ஓர் பாடம் புகட்டவும் இயேசு 'மகளே துணிவோடிரு. உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று' என்றார்.

இன்று எமது விசுவாசம் எதில் தங்கியுள்ளது. இயேசுவிலா அல்லது எமது சக்தியிலா? தொட்டால்தான் நம்புவேன் என்று கூறிய தோமாவைப் போல வாழாமல் இயேசுவின் வல்லமையில் நம்பிக்கை வைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08 ~ செவ்வாய் – ஆடி 2008

ஓசே 8: 4-7, 11-13 திபா 115: 3-10 மத் 9: 32-38

## இரக்கம்

இயேசு மக்களின் தேவைகள், கஷ்டங்களைப் பார்த்து மனமிரங்கி செயல்பட்டார். அவர்களுக்கு நன்மைகள் பல செய்தார்.

### இயேசுவின் புதுமைகள்

இயேசுவைத் தேடி மக்கள் திரளாக வந்தனர். பேய் பிடித்தவர்களையும் நோயாளிகளையும் அவர் குணமாக்க வேண்டும் எனும் எதிர்பார்ப்போடு வந்தனர். இந்த கடினமான நிலையிலிருந்து அவர்களுக்கு விடுதலை கொடுக்க யாரும் இருக்கவில்லை. இயேசுவையும் அவரது வல்ல செயல்களையும் அறிந்தபோது அவர்கள் அவரைத் தேடி வந்தனர். இயேசுவிற்குப் புதுமைகள் செய்வது பெரிய காரியமாக இருக்கவில்லை. அவர் தனது சக்தியையும் கடந்து மக்களின் அவல நிலையைப் புரிந்துகொள்கிறார். புரிந்து அவர்கள் மீது இரக்கம் கொண்டார். அவர்களுக்குத் தனது போதனைகளின் மூலமாக நல்வழியைக் காட்டினார். மனப்பாரங்களை இறக்கிவைத்தார். நோயாளிகளைக் குணமாக்கி உடல் வாதைகளை நீக்கினார். ஆனால் அது மட்டும் போதுமா?

### ஆயன் இல்லா ஆடுகள்

இந்த மக்களின் தேவைகள் அதிகம். அவற்றை நிறைவேற்றி வைக்க யாருமில்லை. மீட்புக்காக இவர்கள் ஏங்கினார்கள். சட்டங்களின் அழுத்தங்களிலிருந்து மீட்பு, ஆன்மீக மீட்பு, நோய்நொடிகளிலிருந்து மீட்பு, உறவு முறிவுகளிலிருந்து மீட்பு, பலவித அடிமை நிலைகளிலிருந்தும் மீட்பு என்று பல மீட்புகள் இவர்களுக்குத் தேவையாக இருந்தன. அங்கு எல்லா மக்களும் இயேசுவைத் தேடி வரவில்லை. இயேசுவும் பாலஸ்தீனாவில் அனைத்து மக்களையும் தேடிச் செல்ல முடியவில்லை. ஆகவே இயேசு தம் சீடரைப் பார்த்து அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்பும்படி ஆண்டவரிடம் வேண்டும்படி கேட்டுக்கொண்டார்.

இன்று எம்மத்தியிலும் அதே நிலைதான். மக்களின் தேவைகள் மாறுபட்டதே தவிர தேவைகள் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன. எனவே இன்று எம்மையும் இப்பணிக்காக இயேசு அழைக்கிறார். நாம் வாழும் நிலையில் எமது நாளாந்த கடமைகளையும் பொறுப்புகளையும் அர்ப்பணத்தோடும், நேர்மையோடும் செய்தாலே அடுத்தவர்க்கு நாம் உதவுகிறோம் என்றாகிவிடும். எமது செபம், வாழ்வு அடுத்தவர்க்கு வாழ்வு கொடுக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 ~ புதன் - ஆடி 2008

ஓசே 10: 1-3, 7-8, 12 திபா 105: 2-7 மத் 10: 1-7

### அழைப்பு

இயேசு பன்னிரு திருத்தூதர்களை அழைத்தார். பணியின் தேவைகளை இவர்கள் ஓரளவு அறிந்திருப்பார்கள். இவர்களை அழைத்து பணிக்கென அனுப்பி வைத்தார் இயேசு.

### திருத்தூதர்கள் தெரிவு

ஒரு கையில் விரல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறாக இருப்பதைப்போல திருத்தூதர்களின் வாழ்வு, கல்வி, தொழில், பின்னணிகளைப் பார்த்தால் ஒருவருக்கொருவர் வேறுபடுவர். ஆயினும் இயேசு தனது பணி தொடர இவர்களை அழைத்தார். சட்டங்களை முறையாகக் கற்றிருந்த பரிசேயர், சட்ட வல்லுனர்களையோ, வழிபாடுகளை நடாத்தும் யூத குருக்களையோ இயேசு தேடிச் செல்லவில்லை. இவர்களுள் சிலர் மீன்பிடித் தொழில் செய்தோர், ஒருவர் வரிவசூலிப்பவர், ஒருவர் தீவிரவாதி, ஏனையோர் சாதாரண சீடர்கள். இறைவனின் திட்டத்தில் அவரது பணிக்கென அழைப்புப் பெற்றோர் பற்றிய ஆய்வு ஒன்று செய்தால் அது ஒரு மறைபொருள் என்றே கூறலாம். விளக்கம் அவருக்கு மட்டுமே தெரியும். எமது சாதாரண அறிவால் அவரது திட்டங்களை அறிந்துகொள்ள முடியாது.

இங்கு மக்களின் தேவையை தெளிவாகவே அறிந்திருந்தார் இயேசு. பல காரணங்களால் சோர்வுற்று விடுபட முடியாத நிலையில் இருக்கும் இவர்களை ஆயனில்லா ஆடுகள் என்று வர்ணித்தார் அவர். இவர்களுக்கு பணிசெய்ய திருத்தூதர்கள் தெரிவுசெய்யப்பட்டு அனுப்பப்படுகின்றனர்.

### இயேசுவுடன் இணைந்திருத்தல்

திருத்தூதர்கள் இயேசுவால் அழைக்கப்பட்டிருந்தாலும் அவரோடு இணைந்திக்கும் வரைக்குமே இவர்கள் வெற்றியோடு செயல்பட முடியும். இறைவனின் பணி, இறைவனின் புகழ் என்பது இவர்களது மனதில் எப்போதும் இருக்க வேண்டும். இயேசுவும் இவர்களை தன்னோடு வைத்திருந்து அவர்களுக்குப் பல விடயங்களை வெளிப்படுத்தினார். அவர்களுக்கு பல அதிகாரங்களையும் கொடுத்திருந்தார். தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்றவும்... என்று மாற்கு குறிப்பிடுகின்றார்.

எமது அழைப்பு என்ன? எம் வாழ்வே கிறிஸ்துவின் நற்செய்தியாக மாறவேண்டும். அழைப்பை உணர்ந்து செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 ~ வியாழன் - ஆடி 2008

ஓசே 11: 1-4, 8-9 திபா 80: 1-2, 14-15 மத் 10: 7-15

### பணி

பணிக்கென திருத்தூதர்கள் அனுப்பப்படுகின்றனர். இவர்களது பணியின் தன்மை, முக்கியத்துவம் பற்றி ஆராய்வோம்.

### நற்செய்தி அறிவித்தல்

இயேசுவே இறைவனின் நற்செய்தி. 'மனம்மாறுங்கள்' என்பதே அவரது முதல் போதனை (காண். மாற் 1: 15). திருத்தூதர்கள் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது எனும் செய்தியைப் பறைசாற்ற வேண்டும். அதன்பின்பே ஏனையவை. மக்கள் இவர்களை ஏற்கலாம், நிராகரிக்கலாம். ஏற்றாலும், ஏற்காவிட்டாலும் அவர்களுக்குச் செய்தி போகவேண்டும்.

### குணமாக்கல்

நற்செய்தியை மக்கள் கேட்பதற்கு அவர்களுக்குத் தடையாக இருக்கும் சாத்தானின் அனைத்துத் தடைகளையும் துணிவோடு அகற்ற வேண்டும் என்பது திருத்தூதர்களின் இரண்டாவது பணி. உடல்நோய், உளநோய் என்று மக்கள் பல சுமைகளோடு இயேசுவிடம் வந்தனர். இந்த சுமைகள் இவர்கள் இறைவனை அனுபவிப்பதற்குத் தடையாக வரக்கூடாது.

### இயேசுவில் தங்கியிரு

திருத்தூதர்கள் இயேசுவில் மட்டும் தங்கியிருக்க வேண்டும் என்பது அவரது போதனை. பணம், பொருள், செல்வாக்கு என்று திருத்தூதர்கள் நேரத்தை செலவழிக்கக்கூடாது. மாறாக, இயேசுவின் சக்தி, வழிகாட்டலில் தங்கியிருந்தால் அனைத்தும் வந்துசேரும். இது இயேசுவின் பணி. எனவே இயேசுவின் மனநிலை இவர்களுள் இருக்க வேண்டும். தமது புகழுக்காக அல்ல, இறைவனின் புகழுக்காகவே இவர்களது ஒவ்வொரு செயலும் இருக்க வேண்டும்.

இன்று இயேசுவின் பணியே எமது பணியாக மாறவேண்டும். அவரது மனநிலையே எமது மனநிலையாக மாறவேண்டும். அவரது நற்செய்தியே எமது வாழ்வாக மாறவேண்டும். அன்று அவர்களுக்கும் இன்று எமக்கும் இந்த பணி கொடுக்கப்படுகின்றது. நாம் எமது சூழலில் சமாதானத்தின் மக்களாக, ஒப்புரவின் மக்களாக வாழ்ந்துகாட்டினால் எமது குடும்பங்களிலும் பங்கிலும் மாற்றங்களைக் கொண்டுவரலாம். இறையாட்சியை மலரச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 ~ வெள்ளி - ஆடி 2008

ஓசே 14: 1-9 திபா 51: 1-2, 6-7, 10-12, 15 மத் 10: 16-23

### துன்பங்கள்

திருத்தூதர்கள் அனுப்பப்பட்டாலும் இயேசுவின் நற்செய்தியின் பெயரால் இவர்கள் எதிர்கொள்ளவேண்டிய துன்பங்கள் பற்றி இயேசு நற்செய்தியில் குறிப்பிடுகின்றார்.

### ஓநாய்-ஆடு

ஓநாய்க்கு விருப்பமான உணவு ஆடு. ஆடு ஓர் சாந்தமான மிருகம் என்பதால் இலகுவாக ஓநாய்களால் வேட்டையாடவும் முடியும். இந்த உதாரணத்தைக் கொண்டு தனது பெயரைத் தாங்கிச் செல்வோர் படக்கூடிய துன்பங்களை எடுத்துரைத்தார் இயேசு. ஆயினும் பாம்புகளைப்போல முன்மதியோடு செயல்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார். எதிர்ப்புகள் எங்கிருந்தும் வரலாம். என் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பார்கள் என்றார் இயேசு. குடும்பத்தில்கூட இந்த எதிர்ப்புகளும் குழப்பமும் வரலாம். ஆனால் எந்த சூழ்நிலையிலும் சீடர்களுள் இருந்து செயலாற்றுபவர் தந்தையின் ஆவியாரே என்று நம்பிக்கையூட்டினார் இயேசு.

### பணி வாழ்வில்...

திருத்தூதர்கள் தமது பணிவாழ்வில் பல சந்தர்ப்பங்களில் இந்த உண்மையை உணர்ந்தனர். பவுல் அழைக்கப்பட்டதே பிறஇனத்தாருக்கு நற்செய்தி கொண்டுசெல்ல (காண். திப 9:15). அவர் எதிர்கொண்ட துன்பங்கள் பல (2கொரி 12: 7~9). தனது வலுவின்மையை அவர் உணர்ந்திருந்தாலும் இயேசுவின் பாதுகாப்பை அவர் உணர்ந்து செயல்பட்டிருக்கின்றார். பல சந்தர்ப்பங்களில் விவேகமாகவும் நடந்து பல ஆபத்துகளிலிருந்து காப்பாற்றப் பட்டுள்ளார் (திப 22: 25, 23: 6).

கிறிஸ்தவ வாழ்வு என்பது பல சவால்களையும் முரண்பாடுகளையும் கொண்டது. ஆனால் அதிலும் ஓர் நிறைவு உண்டு. உண்மைக் கிறிஸ்தவ வாழ்வில் நிலைத்திருப்பவர் துன்புற்றாலும் இறைவனின் ஆசீர், பரிசு உண்டு என்பது உறுதி. உலகிற்காக வாழ்பவர்கள் பலர். இவர்களுக்கு மகிழ்ச்சியும் பரிசும் இருந்தாலும் அவை நிலையானவையல்ல. மாறாக, இறைவனின் பரிசு நிலைவாழ்வு. அதை அடைவதே எமது இலக்காக வேண்டும். நிலையற்றவைகளை விட்டுவிட்டு துன்பங்கள் பல அனுபவித்தாலும் நல்லவராக வாழ்ந்து காட்டுவோம். வாழ்வு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 ~ சனி - ஆடி 2008

எசா 6: 1-8 திபா 93: 1-2, 5 மத் 10: 24-33

### நம்பிக்கை

பணிக்கென அனுப்பப்படுபவர்கள் எதிர்கொள்ளவிருக்கும் துன்பங்களையும் சவால்களையும் குறிப்பிட்ட இயேசு யாருக்கும், எதற்கும் அஞ்ச வேண்டாம் என்று சீடர்களுக்கு நம்பிக்கையூட்டினார்.

### அஞ்ச வேண்டாம்

இயேசு தனது பணிவாழ்வின்போது அனுபவித்த துன்பங்கள் பல. அவரது சீடர்களே இதற்குச் சான்று. யூதத் தலைவர்கள், செபக்கூடத் தலைவர்கள், பரிசேயர், சதுசேயர், ஏரோதியர், மறைநூல் அறிஞர்கள், இவர்களால் தூண்டிவிடப்பட்ட சில யூத மக்கள் என்று பலரிடமிருந்தும் இயேசுவிற்கு எதிர்ப்புகள் வந்தன. இயேசுவையும் அவரது போதனைகளையும் நம்பவோ, ஏற்கவோ விரும்பாத காரணத்தால் இவர்கள் இயேசுவை தமக்கு எதிரியாகவே பார்த்தனர்.

இப்போது இயேசுவின் பெயரால் அவர் தாங்கிவந்த அதே நற்செய்தியை அவரது சீடர்கள் தாங்கிச் செல்லும்போது அவர்களுக்கும் அதே பழிச்சொற்களும், எதிர்ப்புகளும் வரும் என்பதை இயேசு நன்கறிந்து தன் சீடர்களை எச்சரித்தார். ஆனாலும் இறைவனின் செய்தியை கொண்டுசெல்லும் இவர்களுக்கு தீங்கு வராது எனும் நம்பிக்கையையும் கொடுத்தார். இவர்கள் முன்மதி உடையவர்களாக இருக்க வேண்டும்.

### யாருக்கு அஞ்சவேண்டும்

'ஆன்மாவைக் கொல்ல இயலாமல் உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்' என்றார் இயேசு. எமது உடல் அழிந்தாலும் ஆன்மாவை நாம் காத்துக்கொள்ள வேண்டும். தொடக்க கால கிறிஸ்தவர்கள் பல துன்பங்களை அனுபவித்தனர். இவர்கள் தமது, உடல் உயிரை இழந்தாலும் தமது ஆன்மாவைக் காத்துக்கொண்டனர். நிலைவாழ்வை அடைந்தனர்.

ஆண்டவர் காக்கிறார். நாமோ அவரது பாதையில் சென்று, அவரது கட்டளைப்படி வாழ்ந்தால் துன்பம் வந்தாலும் கவலைகொள்ளத் தேவையில்லை. எமது வாழ்வில் நாம் உண்மைக்கும் நீதிக்கும் சான்று பகர வேண்டும். அப்போது எமக்கு வெற்றியுண்டு. வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 15ம் ஞாயிறு

**13 - ஆடி 2008**

எசா 55: 10-11 திபா 65: 9-13 உரோ 8: 18-23 மத் 13: 1-23

## இறைவாக்கு

இறைவன் வாக்கு தவறாதவர். அவரது வாக்கு பயனளிக்காமல் திரும்பாது. அவரது வாக்கு, அவரது திட்டங்கள் பற்றிய மனித அறிவு குறைவுபட்டிருக்கலாம். ஆனால் அவர் தனது திட்டத்தின்படி, தனது விருப்பத்திற்கேற்ப, தனது நேர அட்டவணையின்படி அனைத்தையும் செயல்படச் செய்கின்றார் என்பதே உண்மை. இன்றைய ஞாயிறு வாசகங்கள் தரும் செய்திகளைத் தியானிப்போம்.

### இறைவாக்கின் சக்தி

மனிதர் நாம் எமது எண்ணங்களை வெளிப்படுத்த வார்த்தையைப் பயன்படுத்துகின்றோம். எமது உள்ளங்களில் எழும் எண்ணங்கள், ஏக்கங்கள், சோர்வுகள், கவலைகள், ஆசைகள், அபிலாஷைகள் எல்லாவற்றுக்கும் உருக்கொடுப்பது எமது வார்த்தையே. உறவு மலரவும், உறவு முறியவும் வார்த்தையை நாம் பயன்படுத்தலாம். இறைவனைப் புகழ்வதும், அவரைத் தூற்றுவதும் ஒரே நாவே. மனித வார்த்தைகள் இவ்வளவு சக்தி வாய்ந்தவை என்றால் இறைவனின் வார்த்தைகள் அதைவிட சக்தி வாய்ந்தவை என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

### பலனளிக்காமல் போகாது

எசாயா கூறுவதுபோல ஆண்டவரின் வாக்கு பயனளிக்காமல் திரும்பி வராது. மழையும் பனியும் எவ்வாறு வானத்திலிருந்து ஆரம்பமாகி நிலத்தினுள் புகுந்து பயிருக்குப் பயனளிக்கின்றதோ அதேபோல இறைவனின் வாக்கும் இருக்கும். புதிய இனத்தை உருவாக்குவேன் என்றவர் நிறைவேற்றினார் (தொநூ 12), இஸ்ரயேலை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் செல்வேன் என்றவர் அதையும் நிறைவேற்றினார். மெசியாவை அனுப்புவேன் என்று வாக்களித்தவர் அவரை அனுப்பிவைத்தார். இவ்வாறு பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் பல சம்பவங்கள், வாக்குறுதிகள். இயேசு தன் பணிவாழ்வின் இறுதியில் தந்த முக்கிய வாக்கு உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருப்பேன் (மத் 28: 20) என்பதாகும். இறைவனின் வாக்குறுதியில் நம்பிக்கை வைத்து நாம் வாழவேண்டும். படைத்த அவரே காப்பார் எனும் நம்பிக்கையில் எமது பங்களிப்பு என்ன என்பதைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவின் போதனைகள்

இயேசு தனது பணிக்காலத்தில் சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதெல்லாம் இறைவன், அவரது இரக்கம் பற்றி எடுத்துரைத்திருக்கின்றார். நல்வாழ்விற்கான பல உண்மைகளை உவமைகள் உதாரணங்கள் மூலமாக மக்களுக்குக் கூறியுள்ளார். புதுமைகள் மூலம் இறையாட்சி இவ்வுலகில் மலர்ந்துவிட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் மக்கள் இந்த உண்மைகளை தமது உள்ளங்களில் இருத்தி சிந்தித்து செயல்பட்டார்களா? பலர் அவரை நம்பி புதுவாழ்வு கண்டாலும் பலரை சாத்தான் கெடுத்துவிடுகின்றான். சட்டம், சடங்குகள், சம்பிரதாயம், கலாசாரம் என்ற பல காரணங்களைக் காட்டி இயேசுவையும் அவரது போதனைகளையும் நம்புவதிலிருந்து திசைதிருப்பி விடுகின்றான். இவ்வாறு ஓசன்னா என்று பாடிய அதே கூட்டம் அவனை சிலுவையில் அறையும் என்றும் கூச்சலிட்டது.

## வாக்குப் பயனளிக்க...

விதைப்பவர் உவமையின் மூலமாக விதைக்கப்படும் வார்த்தை எவ்வாறு பயனளிக்காமல் போகின்றது என்பதை இயேசு விளக்குகின்றார். விதையானது தன்னிலே நல்லது, பயனளிப்பது. ஆனால் அது வீசப்படுகின்ற சூழ்நிலை, நிலம் போன்றவற்றைப் பொறுத்தே விதை நிலத்தில் ஊன்றி வளர்ந்து பயனளிக்க முடியும். விதைகள் சில வளருமுன்பே, சில வளரத் தொடங்கும்போது, இன்னும் சில வளர்ந்தபின் பயனளிக்காமல் போய்விடுகின்றன.

எமது வாழ்வில் இறைவார்த்தையாம் விதை விதைக்கப்படுகின்றது. உலக ஆசைகள், கவர்ச்சிகள் எமது உள்ளங்களில் இறைவார்த்தை பயனளிக்காமல் செய்ய முயன்றாலும் அதற்கு நாமே முழு பொறுப்பை ஏற்க வேண்டும். இன்று முதிர்ந்த கிறிஸ்தவர்களாக நாம் வாழ முற்படும்போது உலகக் கவலைகளுக்கு இடம் கொடுக்காமல் கிறிஸ்தவ நம்பிக்கை, வாழ்வு பற்றிய சிந்தனைத் தெளிவோடு நாம் இருக்க வேண்டும்.

நாம் இறைவார்த்தையில் ஊன்றியிருந்து அதை வாழ்ந்துகாட்டினால் கடவுளின் பிள்ளைகளாகும் பேற்றை பரிசாகப் பெறுவோம் என்பதை தூய பவுல் தனது உரோமைய கிறிஸ்தவர்களுக்குக் கூறுகின்றார்.

## வாக்கை வாழ்வாக்குவோம்

இறைவாக்கு என்ன, உலகம் தரும் வாக்கு என்ன என்பதை நாம் தெளிவாக அறியும் நிலையில் இருக்கின்றோம். இவற்றை நாம் இனம்கண்டு இறைவாக்கிற்கு முக்கியத்துவம் கொடுத்து இறைவாக்கை வாழ்ந்து காட்டுவது எமது கடமையாகும். உணர்ந்து அர்ப்பணித்து செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 ~ திங்கள் - ஆடி 2008

எசா 1: 11-17 திபா 50: 8-9, 16-17, 21, 23 மத் 10: 34-11: 1

## அமைதி

இயேசு அமைதியின் மன்னர். ஆனால் அமைதியை அல்ல வாளையே உலகிற்குக் கொண்டுவந்தேன் என்று இன்றைய நற்செய்தியில் குறிப்பிடுவது ஆச்சரியமாகப் படலாம். அதன் ஆழமான அர்த்தம் என்ன என்பதைப் பற்றித் தியானிப்போம்.

### அமைதியின் மன்னர்

இயேசு அமைதியின் மன்னர் என்பதை பல இறைவாக்குகள் குறிப்பிடுகின்றன (எசா 9: 6~17). 'உலகில் அவர் தயவு பெற்றவர்க்கு அமைதி ஆகுக' என்று குழந்தை இயேசுவின் பிறப்பின்போது வானதூதர்கள் பாடினர். 'அமைதியை விட்டுச் செல்கிறேன்' என்று இயேசுவே தன் சீடர் களுக்குக் கூறியிருந்தார் (யோவா 14: 27). 'அவரே நமக்கு அமைதி தருபவர்' என்றார் பவுல் (எபே 2: 14). அமைதியின் அடையாளமாக வந்த இயேசு அதற்கு முரண்பட்ட கருத்துகளை வெளியிட்டதன் காரணமென்ன?

### கிறிஸ்தவம் தரும் சவால்கள்

ஆண்டவரின் போதனைகளை ஏற்று வாழ்வில் குறைவின்றிக் கடைப்பிடிக்கும் ஒருவருக்கு உள அமைதி இருக்கும் என்பது உண்மை. ஆனால் அவருக்கு அதே கிறிஸ்தவ வாழ்வின் காரணமாகப் பல எதிர்ப்புகள், சவால்கள், தடைகள், வேதனைகள் வரும் என்பதும் உண்மை. இதுவே இயேசு குறிப்பிடும் வாள். கிறிஸ்தவ வாழ்வு வாழும் ஒருவர் உலகத்தின் சிந்தனைகளோடு செல்ல முடியாது. அவரது வாழ்வு உலகத்திற்குத் தடையாகவோ சவாலாகவோ இருக்கும். இயேசுவின் போதனைகள் அன்று யூதருக்கு சவாலாகவே இருந்தது. அதேபோல் கிறிஸ்தவரின் வாழ்வும் உலகினருக்கு சவாலாகவே இருக்கும். வெளிப்படையாக அமைதி அற்ற நிலை காணப்பட்டாலும் உள்ளத்தில் இறையமைதி அவருள் குடிகொள்ளும். தொடக்ககால கிறிஸ்தவர்களின் அனுபவம் இது. இந்த சவால்களையும் ஏற்று ஒருவர் வாழ்ந்தால் இறையமைதியை அனுபவிக்கலாம்.

எமது வாழ்வில் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்கின்றோம் என்பது முக்கியமல்ல. மாறாக, இறைவனுக்கு ஏற்றவர்களாக அவரது போதனைகளுக்கு ஏற்ப வாழ்கின்றோமா என்பதே முக்கியமாகும். இறைவனின் திட்டத்திற்கேற்ப வாழ்வோம். அவரே எமக்கு அமைதி தருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 ~ செவ்வாய் – ஆடி 2008

எசா 7: 1-9 திபா 48: 1-7 மத் 11: 20-24

### தீர்ப்பு

இயேசு மனம்மாறாத நகர்களைக் கண்டிக்கின்றார். 'ஐயோ! உனக்குக் கேடு!' என்பது இயேசுவின் கடினமான வார்த்தைகள். ஏனெனில் இங்கு வாழும் மக்கள் இயேசுவின் போதனைகளைக் கேட்டும் மனம்திரும்பவில்லை.

**தீர், சீதோன், சோதோம்**

இவை பழைய ஏற்பாட்டில் நாம் காணும் நகரங்கள். இங்கு வாழும் மக்கள் மனம்மாறாததால் இறைவனால் தண்டிக்கப்பட்டனர். தீர் என்பது அழகான நகர். இந்நகரின் அழகு அதன் இறுமாப்பிற்கு அடிப்படையானது. இதனால் இம்மக்கள் இறைவனை மறந்தனர். பாவத்தில் வீழ்ந்தனர். இவ்வாறு தீர், சீதோன், சோதோம் நகர மக்கள் தமது பாவங்களாலும் மனம்மாற மறுத்ததாலும் இறைவனின் தண்டனையைப் பெற்றனர். இங்கு பாவம் மலிந்திருந்தது (காண். எசா 23, எசே 26: 3-7, 28: 12-20).

**கொராசின், பெத்சாயிதா, கப்பர்நாகும்**

இவை மூன்றும் கலிலேயாக் கடல் ஓரமாக அமைந்துள்ள நகர்கள். இயேசுவும் தன் பணியைக் கலிலேயாக் கடலை அண்மித்த பகுதிகளில் அதிகம் செய்தார்.

**பெத்சாய்தா:** இங்கு பார்வையற்ற ஒருவரை இயேசு நலமாக்கினார் (மாற் 8: 22), பிலிப்பு, அந்திரேயா, பேதுரு ஆகியோர் பெத்சாய்தா ஊரினர் (யோவா 1: 44, 12: 21).

**கப்பர்நாகும்:** இங்கு நூற்றுவர் தலைவரின் மகனைக் குணமாக்கினார் இயேசு (மத் 8: 5). தீய ஆவி பிடித்தவரையும் குணமாக்கினார் (மாற் 1: 21).

இங்கு மக்கள் இயேசுவின் பல நல்ல செயல்களைக் கண்டிருந்தும் மனம்மாறாமல் இருந்தனர். தீர், சீதோன், சோதோம் நகர்களோடு இம்மக்களை ஒப்பிடும்போது இவர்கள் இயேசுவை நேராகக் கண்டுள்ளார்கள், அவரது போதனைகளைக் கேட்க சந்தர்ப்பங்கள் பல இருந்தன, அவரது வல்ல செயல்களையும் கண்டிருக்கிறார்கள். இவற்றையும் தாண்டி இவர்கள் மனம்மாற வில்லை என்றால் தண்டனை நிச்சயம்.

இயேசு அனுபவங்கள் பெறுவதற்கும், இயேசுவை அறிந்துகொள்ளவும் எமக்கு விவிலியம், செபம், தியானம், திருப்பலி, மறைக்கல்வி என்று பல சந்தர்ப்பங்கள். நாமும் மனம்மாறாவிட்டால் ஐயோ! எமக்கும் கேடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 ~ புதன் – ஆடி 2008

எசா 10: 5-7, 13-16 திபா 94: 5-10, 14-15 மத் 11: 25-27

## கார்மேல் அன்னை திருவிழா

இறைவனை அறிய, இறைவனை அடைய இயேசுவே ஒரே வழி என்பதை இன்றைய நற்செய்தி விளக்குகின்றது. அவரை அறிய கிறிஸ்தவர் நாம் பாக்கியம் பெற்றுள்ளோம்.

### தந்தை-மகன் உறவு

இயேசு தனது இறைத்தந்தையோடு எப்போதும் எண்ணத்தில், செபத்தில் இணைந்திருந்தார். அதுவே அவரது பணிவாழ்வின் வெற்றியுமாகும். இந்த ஒன்றிப்பு இயேசுவிற்கு பெரிதும் அவசியமாகியது. இயேசுவின் தனித்த செபம் இதற்கு சிறந்த உதாரணமாகும். தந்தையும் தனது மகன் பற்றிய எண்ணங்களை மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். இயேசுவின் திருமுழுக்கு (மத் 3: 13~17), இயேசு தோற்றம் மாறிய சம்பவம் (மத் 17: 1~5) சிறந்த உதாரணம். இவ்வாறு தந்தை~மகன் உறவு மிகவும் ஆழமான உறவாக இருந்தது. இயேசுவின் மூலம் நாம் இறைத்தந்தையை அறிய எமக்கு சந்தர்ப்பத்தை இயேசு ஏற்படுத்தித் தருகின்றார். 'நீங்கள் என்னை அறிந்திருந்தால் தந்தையையும் அறிந்திருப்பீர்கள்' என்றும், 'என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்' என்றும் இன்னொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார் இயேசு (காண். யோவா 14: 7~9). தந்தையும் இயேசுவும் ஒன்றே. தந்தையையும் அவரது அன்பு, இரக்கத்தையும் இயேசு தனது வாழ்வு, போதனைகள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனால் தமக்கு மட்டும் சட்டமும், யூத சம்பிரதாயங்களும் தெரியும் என்று இறுமாப்போடு செயல்பட்டவர்கள் இயேசுவையோ இறைத்தந்தை யையோ அறிந்துகொள்ள முடியவில்லை. இன்று இயேசு வெளிப்படுத்தும் தந்தையை அறியவும், அறிந்து அவரைப் புகழவும் நாம் பாக்கியம் பெற்றவர்களா?

### தூய உள்ளத்தோர்

'தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்' (மத் 5: 8). இறைவனைக் காண எமது உள்ளங்கள் தூயதாக மாறட்டும். குழந்தை உள்ளம் கொண்டவர்களாக நாம் மாறி அவரே எமக்கு எல்லாம் என்று நம்பி செயல்படும்போது இறைவனை நாமும் அனுபவிக்கப் பாக்கியம் பெற்றவர்களாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 ~ வியாழன் – ஆடி 2008

*எசா 26: 7-9, 12, 16-19   திபா 102: 12-14, 15-18, 20   மத் 11: 28-30*

## ஆறுதல்

பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்போரை அழைக்கின்றார் இயேசு. ஆறுதல் அளிப்பவர் அவர். அவரிடம் செல்ல எமக்கு அழைப்பு உண்டு.

### பெருஞ்சுமை

இஸ்ரயேல் மக்கள் கடவுளின் மக்கள், கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள், அழைக்கப்பட்ட மக்கள் என்று பெருமை பாராட்டிக்கொண்டாலும் அவர்களது வாழ்வில் தாமே ஏற்றிவைத்த சுமைகள் பல இருந்தன.

***மோசேயின் சட்டங்கள்:*** யூதத் தலைவர்கள் மோசே கொடுத்த சட்டங்களுக்கு பல விளக்கங்கள் கொடுத்து அவற்றை மக்களுக்குச் சுமையாக்கிவிட்டனர். மக்களை வழிநடத்த சட்டங்கள் இருந்தாலும் அவையே பாமர மக்களுக்குச் சுமையாகியது. 'திருச்சட்டத்தைப் பொறுத்த மட்டில் நான் இறந்தவன் ஆனேன்' என்றார் தூய பவுல் (கலா 2: 19).

***வறுமை:*** பாலஸ்தீனச் சூழ்நிலையில் பலருக்குச் செல்வம் இருந்தாலும் உரோமையருக்கு வரி, வாழ்க்கைச் செலவு என்று பலர் வறுமையால் துன்பப் பட்டனர். இதிலிருந்து மீள முடியாத நிலையில் மக்கள் இருந்தனர்.

***நோய், சாத்தானின் கொடுமை:*** உடல் வாதைகளாலும் சாத்தானின் பிடியிலும் தவித்தவர்களும் பலர். எனவேதான் இயேசு நோய்களைக் குணமாக்கு கிறார் என்று கேள்விப்பட்டதும் மக்கள் திரள்திரளாக அவரிடம் வந்தனர்.

***ஒதுக்கப்பட்டவர்கள்:*** பாவிகள், நோயாளிகள் சமூகத்தால் ஒதுக்கப்பட்டனர். அடுத்தவரோடு எந்த உறவும் வைத்திருக்க இவர்களால் முடியாது.

### இயேசுவைத் தேடி

சட்டம், ஏழ்மை, நோய், புறக்கணிப்பு என்று துன்பப்பட்ட மக்களுக்கு இயேசுவின் போதனைகள் நல்வழியைக் காட்டின. அவரது சக்திமிக்க செயல்கள் மக்களின் நோய்களிலிருந்து அவர்களை விடுவித்தன. ஆச்சரியப் பட்டவர்கள் பலர். அவரிடம் வந்து வாழ்வு பெற்றவர்கள் பலர். இயேசுவும் இவர்களைத் தன்னண்டை அழைத்தார். அவரது கட்டளைகள் அழுத்தாது, அவர் காட்டும் வழி நிலையானது.

கிறிஸ்தவர் நாமும் இயேசுவின் கட்டளைகளை ஏற்று அதன்படி வாழ முனைந்தால் உலகம் பல சுமைகளைத் தந்தாலும் இயேசுவின் அன்பு அந்த சுமைகளை இறக்கிவிடும். நம்புவோம். அவரிடமே வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 ~ வெள்ளி – ஆடி 2008

எசா 38: 1–8, 21–22   திபா 38: 10–12, 16   மத் 12: 1–8

### ஓய்வுநாள்

ஓய்வுநாளில் சீடர்கள் கதிர்களைக் கொய்து உண்டதைக் கண்ட பரிசேயர் இயேசுவிடமே முறையிட்டனர். இயேசுவும் அவர்களுக்கு சரியான விளக்கத்தைக் கொடுத்தார்.

### ஓய்வுநாள் சட்டங்கள்

கடவுளின் சட்டத்தின் அடிப்படையிலும் யூதர்களின் கலாசாரத்தின் அடிப்படையிலும் 39 வகையான செயல்கள் ஓய்வுநாளில் செய்யத்தகாதவை என்று பரிசேயர் வகுத்திருந்தனர். அறுவடை செய்வதும் தடைசெய்யப்பட்ட செயல்களுள் ஒன்று. இயேசுவின் சீடர்கள் கதிர்களைக் கொய்து தம் கைகளில் தேய்த்து தின்றது அறுவடைக்குச் சமம் என்று பரிசேயர் விளக்கம் கொண்டனர். ஆனால் சீடர்களோ தாம் பசியாக இருந்ததால் மட்டுமே இதனைச் செய்தனர். அவற்றை விற்று வருமானம் பெறவேண்டும் என்பதற்காக அல்ல. பரிசேயருக்கு சட்டமே முக்கியமாகத் தோன்றியது. அவர்கள் மக்கள் நிலை அறிந்து இரக்கத்திற்கு இடமளிக்கவில்லை.

### இயேசுவின் பதில்

தாவீதின் செயலை உதாரணமாகக் காட்டி இயேசு தனது மனநிலையை வெளிப்படுத்தினார். 1சாமு 21: 1–6 பகுதியை அடிப்படையாகக் கொண்டது இயேசு தரும் விளக்கம். ஆலயத்தில் ஒவ்வொரு வாரமும் பழைய அப்பங்கள் அகற்றப்பட்டு பதிலாக புதிய அப்பங்கள் அங்கு வைப்பது வழமை. பழைய அப்பங்களை குருக்கள் மட்டுமே உண்ணலாம் எனும் சட்டமும் இருந்தது. ஆயினும் அங்கு அவர்கள் பசியோடு இருந்ததால் அவர்கள் அந்த புனித அப்பங்களை உண்டனர்.

இயேசு இந்த உதாரணத்தைத் தந்து பலி, ஓய்வுநாள், ஆலயம் இவற்றைவிட மானிடமகன் உயர்ந்தவர் என்பதை வலியுறுத்தினார். சட்டங்கள், ஓய்வுநாள் நடைமுறைகள், வழிபாடுகள் எல்லாம் மக்களை ஆண்டவரிடம் அழைத்துச் செல்லவேண்டும். அவரே மக்கள் மத்தியில் இருக்கும்போது சடங்குகளும், பலிகளும் அர்த்தமற்றதாகிவிடும்.

ஆண்டவரில் எமது நம்பிக்கை உறுதியாக இருக்க வேண்டும். அப்போது நாம் சட்டங்களுக்கு மட்டுமல்ல, மனிதருக்கும் மதிப்புக் கொடுப்போம். பலியைவிட இரக்கம் மேலானது என்பதை உணர்ந்து வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 _ சனி _ ஆடி 2008

*மீக் 2: 1-5 திபா 10: 1-4, 7-8, 14 மத் 12: 14-21*

## இயேசு இதய அரசர்

இயேசுவைப்பற்றி எசாயா இறைவாக்கினர் முன்னுரைத்ததை மத்தேயு குறிப்பிடுவதை இன்றைய நற்செய்தியில் வாசிக்கின்றோம். மக்கள் இயேசுவை அரசராக எதிர்பார்க்க இயேசுவோ அவர்கள் எதிர்பார்த்த அரசர் தான் இல்லை என்பதை தன் வாழ்வில் காட்டினார்.

### அரசியல் அரசர்

இயேசுவே மெசியா. எதிர்பார்க்கப்பட்டவர். இயேசு உலகிற்கு மனிதனாக வந்த காலத்தில் இஸ்ரயேல் உரோமையரின் ஆட்சியில் இருந்தது. இந்நிலையில் யாருக்கும் அடிபணிவதை வெறுத்த யூதர்கள் தாவீதின் மகனாகிய மெசியா உலக அரசுகளை வென்றெடுத்துத் தம்மை அடிமை நிலையிலிருந்து மீட்டு நிலையாக அரசாள்வார் என்று எதிர்பார்த்தனர். அவரை அரசராக்கவும் முனைந்தனர் (காண். யோவா 6: 14-15). அவரிடம் அதைப்பற்றி வெளிப்படையாகவே கேட்டனர் (காண். திப 1: 6). சீடர்களில்கூட தீவிரவாதப் போக்குடையவர்கள் அவர் எப்போது மக்களைத் திரட்டி உரோமையரின் ஆட்சியைக் கைப்பற்றுவார் என்று எதிர்பார்த்தவண்ணம் இருந்தனர். ஆனால் இயேசுவின் ஆட்சி வித்தியாசமாகவே அமைந்தது.

### ஆன்மீக அரசர்

இன்றைய நற்செய்தியில் குறிப்பிடப்படும் எசாயா இறைவாக்குப் பகுதி இயேசுவின் அரசாட்சி பற்றி முன்னறிவிக்கின்றது (எசா 42: 1-4). இவர் அமைதியின் மன்னர். உலகம் சிந்திக்கும் போர், சண்டை, சச்சரவு, அரசாட்சி, மணிமுடி, செங்கோல் போன்றவை அவரது மனநிலையில் இல்லை. மாறாக, அவர் இறைவனிடமிருந்து பாவத்தின் காரணமாகப் பிரிந்துபோன மானிடத்தை மீண்டும் இறைவனோடு ஒப்புரவாக்கும் நோக்கத்தோடு செயல்படுவார். சாத்தானை வென்று மக்களது மனங்களில் குடிகொண்டு அவர்களுக்கு ஆன்மீக விடுதலை அளிப்பார். அவர் மக்களின் உள்ளங்களை ஆழுகின்ற ஒரு இதய அரசராகவே விளங்குவார்.

இயேசு எனது உள்ளத்தை ஆட்சிசெய்ய வேண்டும். எனது உள்ளத்தில் இயேசு இருந்தால் எனது சிந்தனை, மனநிலை அனைத்தும் அவரைப் போன்றதாகவே அமைந்துவிடும். அப்போது உறவு வளரும், வாழ்வு வளமாகும், நம்பிக்கை பிறக்கும், நிலைவாழ்வு நிச்சயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 16ம் ஞாயிறு

**20 _ ஆடி 2008**

சாஞா 12: 13, 16–19  திபா 86: 5–6, 9–10, 15–16  உரோ 8: 26–27  மத் 13: 24–43

## இறைவழிகாட்டல்

உலகம் நல்லவர் தீயவர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும் இறைவன் நீதியுள்ளவர். அவர் உலக நீதியின்படி மக்களைத் தண்டிக்காமல் அவர்களது உள்ளங்கள், மனநிலைகளை அறிந்து அதற்கேற்ப நீதி வழங்குகிறார் எனும் உண்மைகளை இன்றைய ஞாயிறு வாசகங்கள் எமக்கு தெளிவாகக் கற்பிக்கின்றன.

### இறைவனின் குணவியல்புகள்

இறைவனின் குணவியல்புகளை சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசிக்கின்றோம். அவர் நீதியுள்ளவர். இது அவரது தனித்துவ குணங்களில் ஒன்று. உலக நீதியோடு ஒப்பிடும்போது உலகம் மனிதனின் வெளியரங்க செயல்களை அடிப்படையாகக் கொண்டு நீதிவழங்குகின்றது. ஆனால் ஆண்டவரின் நீதி உலக நீதியிலிருந்து வேறுபட்டது. இறைவனின் நீதி அன்பையும் இரக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவேதான் ஆசிரியரும் 'நீர் அனைத்தையும் நீதியோடு ஆண்டுவருகின்றீர்' (12: 15) என்றும் 'கனிவோடு தீர்ப்பு வழங்குகின்றீர், மிகுந்த பொறுமையோடு எங்களை ஆள்கிறீர்' (12: 18) என்றும் குறிப்பிடுகின்றார். விடுதலைப் பயண நூலிலும் இறைவன் 'இரக்கமும் பரிவும் உள்ளவர், சினம் கொள்ளத் தயங்குபவர், பேரன்பு மிக்கவர், நம்பிக்கைக்குரியவர்' (விப 34: 6) என்று வாசிக்கிறோம்.

### எமது வாழ்வில் நீதி

இறைவன் நீதி தவறாதவர். அவர் இரக்கத்தோடு மக்களை ஆள்கிறார் எனும் உண்மையை நாம் அறிந்திருந்தும் எமது வாழ்வில் இறைவனின் நீதியை வாழ்ந்துகாட்ட முனைகின்றோமா? நாம் அவரது மக்கள், அவரது நீதியை அனுபவிக்கும் பிள்ளைகள். எமது குற்றங்கள் ஒவ்வொன்றுக்கும் இறைவன் தண்டனை கொடுக்க வேண்டும் என்றால் எம்மால் தாங்க முடியுமா? இறைநீதி எமது வாழ்விலும் வெளிப்பட வேண்டும். எமது வாழ்வில் நாம் இறைவனின் இரக்கம், அன்பு, நீதியை வாழ்ந்துகாட்டும்போது அதுவே அவருக்கு நாம் காட்டும் நன்றியாகும். எமது வாழ்வை ஆராய்ந்து பார்த்து அதில் இறைவனின் இரக்கத்தை அனுபவித்த சந்தர்ப்பங்கள் எத்தனை, நாம் இரக்கம் காட்டிய சந்தர்ப்பங்கள் எத்தனை என்பதை அறிந்துகொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதரின் வாழ்வு

மத்தேயு 13ம் அதிகாரத்தில் வரும் அனைத்து உவமைகளும் இறையாட்சி பற்றி விளக்கும் உவமைகளாகும். எமது எதிர்பார்ப்புகளைவிட உண்மையில் இறையாட்சி என்றால் என்ன என்பதை அவை விளக்குகின்றன. இறையாட்சி என்பது இடம் சார்ந்த ஒன்றல்ல, மாறாக, அது ஆன்மீகம் சார்ந்த ஒன்று. இங்கு இறைவனே ஆள்கிறார், இந்த ஆட்சி நிலையானது. கிறிஸ்துவை நம்பி ஏற்று வாழும்போது நாமும் அதில் அங்கத்துவம் பெறுகிறோம்.

மனித வாழ்வில் எவ்வாறு நன்மையும் தீமையும் கலந்துள்ளது, நல்லவர்களும் தீயவர்களும் ஒன்றாக வாழ்கின்றார்கள் என்பதை இயேசு வயலில் தோன்றிய களைகள் உவமையின் மூலமாக விளக்கினார். களைகளை எடுக்கும்போது நல்ல பயிர்களும் அழியலாம் என்பதற்காக விவசாயி அவற்றை வளரவிட்டு கடைசியில் இலகுவாகப் பிரித்தெடுத்து களைகளை நெருப்பில் போட்டு அழித்துவிடுவார். உலகம் பல விடயங்களைக் கொண்டுள்ளது. அவற்றில் நன்மையும் உண்டு தீமையும் உண்டு. கிறிஸ்தவர்கள் உலகில் வாழ்ந்தாலும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல என்ற உண்மையையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஆயினும் சில தீயவர்களால் நல்லவர்களும் பாழாகும் நிலையும் உண்டு. இவர்களை வயலில் தோன்றும் களைகளுக்கு இயேசு ஒப்பிட்டார். நல்லவர்கள் தீயவர்களை இனம்கண்டு விழிப்பாயிருக்க வேண்டும். தீமை தம்மோடு வாழ்ந்தாலும் தீமையிலிருந்து நல்லவர்கள் விலகி நிற்கவேண்டும் என்பதும் தெளிவு. அதேவேளை எமக்குள் இருக்கும் களைகளாகிய அனைத்துத் தீமைகளிலிருந்தும் விடுபட நாம் முயலவேண்டும். தீயவர்கள், தீயவைகள்~ இரண்டு விடயங்கள் பற்றியும் நாம் தெளிவாயிருந்து இறைவனின் நீதியை, இரக்கத்தை, அன்பை வாழ்ந்துகாட்ட வேண்டும்.

## வாழ்ந்துகாட்ட இறையுதவி

உலகை மீட்டு தந்தையோடு மீண்டும் ஒப்புரவாக்கும் நோக்கத்தில் இவ்வுலகிற்கு வந்த இயேசு அதை சரிவர செய்துமுடித்தார். எம்மைத் தொடர்ந்து வழிநடத்த தூய ஆவியின் வழிகாட்டலையும் தந்தார். இயேசுவின் இந்த செயலால் நாம் தூய ஆவியின் வழிகாட்டலை உணர்ந்து வாழ்கிறோம்.

இறைவனின் இரக்கத்தையும் அவரது வழிகாட்டலையும் பெறுகின்ற நாம் வாழ்ந்துகாட்ட வேண்டும். எம்மைச் சுற்றி இருக்கும் தீமைகளுக்கு இடம்கொடுக்காமல் விழிப்பாயிருந்து அவை தரும் சவால்களை வென்றெடுக்க வேண்டும். இவ்வாறு நம்பிக்கையிலும், அன்பிலும் வாழ்ந்தால் எமது வாழ்வு வளம்பெறும். எனவே இறைவனுக்கு ஏற்றவர்களாக வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 ~ திங்கள் – ஆடி 2008

மீக் 6: 1-4, 6-8 திபா 50: 5-6, 8-9, 16-17, 21, 23 மத் 12: 38-42

## விபசாரம்

இயேசுவை நம்புவதற்கு அவரிடமே அடையாளம் கேட்டு மக்கள் அவரை சோதித்தனர். இயேசுவோ யோனாவைத் தவிர வேறு அடையாளம் இல்லை என்றும், அவரே யோனாவிலும் சிறந்த அடையாளம் என்றும் பதிலளித்தார். ஆனால் இத் தலைமுறையினரைப் பற்றிய அவரது சொற்கள் கடுமையானவை. தியானிப்போம்.

### விபசாரத் தலைமுறை

'இந்தத் தீய விபசாரத் தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர்' என்றார் இயேசு. இறைவன் ஆணையும் பெண்ணையும் இணைத்துத் திருமணம் எனும் தூய உறவை ஏற்படுத்தினார். இதிலிருந்து விடுபட்டு அடுத்தவரது மனைவி/கணவரோடு உறவுகொள்வோர் விபசாரர். தண்டனைக்குரியவர். யூத சமூகத்தில் இந்த செயலில் ஈடுபடுவோருக்குக் கடும் தண்டனையும் இருந்தது. 'விபசாரம் செய்யாதிருப்பாயாக' என்பது பத்துக் கட்டளைகளுள் ஒன்று (விப 20: 14). அடுத்தவரை இச்சையுடன் நோக்குவதே விபசாரம் (மத் 5: 28) என்பது இயேசுவின் போதனை. ஆனால் தனது காலத்து மக்களை இயேசு விபசாரத் தலைமுறையினர் என்றழைத்ததன் பொருள் என்ன?

பழைய ஏற்பாட்டில் சிலைவழிபாடு விபசாரத்திற்கு ஒப்பிடப்பட்டது. ஓசேயா நூல் முழுவதும் இதையே குறிப்பிடுகின்றது. கடவுளைவிட்டுப் பிரிந்து வேறு தெய்வங்களை நாடிய மக்கள் கடவுளின் தண்டனைக்கு ஆளாவார்கள் என்பது இறைவாக்கு. அதேபோல கடவுளின் இடத்தில் உலகையோ, சட்டங்களையோ, பொருட்களையோ, செல்வங்களையோ வைப்பதும் சிலைவழிபாட்டுக்கு ஒப்பானதே. எனவே சட்டம், தற்பெருமை, புகழ் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்த யூதத் தலைமை விபசாரத்திலேயே இருந்தது எனலாம்.

### எமது முன்னுரிமை

எமது கிறிஸ்தவ வாழ்விலும் நாம் எதற்கு முன்னுரிமை கொடுக்கிறோம். வாழ்வின் மூலம் கடவுளைப் புகழ வேண்டிய நாம் எமது புகழை நாடி நிற்கின்றோமா? எமது எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் இறைவனின் விருப்புக்கு ஏற்ப அமைந்துள்ளனவா? அன்று அடையாளம் தர மறுத்த இயேசு இன்று எமக்கும் அடையாளம் தர மறுக்கலாம். அவரே எமக்கு முழுமையான அடையாளம் என்பதை ஏற்று வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 ~ செவ்வாய் – ஆடி 2008

இபா 3: 1–4 திபா 63: 1–5, 7–8 யோவா 20: 1, 11–18

## தூய மகதலா மரியா நினைவு

உயிர்த்த ஆண்டவரைப் பற்றிய செய்தியை சீடர்களுக்குச் சொல்லவும் உயிர்த்த ஆண்டவரை எதிர்கொள்ளவும் மகதலா மரியாவுக்குப் பாக்கியம் கிடைத்தது. ஆனால் அவர் ஆண்டவரின் உயிர்ப்பை நம்பினாரா?

### உயிர்ப்பும் மரியாவும்

யோவான் 20ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டபடி மகதலா மரியா வாரத்தின் முதல் நாளன்று கல்லறைக்குச் சென்றார். அங்கு கல் புரட்டப்பட்டிருந்தது. அப்போது ஆண்டவர் சொன்னபடியே உயிர்த்துவிட்டார் என்று அவர் எண்ணவில்லை. பயந்த நிலையில் பதட்டத்துடன் ஆண்டவரின் உடலை யாரோ திருடியிருக்க வேண்டும் எனும் எண்ணமே அவரது உள்ளத்தில் இருந்தது. ஓடிவந்து சீடர்களுக்குக் கூறினார்.

இந்நிலையில் உயிர்த்த கிறிஸ்து அவருக்குத் தன்னை வெளிப்படுத்திய போது மகதலா மரியாவால் அவரை அடையாளம் காணமுடியவில்லை. ஏனெனில் ஆண்டவரை யாரோ திருடிவிட்டிருக்கலாம் என்பதே அவரது மனதில் இருந்தது.

### ஆண்டவரும் உயிர்ப்பும்

ஆண்டவர் தன்னை வெளிப்படுத்தியபோது மரியா அவரை அறிந்து கொள்ளவில்லை. ஆண்டவர் அவரோடு பேசத்தொடங்கியும்கூட அவரால் அடையாளம் காணமுடியவில்லை. ஆனால் 'மரியா' எனும் இயேசுவின் வார்த்தையைக் கேட்டதும் அவர் 'ரபூனி" என்றார். இவ்வாறு மரியா ஆண்டவரைத் தேடி நம்பிக்கையோடு வந்தார். ஆண்டவரும் தன்னை மரியாவுக்கு வெளிப்படுத்தினார்.

மகதலா மரியாவின் இந்த உயிர்த்த ஆண்டவரின் அனுபவம் கிறிஸ்தவர் எமக்கு சிறந்த உதாரணமாகும். ஆண்டவரை நாமும் தேடுகின்றோமா? உண்மையாக ஏக்கத்தோடும், நம்பிக்கையோடும், ஆர்வத்தோடும் தேடுகின்றோமா? அவரைத் தேடி நாம் வரும்போது அவரே தன்னை வெளிப்படுத்துகின்றார். ஆண்டவரை விவிலியத்தில் தேடுவோம், வழிபாட்டில் தேடுவோம், நற்கருணையில் தேடுவோம், மனிதரில் தேடுவோம், தேவையில் இருப்போரில் தேடுவோம் அவரே தன்னை எமக்கு வெளிப்படுத்துவார். நம்பிக்கையோடு செயல்படுவோம். வெற்றிகாணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 ~ புதன் – ஆடி 2008

எரே 1: 1, 4–10 திபா 71: 1–6, 15, 17 மத் 13: 1–9

### இறைவாக்கு

விதைப்பவர் உவமையின் மூலமாக தனது வாக்கை மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொண்டு பலன்கொடுக்கிறார்கள் என்று விளக்குகின்றார் இயேசு.

### விதையாம் வார்த்தை

இறைவார்த்தை விதைக்கப்படுகின்றது. உலகம் தொடங்கியதிலிருந்து இறைவன் பலர் மூலமாகத் தனது எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளார். உடன்படிக்கை, வாக்குறுதிகள், வழிகாட்டல்கள், கட்டளைகள், அழைப்பு போன்ற பல காரணங்களுக்காக இறைவார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இறைவன் தனது வாக்கின் மூலமாக உலகைப் படைத்தார். ஆண்டவரது அழைப்பை ஏற்றவர்கள் உள்ளனர், மறுத்தவர்களும் உள்ளனர். தனது மக்கள் தவறுசெய்தபோது அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டார் ஆண்டவர். அவர் மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டை, வளமான வாழ்வை வாக்களித்துள்ளார். இறைவாக்கினர் மூலமாக வழிகாட்டலையும் கொடுத்துள்ளார். அனைத்திற்கும் மேலாக மனமாற்றம், ஒப்புரவுக்காக அழைப்பையும் விடுத்துள்ளார்.

### வார்த்தை பயனளித்தல்

இறைவனின் வாக்கு யூதர்களுக்கு வந்தது. மனமாற்றம் புதுவாழ்வுக்கான வாக்காக இறைவாக்கு அமைந்திருந்தாலும் யூத மக்கள் இறைவார்த்தையைவிட உலகம் சொல்லும் கருத்துக்கே கவனம் கொடுத்தனர். ஏனெனில் இறைவாக்கு பல சவால்களை முன்வைத்தது. நடைமுறைக்கு கடினமாகத் தோன்றியது. எனவே மக்கள் இறைவாக்கையும் அதைக் கொண்டுவந்தவர்களையும் ஏற்க மறுத்தனர். சிலருக்கு ஆரம்பத்தில் இறைவார்த்தையில் நாட்டம் இருந்தாலும் கலாசாரம், சம்பிரதாயம், யூத சட்டங்கள், உலக நாட்டம் என்று பல தடைகள் வந்தபோது அவர்கள் இறைவாக்கை நழுவ விடுகின்றனர். இவ்வாறு இறைவாக்கு மனிதர் உள்ளங்களில் விதைக்கப்பட்டாலும் அவை முழுமையாகப் பயனளிக்கவில்லை.

நாமும் இறைவாக்கைக் கேட்கிறோம். தனித்து, வழிபாடுகளின்போது இறைவாக்கிற்குச் செவிசாய்த்தாலும் அவை எமது உள்ளங்களில் குடி கொள்ளவும் செயல்படவும் எமது ஆர்வத்தைக் காட்டுகின்றோமா? இறைவாக்கு எமது வாழ்வாக வேண்டும். அதுவே கிறிஸ்தவ வாழ்வின் முழுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 ~ வியாழன் - ஆடி 2008

எரே 2: 1-3, 7-8, 12-13 திபா 36: 5-10 மத் 13: 10-17

### உவமைகள்

உவமைகள், கதைகள் எல்லாம் சொல்லப்படும் செய்தி புரிந்து கொள்வதற்கே. இயேசுவும் தனது போதனைகளில் பல உவமைகளைக் கூறியுள்ளார். விதைப்பவர் உவமையைக் கூறியதும் சீடர்கள் அவரிடம் ஏன் உவமைகளில் பேசுகிறீர் என்று கேட்டார்கள். இயேசு தரும் விளக்கத்தைப் பார்ப்போம்.

### உவமைகள்

ஒரு விடயத்தை அல்லது உண்மையை இலகுவாகப் புரியவைக்க இயேசு பல உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். தெரிந்த உண்மையிலிருந்து தெரியாத ஓர் விடயத்தைப் புரியவைக்கவே உவமையோ, கதையோ பயன்படுத்தப்படுகின்றது. இயேசு தன் பணிவாழ்வில் பாலஸ்தீனச் சூழ்நிலையில் நடைபெறும் சம்பவங்களை அடிப்படையாக வைத்து உவமைகளைக் கூறுவார். உதாரணமாக, விதைப்பவர், வயலில் தோன்றிய களைகள், கடுகு விதை, புளிப்பு மாவு, வலை, முத்து, புதையல் (மத் 13), மணமகளின் தோழியர், தாலந்து (மத் 25: 1~30) விளக்கு (லூக் 11: 33~36), மினா நாணயம் (லூக் 19: 11~27), அத்தி மரம் (லூக் 21: 29~33) போன்ற உவமைகள். இதில் விசேட தன்மை என்னவென்றால் இயேசுவின் உவமைகள் அனைத்தும் மக்களின் நாளாந்த வாழ்வு அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அவர்களது தொழிலான மீன்பிடித் தொழில், விவசாயம், மந்தை மேய்த்தல், அவர்கள் நாளாந்தம் பாவிக்கும் பொருட்களான விளக்கு, தாலந்து, நாணயம் போன்றவற்றின் பின்னணியில் உவமைகள் அமைந்திருந்தன.

### மக்களின் பதில்

நம்பிக்கையோடும் ஆன்மீகத் தாகத்தோடும் வருவோர் செய்தியைப் புரிந்து தமது வாழ்வை மாற்றிக்கொள்வர். ஆனால் கடின மனதோடு வருவோர் புரிந்துகொள்ளவேமாட்டார்கள். இவர்களுக்கு இது வெறும் கதைகளாகவே தோன்றியிருக்கும். கடின மனதுடையோர் மேலும் தமது உள்ளங்களைக் கடினமாக்கிக் கொள்வார்கள் (காண். மத் 13: 13). இவர்கள் கேட்டும் கேட்காதோர் போல இருந்துவிடுவர்.

இறைவாக்கிற்கு எமது மனநிலை என்ன? இறைவாக்கு தரும் சவால்களை ஏற்று வாழ முயல்கின்றேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 ~ வெள்ளி – ஆடி 2008

2கொரி 4: 7-15 திபா 126: 1-6 மத் 20: 20-28

## திருத்தூதரான தூய யாக்கோபு பெருவிழா

இயேசு தான் தொண்டு செய்வதற்கும் பலரது மீட்புக்காக தம் உயிரைக் கொடுக்கவுமே வந்தவர் என்றார் நற்செய்தியில். இதன் பின்னணி யாக்கோபு, யோவான், இவர்களின் தாயாரின் மனநிலையாகும். இயேசுவின் மாட்சியில் யாக்கோபுவுக்கும் யோவானுக்கும் உயர்ந்த இடம் தேவை என்று இவர்களின் தாய் இயேசுவிடம் வந்து வேண்டினார். இந்த வேண்டுதல் ஏனைய சீடரிடையே சிறிய சலசலப்பையும் ஏற்படுத்தியது.

### உலகம் தரும் புகழ்

புகழ், பெயர் என்றால் யாரும் விரும்பும் ஒன்றாகும். உலகமும் ஒருவரின் கல்வி, அந்தஸ்து, பதவி, பணம், பொருள் போன்றவற்றைக் கொண்டே அவரை மதிப்பிடுகின்றது. இது உலக நியதி. இயேசுவையும் மக்கள் இவ்வாறே கணித்தார்கள். அவரது சக்தியைக் கண்டு மலைத்துப்போய் அவரில் நம்பிக்கை வைத்தவர்களும் உண்டு. அவரது புதுமைகள் செய்யும் ஆற்றல்களைக் கண்டு அவர்பின் சென்றவர்களும் உண்டு. அவரது சக்தியை வைத்து அவரை அரசராக்கப் பார்த்தவர்கள் பலர் (காண். யோவா 6: 15). அவர் தனது பாடுகள் மரணத்தைப் பற்றிக் கூறியபோது பேதுரு அவரைத் தடுத்ததை வாசிக்கிறோம் (காண். மாற் 8: 31-33). இவ்வாறு இயேசுவின் போதனைகள், புதுமைகளில் வெளிப்பட்ட சக்தியை வைத்தே அவரைப் பலர் மதிப்பிட்டனர். இப்பின்னணியில்தான் தமது மக்களுக்கும் உயர் நிலை வேண்டும் என எதிர்பார்த்து யாக்கோபு, யோவான் சகோதரர்களின் தாய் இயேசுவிடம் வந்தார். ஆனால் இயேசுவின் பதிலில் அவரது மனநிலை வெளிப்பட்டது.

### கிறிஸ்தவத்தில் தலைமை

இயேசுவின் கண்ணோட்டம் உலகக் கண்ணோட்டமல்ல. அவர் சிந்தனையில் ஒருவர் முதன்மையானவராக இருக்க விரும்பினால் அவர் பணியாளராக மாற வேண்டும். இந்த செய்தி யாக்கோபு, யோவானுக்கு மட்டுமல்ல. அதே மனநிலையில் இருந்த ஏனைய சீடர்களுக்குமே. இயேசுவே பின்பு தன் சீடர்களின் கால்களைக் கழுவி அவர்களுக்கு வாழ்க்கைப் பாடம் கற்பித்தார் (காண். யோவா 13: 1-17).

பணி பற்றிய எனது மனநிலை என்ன? அது என் புகழ், பதவியை மையமாகக் கொண்டுள்ளதா? என் வாழ்வே இறைபணியாக மாறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 ~ சனி – ஆடி 2008

எரே 7: 1–11 திபா 84: 2–5, 7, 10 மத் 13: 24–30

## இறைபராமரிப்பு

வயலில் முளைத்த களைகள் பற்றிய உவமையே இன்றைய நற்செய்தி. கடந்த ஞாயிறும் இதே நற்செய்தியை நாம் தியானித்தாலும் இன்று இறைவனின் பராமரிப்பு பற்றிய கருத்தோடு இன்றைய சிந்தனையைப் பார்ப்போம்.

### கோதுமை-களைகள்

எந்த வயலிலும் நல்லவை நாட்டப்படும்போது அதனோடு அவசிய மில்லாதவை, தீமை விளைவிக்கக் கூடியவை வளரவே செய்யும். இது இயல்பு. அன்று கோதுமை பயிரிட்டாலும், இன்று நெல் பயிரிட்டாலும் இதே சூழ்நிலை வருவதுண்டு. ஆனால் இதன் விளைவு என்ன? சில களைகள் நல்ல பயிரையும் அழிக்க வல்லன. சில ஆபத்தற்றவை. நடைமுறையில் பலர் அறுவடைக்கு முன்பாகவே களைகளை அகற்றிவிடுவர். இதற்கென்று கூலி கொடுத்து இப்பணியை முடித்துவிடுவர். ஏனெனில் களைகளின் வளர்ச்சியை விவசாயி பொறுத்துக்கொள்ளமாட்டார்.

### இறைவனின் பராமரிப்பு

உலக விவசாய முறையின் சிந்தனையோடு ஒப்பிடும்போது இந்த உவமையில் ஓர் ஆழமான உண்மையையும் நாம் அறிந்து கொள்ளலாம். பணியாளர்கள் வந்து நிலக்கிழாரிடம் களைகளைப் பறித்துவிடவா என்று கேட்டபோது அவர் வேண்டாம் என்கிறார். காரணம் இவர்கள் களைகளைப் பறிக்கும்போது கோதுமையையும் பறித்துவிடுவார்கள் என்பதாகும். இறைவனின் பராமரிப்பு இங்கு விளக்கப்படுகின்றது. பல களைகளுக்காக ஒரு கோதுமை அழியக்கூடாது என்பது நிலக்கிழாரின் கவலையாகும். அதேபோல தீயவர்கள் தண்டிக்கப்படும்போது ஒரு நீதிமானும் தண்டிக்கப்படக்கூடாது என்பது இறைவனின் எண்ணம். பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம் இறைவனிடம் லோத்து, அவரது குடும்பத்திற்காகப் பரிந்து பேசிய சம்பவத்தை நினைவிற்கொள்ளலாம் (காண். தொநூ 18: 16–33). ஆபிரகாமின் செபத்தைக் கேட்ட ஆண்டவர் லோத்தையும் அவரது குடும்பத்தையும் அழிவிலிருந்து காத்தார்.

இறைவன் அன்றும் இன்றும் எப்போதும் எல்லோரும் மீட்கப்பட வேண்டும் என்றே விரும்புகின்றார். அவரது இரக்கத்தை நாம் பல வடிவங்களில் அனுபவிக்கிறோம். அதேபோல நாமும் அடுத்தவர் மேல் இரக்கமும் பரிவும் கொண்டு அவர்களது மீட்புக்காகப் பாடுபடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்காலம் 17ம் ஞாயிறு

## 27 – ஆடி 2008

*1அர 3: 5, 7–12 திபா 119: 57, 72, 76–77, 127–130 உரோ 8: 28–30 மத் 13: 44–52*

## *முன்னுரிமை*

வாழ்வில் பல விடயங்களை நாம் எதிர்கொள்கின்றோம். அவற்றில் சிலவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து வெற்றிகாண்கிறோம். கிறிஸ்தவர் நாம் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதை இன்றைய வாசகங்கள் சிறந்த உதாரணங்களோடு விளக்குகின்றன. எமது வாழ்விற்கு பெரும் சவாலாகவும் இவை அமைந்துள்ளன.

### சாலமோனின் முன்னுரிமை

தாவீதைத் தொடர்ந்து பதவியேற்றவர் சாலமோன். தாவீதின் நியமங்களின்படி அவர் வாழ்ந்து வந்தார். ஆண்டவரோ அவரிடம் கனவில் உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டதற்கு சாலமோன் தாழ்ச்சியோடு ஒரு வரம் கேட்டார். அவர் அரசராக அபிஷேகம் செய்யப்பட்டு அதிகாரத்தில் இருந்தாலும் தனது வாழ்வு, அழைப்பிற்குத் தேவையானது எது என்பதை உணர்ந்து வரம் கேட்டார். 'நான் செய்வதறியாத சிறுபிள்ளை' என்று தன்னைத் தாழ்த்தியவர், மக்களுக்கு நீதி வழங்கவும் நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானத்தைக் கேட்டார் (காண். 1அர 3: 8–9). இறைவனே இவரது பணிவையும் வேண்டுதலையும் கேட்டு மகிழ்ந்து கேட்டதற்கும் அதிகமாகவே கொடுத்தார்.

**1. *கேட்டுக் கிடைத்தது:*** சரித்திரத்தில் யாருக்கும் கிடைக்காத அளவு ஞானம் கொடுக்கிறேன் என்றார் ஆண்டவர்.

**2. *கேளாமலும் கிடைத்தது:*** செல்வம், புகழ்.

இறைவன் வாக்களித்தவாறே அவருக்கு நிறைவான ஞானம், செல்வம், புகழ் கிடைத்தது. போராட்டத்தோடு வந்த இரண்டு பெண்களின் வழக்கை சாலமோன் தீர்த்துவைத்த விதம் இதற்கு சிறந்த உதாரணம் (காண். 1அர 3: 16–28). தனக்கு அரசாட்சி, சக்தி, அதிகாரம் நிறைவாக இருந்தும் சாலமோன் 'ஞானம்' எனும் வரத்தைக் கேட்டார். இறைவனின் விருப்பத்தை அறிய, நன்மை தீமை சரியாக பகுத்து தீர்ப்பிட இறைஞானம் யாருக்கும் தேவையே. செல்வம், சக்தி உலகம் தருபவை. ஆனால் இறைஞானம் கிடைத்தால் அனைத்தும் கிடைத்ததற்குச் சமமாகும் எனும் உண்மையை சாலமோன் தெரிந்துகொண்டு சாதுர்யமாகச் செயல்பட்டார். செல்வங்களையும் புகழையும் தேடும் இவ்வுலகிற்கு சாலமோன் சிறந்த உதாரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவரின் முன்னுரிமை

விண்ணரசு பற்றிய போதனையில் இயேசு பல உவமைகளைப் பயன்படுத்தினார். புதையல், முத்து, வலை போன்ற உவமைகள் மூலமாக ஒருவர் விண்ணரசை அடைய அனைத்தையும் இழக்க ஆயத்தமாக வேண்டும் என்று விளக்குகின்றார்.

**1. புதையல், முத்து:** இந்த இரண்டு உவமையிலும் புதையலையும் முத்தையும் கண்டுபிடித்தவர்கள் அதை அடைய தன்னிடமுள்ள அனைத்தையும் விற்றனர்.

**2. வலை:** பலவகையான மீன்களையும் தன் வலையில் பிடித்த மீனவர் அவற்றை கரைக்குக் கொண்டுவந்ததும் நல்லவை தீயவை என்று பிரித்து தீயவற்றை விலக்கிவிடுகின்றார்.

எனவே எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இவர்கள் அறிந்து செயல்பட்டதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

## அனைவருக்கும் மீட்பு

இறைவன் நாம் அனைவரும் மீட்படைய வேண்டுமென விரும்பி செயல்படுகின்றார். அதற்காகவே மீட்பு சரித்திரத்தில் பலர் மூலமாக அவர் செயல்பட்டுள்ளார். இயேசுவின் வருகை இறையன்பின் நிறைவாகின்றது. நாம் இயேசு மூலமாக மீட்புப் பெற அழைக்கப்படுகின்றோம். இந்த அழைப்பை ஏற்று வாழ சந்தர்ப்பங்களும் எமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அவரது மாட்சியில் பங்குபெற எமக்குக் கிடைக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டுமென பவுல் கேட்டுக்கொள்கிறார்.

## எமது முன்னுரிமைகள்

சவால்களும் சோதனைகளும் நிறைந்த இந்த உலகில் எமது முன்னுரிமை என்ன? எம்மையே அறியாமல் நாம் உலகக் கவர்ச்சிகளால் சோதிக்கப்பட்டு ஏமாற்றப்படுகின்றோம். நன்மைகள், தீமைகள் என்று பல தெரிவுகள் எமக்கு முன்வைக்கப்பட்டாலும் எமது முன்னுரிமைகள் என்ன? இறையாட்சியை நாடுவோம். அனைத்தும் அவரால் கொடுக்கப்படும். 'அழிந்துபோகும் உணவிற்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள்' என்றார் இயேசு (யோவா 6: 27). என் பொருட்டு தன்னை இழப்பவர் இம்மையில் நூறுமடங்காகவும், மறுமையில் நிலை வாழ்வையும் பெறுவார் என்றும் இயேசு வாக்களித்தார் (காண். மாற் 10: 29~30). இன்று எமது முன்னுரிமைகளை தெளிவாக்குவோம். ஆண்டவருக்காக எதையும் இழக்கத் தயாராவோம். அவரே எம்மைக் காப்பார், நிலைவாழ்வைப் பரிசாகத் தருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 ~ திங்கள் _ ஆடி 2008

எரே 13: 1-11 இச (பதிலுரை) 32: 18-21 மத் 13: 31-35

### விண்ணரசு

விண்ணரசின் தன்மைகள் பற்றி இயேசு பல இடங்களில் பல தடவைகள் உவமைகள் மூலமாக விளக்கியுள்ளார். இன்றைய நற்செய்தியில் விண்ணரசை கடுகு விதைக்கும் புளிப்பு மாவுக்கும் ஒப்பிடுவதைப் பார்ப்போம்.

### கடுகு விதை

இறைவனின் படைப்பு மகத்தானது. சிறிய கடுகு மணி விதைக்கப்பட்டு வளர்ந்தால் அது பெரிய மரமாகிவிடுகின்றது. இவ்வாறு வளர்ந்தால் அவரது இன்னொரு படைப்பாகிய வானத்துப் பறவைகள் தங்குவதற்கு ஏற்ற இடமாக அந்த மரம் மாறிவிடுகின்றது. ஆனால் இது நடைபெறுவதற்கு இந்த கடுகு மணி விதைக்கப்பட வேண்டும். அதன் வளர்ச்சி நாளாந்தம், இரவும் பகலும் நடைபெறுகின்றது. அதை எம்மால் அவதானிக்க முடியாது. ஆனால் நாம் அவதானித்தாலும் இல்லாவிட்டாலும் அது வளர்ந்தவண்ணமே இருக்கும்.

### புளிப்பு மாவு

மாவைப் பொங்க வைப்பதற்கு அதைப் புளிக்க வைக்க வேண்டும். இது நடைமுறையில் நாம் காணும் விடயம். ஆனால் அது எவ்வாறு புளிப்படைகின்றது என்பதை உணர்ந்துகொள்ள முடியாது. விண்ணரசும் அவ்வாறே என்றார் இயேசு. இறைவனின் சக்தி, ஆற்றலால் அது எம்மையும் அறியாமல் வளர்ந்துகொண்டே இருக்கும்.

### எமது பங்களிப்பு

இன்று நாம் இயேசுவோடு ஒத்துழைக்கும்போது எவ்வளவு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். எமது பாசம் மிகுந்த சிறிய செயல், உண்மை நிறைந்த வாழ்வு, சுயநலமற்ற உறவு இவையெல்லாம் எம்மை விண்ணரசு வளர, மலர, பரவ உதவியாகிடும். இன்று நாம் செய்யும் ஒரு நல்ல செயல் அதைப் பார்ப்பவர் மனதில் பதிந்து அவரும் அவ்வாறு வாழத் தூண்டும். இதுவே நாம் செய்யும் மாற்றம். ஓர் ஆசிரியர் வகுப்பில் கற்றுக்கொடுத்த நல்ல பண்பு பல வருடங்களுக்குப் பின்பும் அந்த மாணவரால் நினைவுகூரப்படுவதை நாம் அவதானிக்கலாம். எமது வாழ்வு இறைபண்புகள் நிறைந்த வாழ்வாகட்டும். நாம் காட்டும் அன்பு, இரக்கம் நிச்சயம் பயன்தராது போகாது. செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 ~ செவ்வாய் _ ஆடி 2008

*1யோவா 4: 7-16 திபா 34: 1-10 யோவா 11: 19-27*

### தூய மார்த்தா நினைவு

மார்த்தா, மரியா இலாசரின் சகோதரிகள். இயேசு ஒருதடவை இவர்கள் வீட்டிற்குச் சென்றபோது மரியா இயேசுவின் வார்த்தைகளுக்கு செவிமடுக்க மார்த்தா பரபரப்பாக வேலையில் ஈடுபட்டிருந்ததை வாசிக்கிறோம் (காண். லூக் 10: 38-42). இலாசரின் மரணத்தையொட்டிய சம்பவங்களின் பின்னணியில் இன்றைய நற்செய்தி அமைந்துள்ளது.

### இயேசுவின் பிரசன்னம்

இயேசு தம்மோடு இருந்திருந்தால் தன் சகோதரன் இலாசர் இறந்திருக்க மாட்டான் என்பது மார்த்தாவின் நம்பிக்கை. இயேசு பலரைக் குணமாக்கியுள்ளார். சக்தி படைத்தவர். இதை மார்த்தா நிச்சயம் அறிந்திருப்பார். ஆனால் இயேசு அதையும்விட சக்திமிக்கவர் என்பதை நம்ப மார்த்தாவால் முடியவில்லை. இலாசர் இறப்பு பற்றிய பின்னணியில் இயேசுவின் நோக்கம் வேறு. இயேசு இல்லாததும், இலாசர் இறந்தபின்பு இயேசு அங்கு சென்று அவரை உயிர்ப்பிப்பதும் தன் சீடர்கள் இயேசுவை நம்புவதற்கு ஓர் வாய்ப்பாகின்றது.

### உயிர்த்தெழச்செய்பவர் இயேசு

தனது பாடுகள், மரணத்திற்கு முன்பாக தன் சீடர்களை மேலும் நம்பிக்கையில் வளரவைக்க வேண்டும் எனும் நோக்கோடு அங்கு சென்ற இயேசுவை மார்த்தா எதிர்கொண்டார். 'உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே' என்று இயேசு கூறியபோது மார்த்தாவின் சிந்தனையெல்லாம் இறுதிநாளில் நடைபெறும் உயிர்ப்பைப் பற்றியதாகவே இருந்தது. உயிர் தருபவர் இயேசு. இயேசுவால் இலாசரையும் உயிர்ப்பிக்க முடியும் என்று மார்த்தாவால் நம்ப முடியவில்லை. எனவேதான் கல்லை அகற்றி விடுங்கள் என்று இயேசு கட்டளையிட்டபோது 'ஆண்டவரே, நான்கு நாள் ஆயிற்று. நாற்றம் அடிக்குமே!' என்றார் மார்த்தா. இங்கு தனது நம்பிக்கைக்கு தானே தடையாகிவிடுகின்றார். ஆனால் இயேசுவோ அனைத்துத் தடைகளையும் கடந்து இலாசரை உயிர்ப்பித்து தானே உயிர்ப்பின் ஆண்டவர் என்றும் நிரூபித்தார்.

எமது நம்பிக்கையும் மார்த்தாவைப் போலவா உள்ளது. இயேசு எம்மோடு என்றும் இருந்து எமக்கும் எமது வாழ்விற்கும் நன்மைகள் பல செய்கிறார் என்பதை உணர்ந்து நம்பிக்கையில் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 ~ புதன் – ஆடி 2008

*எரே 15: 10, 16–21 திபா 59: 1–3, 9–10, 16–17 மத் 13: 44–46*

### உவமைகள்

புதையல், முத்து போன்ற உவமைகள் மூலமாக இயேசு விண்ணரசு பற்றிய செய்தியை முன்வைப்பதை நற்செய்தி காட்டுகின்றது. உவமைகளும் அதன் முக்கியத்துவம் பற்றியும் இன்று சிந்திப்போம்.

### உவமைகள்

வாழ்வோடு ஒன்றித்திருப்பது விவிலியத்தில் சிறப்பான பண்புகளுள் ஒன்று. இறைவன் தன்னை தனித்துவமான முறையில் வெளிப்படுத்துகின்றார். இந்த வெளிப்பாடுகளில் இயேசுவே மையமாகின்றார். இயேசு உவமைகள், கதைகள், உருவகங்கள், சம்பவங்களை மையமாக வைத்து தனது செய்திகளைத் தருவதை நாம் காணலாம். ஒரு சம்பவத்திலிருந்து ஆழமான மறையுண்மைக்கு மக்களை அழைத்துச் செல்வது யோவான் நற்செய்தியாளரின் தனித்துவமாகும். உதாரணம்: சமாரியப் பெண்ணோடு உரையாடியது (யோவா 4: 1~42), அப்பம் பகிர்ந்தளித்தல் (யோவா 6: 1~28).

இயேசுவின் உவமைகள் மனிதரால் புரிந்துகொள்ளக்கூடிய அவர்களது சாதாரண வாழ்வின் அனுபவங்களிலிருந்து ஆழமான இறையுண்மைகளுக்கு அழைத்துச் செல்கின்றன. நடைமுறை வாழ்விலிருந்து ஆழ்ந்த ஆன்மீக உண்மைகளை உவமைகள் காட்டுகின்றன. இவ்வாறு நடைமுறை வாழ்வின் சம்பவங்கள், பொருட்கள், செயல்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வைத்து இயேசு தரும் செய்தியைப் பெறவைக்கின்றன. ஆயினும் ஒருவர் திறந்த மனதோடு உவமைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் அவரால் இயேசு சொல்லவரும் உண்மைகளை உணர்ந்துகொள்ள முடியும்.

### புதையல், முத்து

இவை இரண்டும் விண்ணரசு பற்றிய ஒரே கருத்தையே குறிப்பிடுகின்றன. விண்ணரசு அல்லது இறையாட்சி என்பது விலைமதிப்பற்ற ஓர் சொத்து. அதை அடைய ஒருவர் அவரிடமுள்ள அனைத்தையும் விற்கவும் தயங்க மாட்டார். என்னைப் பின்செல்ல விரும்புபவர் அனைத்தையும் விட்டுவிட்டு பின்செல்லட்டும் என்றார் இயேசு. இயேசுவை அடைய அனைத்தையும் இழக்கத் தயாராவோம். ஏனெனில் இயேசுவே விண்ணரசிற்கு வழி. அவரில் வாழ்ந்து காட்டுவோம், அடுத்தவரையும் அழைத்து வருவோம். அதுவே எமது கிறிஸ்தவ வாழ்வின் இலக்காக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ~ வியாழன் - ஆடி 2008

எரே 18: 1-6 திபா 146: 1-6 மத் 13: 47-53

## இறையாட்சி

உவமைகளில் விண்ணரசு பற்றி விளக்கிய இயேசு அவை புரியும் படியாக அமைந்தனவா என்று உறுதிசெய்துகொள்கிறார்.

### தீர்ப்பின் காலம்

பழைய ஏற்பாட்டிலோ புதிய ஏற்பாட்டிலோ ஒருவர் இறைவனின் சட்டங்களை சரியாகப் புரிந்திருந்தால் அதுவே ஓர் பொக்கிஷமாகும். பழைய ஏற்பாட்டு நூல்களும் இறைவாக்குகளும் மெசியாவாகிய இயேசுவின் வருகையைச் சுட்டிக்காட்டின. இதை சரியாகப் புரிந்துகொண்டோருக்கு நன்மையே காத்திருந்தது. ஏனெனில் பழைய புதிய ஏற்பாட்டு நூல்கள் நம்பிக்கையை வளர்க்கவும் உலகில் தூய கிறிஸ்தவ வாழ்வு வாழவும் வழிகாட்டலைத் தருகின்றன.

ஆயினும் யூதத் தலைவர்கள் பழைய ஏற்பாட்டு நூல்களை மட்டும் நம்பியிருந்து புதிய சட்டங்களுக்குக் குருடர்களாகவே இருந்தனர். உலகத் தீர்ப்புக்காகவும் எதிர்கால அரசாட்சிக்காகவும் காத்திருந்தனர். மெசியா வந்து உலக அரசுகளை அழித்துவிட்டுத் தம்மை நிரந்தரமாக அரசாள்வார் எனும் எதிர்பார்ப்போடு இருந்தனர். ஆனால் இயேசுவோ இறையாட்சி இவ்வுலகில் ஏற்கெனவே ஆரம்பமாகிவிட்டதென்றும் இறுதித் தீர்ப்பு உலக முடிவில் இடம்பெறும் என்பதையும் தன் போதனைகளில் குறிப்பிட்டார். மெசியாவின் வருகையோடு உலகு அவரது ஆட்சியின்கீழ் வரும் என்று நம்பிய யூதத் தலைமை இயேசு குறிப்பிடும் இறையாட்சியைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

### வலை உவமை

கடலில் வீசப்படும் வலையில் பலவகையான மீன்களும் அகப்படும். ஆனால் கரைக்குக் கொண்டுவந்தபின்பே மீனவர்கள் அவற்றைப் பிரித்துப் பார்த்து நல்லவற்றை ஒன்றுசேர்ப்பர். தீயவற்றை விலக்கிவிடுவர். இவ்வாறு உலக முடிவிலும் இறுதித் தீர்வையின்போது வானதூதர் நல்லவர்களையும் தீயவர்களையும் பிரித்தெடுப்பர் என்றார் இயேசு.

விண்ணரசிற்குத் தகுதியுடையோர் யார்? இந்த உலகில் வாழும்போதே நாம் எமது வாழ்வை சீராக வைத்திருந்து எம்மை ஆயத்தம் செய்யவேண்டும். சாவால்களும் சோதனைகளும் நிறைந்த எமது வாழ்வில் நம்பிக்கையில் நிலைத்திருந்து வாழ்வோம். வெற்றிபெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01 ~ வெள்ளி – ஆவணி 2008

எரே 26: 1–9 திபா 69: 4, 7–9, 13 மத் 13: 54–58

### நம்பிக்கை

ஒருவரை அல்லது ஒரு சம்பவத்தை நாம் நம்பவில்லை என்றால் அவைபற்றிய மாற்றுக் கருத்துகளைக் கூறுவது வழமை. இயேசு தனது ஊருக்கு வந்து போதித்தாலும் அவரை நம்பாமல் அவரது பின்னணியைப் பற்றியே கருத்து வெளியிட்டனர் அவரது ஊரார்.

### இயேசுவின் பணி

இயேசு தான் யூதருக்கு, தொலைந்துபோன ஆடுகளுக்காக என்று கூறினாலும் (காண். மத் 15: 21–28) அவரது இவ்வுலக வருகை அனைத்து மக்களுக்குமானதாகும் (காண். திப 9: 15). இயேசு எங்கும் போதித்து மக்களை மனம்மாற்றினார். வழமைபோல தனது ஊருக்கு வந்து தொழுகைக் கூடத்தில் போதித்தபோது மக்களின் மனநிலை வெளிப்பட்டது. இயேசுவின் போதனையில் அவர்கள் கவனம் செலுத்தாமல் அவரது குடும்பப் பின்னணியைப் பார்த்தனர், ஆச்சரியப்பட்டனர். இதனால் இவர்களால் இயேசுவின் போதனைக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியவில்லை. எனவேதான் இயேசுவும் 'தம் சொந்த ஊரிலும் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்' என்றார். போதனையை ஏற்காதவர்கள் அதைத் தொடர்ந்து வந்த இயேசுவின் வல்ல செயல்களையும் குணமாக்கல்களையும் அனுபவித்து நன்மை பெற முடியவில்லை. இழந்த சந்தர்ப்பம் இழந்ததே.

### போதனைக்கு செவிமடுத்தல்

இயேசுவின் நற்செய்தி தன் ஊரார், பிறவினத்தவர் என்றிராமல் அனைவருக்குமாகும். அதை ஏற்பதும் நிராகரிப்பதும் அவரவர் சுதந்திரம். ஏற்போர் வாழ்வு பெறுவர். ஏற்காதோர் தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். இவ்வாறு இயேசுவின் ஊரார் தமக்கு வந்த வாழ்விற்கான நல்ல செய்தியைப் பெற்றுக்கொள்ளத் தவறிவிட்டனர். இவர்களே இதற்குப் பொறுப்பு.

இயேசு எமது வாழ்விலும் பல நன்மைத்தனங்களைப் புரிந்து வருகின்றார். எம்மைச் சுற்றிப் பல புதுமைகள் நடைபெறலாம். அனைத்திற்கும் நாம் காரணங்களை அறிய முயலாமல் நம்பிக்கையோடு அவரைப் புகழ்வோம். புதுமைமிகு சம்பவங்களை அனுபவித்த மரியாவும் அனைத்தையும் அவரது உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வந்தார். நாமும் மரியாவைப் போல இயேசுவின் வழிகாட்டலுக்கு இடம்கொடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02 ~ சனி – ஆவணி 2008

எரே 26: 11-16, 24 திபா 69: 14-15, 29-30, 32-33 மத் 14: 1-12

### அர்ப்பணம்

ஆண்டவரின் வருகைக்காக மக்களை ஆயத்தம் செய்ய அனுப்பப்பட்டவரே திருமுழுக்கு யோவான். அவரது வாழ்வு, அர்ப்பணத்தைப் பார்த்து இயேசு அவரைப் பெரிதும் பாராட்டினார் (காண். லூக் 7: 28). ஏரோதுவின் வாழ்வு ஒழுக்கக்கேடான வாழ்வாக அமைந்ததால் யோவான் துணிவோடு ஏரோதைக் கண்டித்தார். விளைவு சிறைவாசம், மரணம்.

### ஏரோதுவின் பாவங்கள்

பாலஸ்தீனாவின் நான்கு மாவட்டங்களின் ஒன்றை ஆட்சி செய்தவன் ஏரோது அந்திப்பாஸ். கலிலேயா, பெரேயா இவனது அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகள். இவன் இயேசுவின் பிறப்பின்போது பெத்லகேமில் குழந்தைகளைக் கொன்று குவித்த (காண். லூக் 2: 16) பெரிய ஏரோதுவின் மகன். இயேசு பிடிபட்டபோது பிலாத்துவோடு இயேசுவை இவனும் விசாரித்தான் (காண். லூக் 23: 6~12).

பிலிப்பு ஏரோதுவின் உடன்பிறவா சகோதரன். பாலஸ்தீனாவின் இன்னொரு மன்னன். இத்துரேயா, திரக்கோனித்து போன்ற பகுதிகளை ஆட்சி செய்தவன் (காண். லூக் 3: 1). பிலிப்புவின் மனைவி ஏரோதியாள் பிலிப்புவை விட்டு ஏரோதுடன் வாழத் தொடங்கினாள். இதைக் கடுமையாகக் கண்டித்தார் திருமுழுக்கு யோவான். அடுத்தவர் உயிர்வாழும்போது அவரது மனைவியைத் தன் மனைவியாகக் கொள்வது பெரும் தவறு (காண். மத் 19: 1~9). பெயருக்கும் புகழுக்கும் அதிக முன்னுரிமை கொடுத்த ஏரோது யோவானைக் கொல்ல விரும்பாவிட்டாலும் சூழ்நிலை காரணமாக மக்கள் முன்பாக தனது வாக்கைக் காப்பாற்ற யோவானைக் கொல்ல கட்டளை கொடுத்தான். தாவீதின் வாழ்விலும் இதுபோன்ற சம்பவம் நடைபெற்றதை நாம் நினைவுகூரலாம் (காண். 1அர 11, 12).

### திருமுழுக்கு யோவான்

ஆபத்துகள் வரும் என்று தெரிந்தும் யோவான் உண்மைக்குச் சான்று பகர்ந்தார். அவரது மரணம் எமக்கு சிறந்த உதாரணம். உண்மைக்கு சான்றுபகர்வது எமது பணியும் கடமையுமாகும். நாளாந்த வாழ்வின், சிறு விடயங்களிலும் நாம் உண்மையாய் வாழ்வதில் கருத்தாயிருப்போம். அப்போது நாம் பெரியதையும் சாதிக்க சக்தி வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 18ம் ஞாயிறு

## 03 – ஆவணி 2008

*எசா 55: 1–3, திபா 145: 8–9, 15–18 உரோ 8: 35, 37–39 மத் 14: 13–21*

## இறையன்பு

இறைவன் தன் மக்களை எந்தளவுக்கு அன்பு செய்கின்றார் என்பதை நாம் இன்றைய ஞாயிறு வாசகங்களில் வாசிக்கலாம். இறையன்பை மனிதர் நாம் அளவிட முடியாது. ஆயினும் விவிலியம் தரும் ஆதாரங்களை வைத்து அவரது அன்பு அன்றும் இன்றும் எப்போதும் மாறாதது என்பதை உணர்ந்து கொள்ளலாம். இறையன்பை அடைய, அனுபவிக்க எமது முயற்சிகள் என்ன என்பதையும் கேட்டு சவால்விடுக்கின்றன வாசகங்கள்.

### தாகம் தீர்க்கும் இறைவன்

எருசலேம், மெசியாவின் ஆட்சி இரண்டும் இயற்கை வளமும் ஆசீரும் நிறைந்த இடமாக வர்ணிக்கும் பல இறைவாக்குப் பகுதிகளை நாம் காணலாம் (காண். எசா 41: 18–20, 44: 3–4, 48: 18–19). இறையாட்சியில் நீர், திராட்சை இரசம், பால், அப்பம் போன்றவற்றிற்கு குறைவிராது. தாகம் தீர்த்தல் என்பது ஓர் அடையாளமே. அதைவிட இறைவன் மக்களின் தேவைகளைத் தீர்ப்பவராக இருக்கின்றார். அவர் காலத்துக்குக் காலம் தன் மக்களோடு உடன்படிக்கை செய்துகொண்டு மக்களுக்குத் தேவையான வளமான வாழ்வைத் தருவதாக வாக்களித்தார். அடிமை நிலையிலிருந்து மக்களை மீட்டதும், மன்னா, நீர் போன்ற உயிர்வாழத் தேவையானவற்றைத் தந்ததும் அதன் அடையாளமே.

### எமது பதில்

ஆனால் மக்கள் இறைவன் ஏற்படுத்திய உடன்படிக்கைகளுக்கு விசுவாசமாக வாழ்ந்துள்ளார்களா? பல சந்தர்ப்பங்களில் மக்களின் பதில் உடன்படிக்கைக்கு சார்பாக இருக்கவில்லை. மனிதரின் செயல்பாடுகளும் அவசியம். உணவு, நீர் போன்றன உடலை வளர்க்கவே அவசியமானவை. அவை நிலையற்றவை. ஆனால் எமது ஆன்மாவிற்குத் தேவையான உணவை ஆண்டவர் தருகின்றார். செயல்பட வேண்டியது நாம். வாருங்கள் (எசா 55: 2), செவிகொடுங்கள் (55: 2), அவரைத் தேடுங்கள், அவரை நோக்கி மன்றாடுங்கள் (55: 6). இவ்வாறு அவரிடம் மனிதர் செல்லாமல் கடின மனதோடு இருந்தால் இறைவன் கட்டாயப்படுத்தி எமக்கு எதையும் தரமாட்டார். அவரது பராமரிப்பு எமக்கு என்றும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவளித்த இயேசு

இயேசு ஐயாயிரத்துக்கும் அதிகமானோருக்கு உணவளித்தார். நன்மைகள் பல செய்த இயேசு மக்களுக்கு உணவளித்ததாக பல இடங்களில் கூறப்பட வில்லை. எனவே பசிக்கு உணவளிப்பது இயேசுவின் இலக்காக இருந்தாலும் அதைவிட மக்களின் தேவையறிந்து அவர்கள்மீது பரிவுகொண்டு செயல்பட்டதே நற்செய்தியில் நாம் காணும் சிறப்பான அம்சமாகும். இறையிரக்கத்தின் இன்னொரு வெளிப்பாடு இது.

திருமுழுக்கு யோவான் கொல்லப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்ட இயேசு தனிமையான இடம் தேடிச் சென்றார். அதைக் கேள்விப்பட்ட மக்கள் அவரைத் தேடிச் சென்றனர். பணி வாழ்வின்போது பணியாளர்கள் இறந்தாலும் மக்களின் தேவைகளை நாம் மறந்துவிட முடியாது. திருமுழுக்கு யோவானின் மரணம் குறித்து இயேசு உள்ளம் கலங்கியிருக்கலாம். தனக்கு வரப்போகும் பாடுகள் மரணம் பற்றிய எண்ணம் அவரது மனக்கண்களில் தோன்றியிருக்கலாம். எனவே அவருக்குத் தனிமை தேவைப்பட்டது. தந்தையோடு தனித்திருக்க விரும்பினாலும் மக்களின் தேவை அவருக்கு முன்னுரிமையாகப் பட்டது. மக்களது ஆன்மீகத் தேவை கண்டு அவர்கள் மீது பரிவுகொண்டார் இயேசு. இது அவரது இயல்பு. இந்த அன்பு அவரை புதுமை செய்து மக்களது பசியைப் போக்க இட்டுச்சென்றது. மக்கள் அவரது போதனையைக் கேட்பதற்கு அவர்களது பசி ஓர் தடையாக இருக்கக்கூடாது என இயேசு எண்ணி யிருக்கலாம். அன்போடு செயல்பட்டார் அவர்.

## கிறிஸ்துவின் அன்பு

கிறிஸ்துவிற்கு எதிராக தொடக்கத்தில் செயல்பட்டவர் பவுல். ஆனால் கிறிஸ்துவின் அழைப்பைப் பெற்றதுமுதல் தனது பணிவாழ்வில் அவரை ஆழமாக அனுபவிக்கவும், அறிந்துகொள்ளவும் பவுலால் முடிந்தது. இது நிறைவான அனுபவம். ஆயினும் அவர் கிறிஸ்துவின் பெயரால் பல துன்பங்களையும் அனுபவித்தார். இருந்தும் இத் துன்பங்களையும் கடந்து அவர் அனுபவித்தது கிறிஸ்துவின் அன்பு. எனவேதான் கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது என்றார். கடவுளின் அன்பை ஆழமாக அனுபவித்த பவுல் உரோமையரை அதே அன்பில் வழிநடத்தினார்.

இறைவனின் பராமரிப்பு, இரக்கம் எமக்கும் உண்டு. ஆனால் அவற்றை அறிந்து, உணர்ந்து அவரிடம் நாம் நம்பிக்கையோடு போகின்றோமா? அவரே எம்மைக் காப்பார் என்று நம்புகின்றோமா? தொடக்கத்திலிருந்து எம்மை அன்பு செய்யும் ஆண்டவர் இறுதிவரையும் எம்மை அன்பு செய்து எம்மை மீட்பார் என்று நம்பி அவரது கட்டளைகளை வாழ்ந்துகாட்ட முன்வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரே 28: 1-17 திபா 119: 29, 43, 79-80, 95, 102 மத் 14: 22-36

## இறைசக்தி

செபத்திற்கென்று தனிமை தேடிய இயேசு மக்கள் தேவையறிந்து அவர்களைத் தேடிவந்தார். அப்பங்கள் பலுகச் செய்து அவர்கள் பசியைத் தீர்த்தார் என்பதை நேற்றைய நற்செய்தியில் தியானித்தோம். சீடர்களது தேவையை நிறைவேற்ற இயேசு அவர்களை நோக்கி கடலில் வந்த சம்பவத்தை இன்றைய நற்செய்தியில் தியானிப்போம்.

### கடலில் நடந்த இயேசு

அப்பம் பலுகச் செய்தபின் இயேசு கூட்டத்தை அனுப்பிவிட்டு, சீடர்களையும் அக்கரைக்கு போகும்படி பணித்துவிட்டு மீண்டும் செபிக்க மலைமீது ஏறினார். மீண்டும் ஒரு தேவை. கடல் கொந்தளிக்க படகில் சீடர்கள் செய்வதறியாது நிற்க இயேசு அவர்களை நோக்கிக் கடலில் நடந்து வந்தார். அப்பம் பலுகச் செய்த இயேசுவால் கடலில் நடந்து வரவும் முடியும் எனும் நம்பிக்கை அவர்களுக்கு வரவில்லை. 'ஐயோ பேய்' என்பதே அவர்களது பதில். ஆயினும் இயேசு அவர்களைத் திடப்படுத்தினார். பேதுருவின் அவவிசுவாசத்தையும் கடிந்துகொண்டார்.

மூன்று வகையான புதுமைகளைப் பார்க்கலாம். இயற்கையின்மேல் வெற்றி, நோய்கள்மேல் வெற்றி, மரணத்தின்மேல் வெற்றி. இங்கு அப்பம் பலுகியது, காற்றையும் கடலையும் அடக்கியது இயற்கைமேல் அவருக்கிருந்த அதிகாரத்தைக் காட்டுகின்றது. இறைவன் தன் வாக்கினால் உலகைப் படைத்தார். இயற்கை இறைவனின் படைப்பு. எனவே இயேசு இயற்கையின் ஆண்டவர். இயற்கையைக் கட்டுப்படுத்தினார். இந்த உண்மைகளை அறியாத நிலையில் கடலின் கொந்தளிப்பையும், இயேசு கடலில் நடந்துவந்ததையும் கண்ட இயேசுவின் சீடர்கள் பயந்துபோனார்கள்.

### எம் வாழ்வில் இயேசு

எமது வாழ்விலும் எமது துன்பங்கள் நிறைந்த சந்தர்ப்பங்களில் நாம் இயேசுவின் பிரசன்னத்தை சந்தேகித்தாலும் அவர் எம்மோடு நடக்கிறார் என்பதை உணர்ந்துகொள்வோம். உலகையும் எம்மையும் படைத்தவர் இயேசு. அவருக்கு எங்கு, எப்போது, எப்படி வருவது என்பது ஒரு விடயமல்ல. கடலில் நடந்தவர் எம் வாழ்விலும் எம்மோடு நடக்கிறார். உணர்ந்து வாழ்வது எமது கடமை. நம்பிக்கையோடு வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05 ~ செவ்வாய் – ஆவணி 2008

எரே 30: 1-2, 12-15, 18-22 திபா 102: 15-22, 28 மத் 15: 1-2, 10-14

### அன்பு

சட்டத்திற்கும் அன்பிற்குமான வாக்குவாதமும் போதனையுமே இன்றைய நற்செய்தி. மனிதர் சட்டம் இல்லாமல் வாழமுடியாத சூழ்நிலை இன்று இருந்தாலும் கிறிஸ்தவர் நாம் சட்டத்தைவிட அன்பிற்கு முன்னுரிமை கொடுகின்றோமா என்று சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

### பரிசேயரின் வாதம்

பாபிலோனிய அடிமைத்தழையிலிருந்து மீண்டு வந்தபின்பு யூதத் தலைமை மேலதிகமாகப் பல சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்தது. சட்ட வல்லுனர்களும் பரிசேயரும் இவற்றை மோசே கொடுத்த சட்டங்களுக்குச் சமமாகவே கருதி வந்தனர். அதைவிட சடங்குகள், சம்பிரதாயங்கள், மரபுகள் என்றும் பல இருந்தன. இவை பல வருடங்களாக சமூகத்தில் இருப்பதால் இவை புனிதமானவை என்று கருதமுடியாது. அதேவேளை இவை மனித வாழ்வுக்கு பக்கபலமாகவும் அமையலாம். ஆனால் சட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பரிசேயர் நாளாந்த வாழ்வில் அன்பிற்கு இடம்கொடுக்கத் தவறிவிடுகின்றனர். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணின் சம்பவம் சிறந்த உதாரணம் (காண். யோவா 8: 1-11). அன்பை மீறிப்போனதால் இயேசுவின் கண்டிப்பான பதிலை எதிர்கொள்ள வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டது.

### இயேசுவின் பதில்

வெளியடையாளங்களைவிட உள்மனதின் சிந்தனைகளுக்கு அதிகக் கவனம் செலுத்தவேண்டும். உள்ளத்திலிருந்து கொலை, விபசாரம், பரத்தைமை, களவு, பொய்ச்சான்று, பழிப்புரை போன்றவை வெளிவரும். எனவே செயல் என்பது ஒரு சிந்தனையின் அல்லது பல சிந்தனைகளின் முடிவே. செயலின் தொடக்கம் சிந்தனை. அவை நல்லவையா என்பதை அறிந்து விழிப்பாயிருக்க வேண்டும். அதுவே முக்கியம் என்கிறார் இயேசு. இதை அறியாத பரிசேயர் வெறும் குருட்டு வழிகாட்டிகள் என்பது இயேசுவின் கருத்து.

எமது சிந்தனைகள் பற்றிய விழிப்பு எமக்குத் தேவை. சிந்தனைகள் தெளிவாக, நேர்மையானதாக, தூய்மையாக இருந்தால் எமது வார்த்தைகளும் செயல்களும் தூய்மையாக அமைந்துவிடும். ஒரு சமூகம் உருப்பட இது மிக முக்கியம். எனவே எமது சிந்தனைகளை சீர்செய்வோம். நாம் நல்லவராகி அடுத்தவரையும் நல்லவராக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானி 7: 9-10, 13-14   திபா 97: 1-2, 5-6, 9   2பேது 1: 16-19   மத் 17: 1-9

## ஆண்டவரின் உருமாற்றத் திருவிழா

ஆண்டவரின் உருமாற்றம் பல உண்மைகளை எடுத்துரைக்கின்றது. இயேசுவின்மீது சீடர்களுக்குத் தேவையான நம்பிக்கையை இந்த உருமாற்றம் கொடுத்திருக்கும். அந்த நேரத்தில் இவர்கள் இயேசுவைப் பற்றிய உண்மைகளை உணராவிட்டாலும் அவரது உயிர்ப்பிற்குப் பின்பு உணர்ந்திருப்பார்கள்.

## இயேசு பற்றிய உண்மைகள்

இறைவனின் திட்டத்தில் இயேசுவின் வருகை என்பது திடீர் முடிவல்ல. தொடக்கத்திலேயே முன்குறிக்கப்பட்டிருந்தது. இயேசுவே உண்மை அரசர் என்பதை இந்த மாட்சிமை நிறைந்த காட்சி காட்டுகின்றது. இயேசு தனது வாழ்வு, செயல்களின் இறைத்தன்மையை வெளிப்படுத்தினார். காட்சியின்போது மோசேயும் எலியாவும் அவர்களுக்குமுன் தோன்றினார்கள். இருவரும் பழைய ஏற்பாட்டின் இரு முக்கிய இறைவாக்கினர்கள்.

1. ***மோசே:*** பழைய சட்டத்தையும் உடன்படிக்கையையும் மோசே பிரதிநிதித்துவம் செய்கிறார். இஸ்ரயேல் மக்களிடையே பெரிய இறைவாக்கினர் தோன்றுவார் என்பதை முன்னறிவித்தார் (இச 18: 15~19). தொடக்ககால திருச்சபையில் ஸ்தேவானும் இந்த பெரிய இறைவாக்கினர் இயேசுவே என்பதைக் குறிப்பிட்டார் (காண். திப 7: 37).

2. ***எலியா:*** இவர் வரவிருக்கும் மெசியாவை முன்னறிவித்த இறைவாக்கினர்களை பிரதிநிதித்துவம் செய்கின்றார் (காண். மலா 4: 5, 6).

மோசே, எலியா இருவரின் காட்சி மெசியாவாகிய இயேசுவின் மீட்புப் பணியை உறுதிசெய்தது. கடவுளின் சட்டங்களையும், இறைவாக்கினர்களின் முன்னறிவிப்புகளையும் இயேசு நிறைவேற்றி முழுமைக்குக் கொண்டுவருகின்றார். சீனாய் மலையில் இறைவனின் குரல் மோசேக்கு சட்டத்தின்மீது அதிகாரத்தைக் கொடுத்ததுபோல மீண்டும் கடவுளின் குரல் இயேசுவிற்கும் அவரது போதனைக்கும் அதிகாரத்தைக் கொடுத்தது.

## இன்று உருமாற்றம்

இயேசுவின் உருமாற்றம் அன்று சீடர்களுக்குத் தேவையாக இருந்தது. இன்று நாம் அவராக உருமாறி வாழ்ந்துகாட்ட வேண்டும். அவரது மீட்புப் பணி எமது பணியாக மாறவேண்டும். நாம் அவரில் ஆன்மீக மீட்படைவோம். அடுத்தவரையும் மீட்டெடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 ~ வியாழன் – ஆவணி 2008

எரே 31: 31–34 திபா 51: 10–13, 16–17 மத் 16: 13–23

## நம்பிக்கை

பேதுருவில் உள்ள முரண்பாடுகளை இன்றைய நற்செய்தி தருகின்றது. ஆண்டவரை மெசியா என்றும் கடவுளின் மகன் என்றும் சான்று பகர்ந்த பேதுரு உடனேயே இயேசுவின் பணிக்குத் தடையாக வந்த காட்சியை நற்செய்தியில் வாசிக்கின்றோம்.

### மெசியா, கடவுள் மகன்

இயேசுவும் ஏனைய இறைவாக்கினர்கள் போல ஒருவர் எனும் எண்ணம் சீடர்களுக்கு இருந்திருக்கலாம். இந்த எண்ணம் இச 18: 18 பகுதியிலிருந்து தோன்றியிருக்கலாம். மக்கள் மத்தியிலிருந்து ஓர் இறைவாக்கினரைத் தோன்றச் செய்வேன் எனும் இறைவனின் வாக்குறுதியை இவர்கள் நம்பி எதிர்பார்த்திருந்தனர். திருமுழுக்கு யோவான் (காண். யோவா 1), எலியா (காண். 1அர 17), எரேமியா (காண். எரே 1). நம்பிக்கை என்பது ஓர் படிமுறை, வளர்ச்சி. இயேசுவையும் அவரது வாழ்வு, செபம், போதனைகள், புதுமைகள், அதிகாரத்தையும் படிப்படியாகப் பார்த்த சீடர்கள் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டனர். ஆனால் அவர் இன்னுமொரு இறைவாக்கினரா அல்லது எதிர்பார்க்கப்பட்ட மெசியாவா என்பதை உறுதிசெய்வது இலகுவானதல்ல.

ஆயினும் பேதுரு இயேசுவை இறைமகன் என்றும் எதிர்பார்க்கப்பட்ட மெசியா என்றும் அறிக்கையிட்டார்.

### 'இப்படி உமக்கு நடக்கவே கூடாது"

பேதுருவின் நம்பிக்கையின் ஆழம் இங்கு வெளிப்படுகின்றது. இயேசுவை வாயார அறிக்கையிட்டாலும் பேதுரு இயேசு பற்றிய தனது திட்டத்தையே வைத்திருந்தார். இறைவனின் திட்டத்தை அறிய முயலவில்லை. எனவேதான் இயேசு தனது பாடுகள் சாவை முதன்முறையாக முன்னறிவித்த போது பேதுரு தான் விரும்பியபடியே 'இப்படி உமக்கு நடக்கவே கூடாது' என்றார். இயேசுவின் திட்டம் என்ன என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. எனவே இயேசுவின் கண்டிப்புக்கு ஆளாகின்றார்.

இயேசு எனக்கு யார்? இந்த கேள்விக்கான விடை எனது சிந்தனையிலிருந்து ஆரம்பமாகி வாழ்வில் வாழ்ந்துகாட்டப்பட வேண்டும். அவரை நான் நம்பினால் அவரது மனநிலையை நானும் கொண்டிருக்க வேண்டும். இயேசுவை மீட்பராக வாழ்ந்து காட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08 ~ வெள்ளி – ஆவணி 2008

நாகூ 1: 15, 2: 2, 3: 1-3, 6-7 இச(பதிலுரை) 32: 35, 36, 39, 41 மத் 16: 24-28

### *சீடத்துவம்*

சீடனாயிருக்க வேண்டிய தகுதிகளை இயேசுவே இன்றைய நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். தன்னலம் துறத்தல், துன்பங்களை ஏற்றல், உயிரையும் தியாகம் செய்ய ஆயத்தமாதல் சீடத்துவத்தின் பண்புகள்.

### 1. தன்னலம் துறத்தல்

ஒருவர் தனது விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுத்தால் உண்மைச் சீடனாக இருக்க முடியாது. 'நான், எனது, எனக்கு' எனும் சிந்தனைகள் சீடத்துவத்திற்கு எதிரானவை. ஆசைகள், பேராசைகள், இறுமாப்பு, தன்னலம், ஆணவம், கௌரவம், புகழ், பணம், பொருள் இவையெல்லாம் இயேசுவிற்கு விசுவாசமுள்ளவராக வாழ்வதற்கு எதிரானவை. தன்னலம் வேண்டாம், பிறர்நலமே இயேசுவின் சீடரது இலக்காக இருக்க வேண்டும்.

### 2. சிலுவையைச் சுமந்து...

சிலுவை என்பது சீடத்துவத்தில் ஒருவருக்கு வரக்கூடிய தடைகளும் சோதனைகளும் துன்பங்களுமாகும். இயேசுவே வாழ்வின் ஒளி. இருளில் வாழ்கின்ற உலகம் இயேசுவின் ஒளியில் வாழ்கின்ற ஒருவரை ஏற்றுக் கொள்ளாது. இயேசுவை யூதத் தலைமை எவ்வாறு எதிரியாகப் பார்த்ததோ அதேபோல இயேசுவைப் பின்செல்லும் ஒருவர் பல எதிர்ப்புகளையும் துன்பங்களையும் எதிர்கொள்ள வேண்டிவரும். இதைத் தவிர்க்க முடியாது. ஆனால் துன்பங்களிலும் நிலைத்திருக்க வேண்டிய சக்தியை ஆண்டவரே தன் சீடர்களுக்குத் தந்தருள்வார் (காண். 2கொரி 12: 7~9).

### 3. உயிரை இழக்கவும்...

இயேசுவின் பொருட்டு ஒருவர் தன் உயிரையும் இழக்கத் தயாராக வேண்டும். ஆண்டவரில் நிலைத்திருந்து அவரது அன்பையும் இரக்கத்தையும் வாழ்வில் அனுபவிக்கும்போது ஒருவர் ஆண்டவருக்காகவும் அவரது பணிக்காகவும் தனதுயிரையும் இழக்கத் துணிந்துவிடுவார் (காண். யோவா 15: 13). ஏனெனில் இயேசுவின் பொருட்டு தன்னை இழப்பவர் வாழ்வைப் பெற்றுக்கொள்வார். உலகம் நிலையற்றது. நிலையற்ற இந்த உலகத்தில் நாம் நிலைக்க வேண்டும் என எண்ணி செயல்படுவது மடமை. மாறாக நிலைவாழ்வைத் தரும் இறைவனின் கட்டளைப்படி வாழ முயல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 ~ சனி – ஆவணி 2008

அப 1: 12-2: 4 திபா 9: 7-12 மத் 17: 14-20

## நம்பிக்கை

பேய் பிடித்திருந்த சிறுவன் ஒருவனை சீடரால் குணமாக்க முடியவில்லை. சிறுவனின் தந்தையே இயேசுவிடம் வந்து தனது கவலையைத் தெரிவிக்கிறார். இயேசுவோ இவர்களின் நம்பிக்கைக் குறைவைக் கண்டித்து சீடருக்கு வேண்டிய வழிகாட்டலைக் கொடுத்தார்.

### நம்பிக்கையின் முக்கியம்

சிறுவனின் நிலையறிந்து இயேசுவின் சீடர்கள் அவனைக் குணமாக்க முனைந்தாலும் அவர்களால் முடியவில்லை. நம்பிக்கை என்பது கடவுளை கடவுளாகக் காண்பது. அவரால் முடியும் எனும் அசைக்க முடியாத உறுதிப்பாடு. அதற்கு எமக்குப் பணிவு வேண்டும், துணிவு வேண்டும். 'நம்பிக்கையற்ற சீரழிந்த தலைமுறையினரே' என்று சிறுவனின் தந்தையின் நம்பிக்கை யின்மையைக் கண்டித்தார் இயேசு. அதாவது சிறுவனின் தந்தையை மட்டும் அவர் குறைகூறவில்லை, மாறாக, சமூகத்தையே குறைகூறினார். நம்பிக்கை என்பது சமூக செயலாகவும் இருக்க வேண்டும். பெற்றோரின் நம்பிக்கை பிள்ளைகளை நம்பிக்கையில் வழிநடத்தும். இயேசுவின் காலத்து யூத சமூகம் அவரின் செயல்களைப் பார்த்தும் அவரில் நம்பிக்கை வைக்காதிருந்தது. தலைவர்களின் தவறான வழிகாட்டல் சாதாரண மக்களையும் பெரிதும் பாதித்தது. இயேசுவோ சிறுவனைக் குணமாக்கி பின் சீடர்களுக்கு நம்பிக்கையின் முக்கியத்துவத்தையும் சக்தியையும் குறிப்பிட்டார்.

### நம்பிக்கையின் சக்தி

நம்பிக்கையோடு வந்த தொழுநோயாளி குணமானார் (மாற் 1: 40~44). இரத்தப்போக்குள்ள பெண் குணமடைந்ததும் நம்பிக்கையால்தான் (மத் 9: 19~22). அதேபோல கானானியப் பெண், நூற்றுவர் தலைவர், பார்வையற்றவர்கள் என்று பலர் தமது நம்பிக்கையைத் துணிந்து வெளியிட்டு இயேசுவின் ஆசீரைப் பெற்றனர். எனவேதான் இயேசுவும் கடுகளவு நம்பிக்கை இருந்தால் பாரிய விடயங்களைச் சாதிக்கலாம் என்று சீடர்களுக்குக் கூறினார். இறைவனில் நாம் எப்போதும் நிலைத்திருந்தால் அவர் எம்மைத் தமது கருவியாகப் பயன்படுத்தி அடுத்தவர்க்கு பல நன்மைகளைச் செய்திடுவார். அதற்கு எமக்கு நம்பிக்கை வேண்டும், செபம் வேண்டும், பணிவு வேண்டும். இவை இணையும்போது புதுமைகள் பல எம்மத்தியில் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 19ம் ஞாயிறு
## 10 – ஆவணி 2008

*1அர 19: 9, 11–13 திபா 85: 8–13 உரோ 9: 1–5 மத் 14: 22–33*

### இறைபிரசன்னம்

இறைவாக்கினர் எலியாவின் இறையனுபவமும் சீடர்களின் இயேசு அனுபவமும் தூய பவுலின் இயேசு அனுபவமும் இன்றைய ஞாயிறு வாசகங்களில் தரப்படுகின்றன. எம்மை வழிநடத்திக் காக்கும் கடவுளில் முழுமையான நம்பிக்கை வைக்க வாசகங்கள் அழைக்கின்றன. எமது விசுவாசம் எந்தளவு வளர்ந்துள்ளது என்பதை ஆய்ந்து பார்க்கவும் இறையனுபவம் பெறவும் முன்வருவோம்.

### எலியாவின் இறையனுபவம்

இறைபணிக்கான இறைவாக்கினர் எலியாவின் அர்ப்பணம் போற்று தற்குரியது. அவர் அமைதிப்படுத்த அல்ல, மாறாக, சவால்விடுக்கவே அனுப்பப் பட்டார். அவர் கடவுளை தொடர்ந்து ஏற்க மறுத்த அரசனுக்கு கடவுளின் வாக்கைக் கொண்டுசென்றார். அதன்பொருட்டே அரசன் கடவுளின் செய்தியை ஏற்க மறுத்தான். எலியாவோ தனித்து நின்றே இறைவனின் பணியை செய்யத் தீர்மானித்து, செயல்பட்டு அதற்கான விளைவையும் அனுபவித்தார். கடவுளை நம்பிய மக்களே இவரை தனிமைப்படுத்திய உணர்வு இவரைத் தாக்கியது. தனிமை, சோர்வு, ஏமாற்றம் என்று பல துன்பங்களை எலியா அனுபவித்தார். இறைவனோ பல புதுமைகளை அவர் மூலமாக நிறைவேற்றினார். பாகாலின் பொய்வாக்கினர்களை அவர் வெற்றிகொண்டதால் அரசி ஈசபேலின் கோபத்திற்கு ஆளாகினார். அவரிடமிருந்து தப்பிச் சென்ற எலியாவை வானதூதர் வழிநடத்த ஓர் குகையினுள் இரவைக் கழித்தார் (காண். 1அர 18, 19).

### இறைவெளிப்பாடு

மோசே காலத்தில் மக்கள் கடவுளின் பிரசன்னத்தை இடிமுழக்கத்திலும் பெருங்காற்றின் இரைச்சலிலும் கண்டுகொண்டனர். அதையே எதிர்பார்த்த எலியா சுழற்காற்றிலும் நிலநடுக்கத்திலும் கடவுளைக் காணவில்லை. மாறாக, அடக்கமான மெல்லிய ஒலி கேட்டபோது அங்கு அவர் ஆண்டவரின் பிரசன்னத்தைக் கண்டுகொண்டார். இயற்கை இறைவனின் சக்திக்குட்பட்டது. ஆண்டவர் தனது விருப்பப்படியே தன்னை மக்களுக்கு வெளிப்படுத்துகின்றார். அவரது பிரசன்னத்தை அறிய எமக்கு நம்பிக்கை வேண்டும். திறந்த மனதும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீடர்களின் இயேசு அனுபவம்

ஐயாயிரம் பேருக்கு அப்பங்கள் பலுகச் செய்த இயேசுவின் சக்தியை அறிந்திருந்தனர் அவரது சீடர்கள் (காண். மத் 14: 13-21). அதே இயேசு கடல்மீது நடந்து வந்தபோது அவரைக் கண்டு 'ஐயோ, பேய்' என்று சீடர்கள் அலறினார்கள். ஏனெனில் ஏற்கெனவே எதிர்க்காற்றையும் பேரலைகளையும் கண்டு அவர்கள் பயந்திருந்தனர். இயேசு தனது இறைத் தன்மையை இரண்டு வகையில் வெளிப்படுத்தினார்.

1. பழைய ஏற்பாட்டில் வருவதுபோல அவர் வருகைக்கு பெருங்காற்றும் பேரலையும் அடையாளமாகின.

2. இயேசு கடலில் நடந்து வந்ததும், படகில் ஏறியதும் காற்று அடங்கியதும் இயற்கை மீது அவருக்கிருந்த அதிகாரத்தைக் காட்டியது.

எலியா மென்மையான ஒலியில் இறைப் பிரசன்னத்தை உணர்ந்தார். சீடர்களோ பெருங்காற்றின் இரைச்சலில் இயேசுவைக் கண்டனர்.

## பவுலின் இயேசு அனுபவம்

தொடக்கத்திலிருந்து கிறிஸ்துவை வெறுத்து அவர்களுக்கு எதிராகச் செயல்பட்ட பவுல் தமஸ்து சாலையில் கிறிஸ்துவால் அழைக்கப்பட்டார். மனமாற்றம் அடைந்த பவுல் கிறிஸ்துவுக்காகத் தன்னை அர்ப்பணித்தார். தனது கல்வி, பரிசேயர் எனும் அனுபவம், அதிகாரம் போன்றவை பற்றிப் பெருமைப்பட்டாலும் இன்னல்களை எதிர்கொண்டபோது கிறிஸ்துவே எல்லாம் எனும் நிலையை அவர் உணரத் தொடங்கினார். இது இவர் கண்ட கிறிஸ்து அனுபவங்களில் ஒன்று. இரண்டாம் வாசகத்தில் கடவுள் பல கொடைகளை தன் மக்களுக்குப் பொழிந்துள்ளார் என்று உரோமையருக்குக் குறிப்பிடும் பவுல் அதை நிரல்படுத்துகின்றார். கடவுள் அன்று இஸ்ரயேலை, இன்று கிறிஸ்துவை நம்பி ஏற்போரை ஆசீர்வதித்து வழிநடத்துகின்றார்.

## எமது கிறஸ்து அனுபவம்

ஆண்டவர் தன்னை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்துகின்றார். இன்று பாரிய பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகள், செபக் கூட்டங்கள், ஆர்ப்பரிப்புகள், பாடல்கள், இசைக் கருவிகளின் முழக்கங்கள் என்று பல சத்தங்களின் மத்தியில் இறைவனைத் தேடும் நாம் அமைதியான சூழ்நிலையிலும் இறைவன் தன்னை வெளிப்படுத்துகின்றார் என்பதை உணர்வதில்லை.

நற்கருணை நாதரின் முன்னிலையில் அமைதியில் அவரைத் தேடுவோம். அங்கும் ஆண்டவர் எமக்காகக் காத்திருக்கிறார் என்பதை உணர்ந்து செயல்படுவோம். அவரின் வழிகாட்டலையும் பாதுகாப்பையும் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 ~ திங்கள் – ஆவணி 2008

எபே 1: 2-5, 24-28 திபா 148: 1-2, 11-14 மத் 17: 22-27

### சட்டம்

தனது பாடுகள் பற்றிய முன்னறிவிப்பைக் கொடுத்த இயேசு வரி செலுத்துவது பற்றிய தனது கருத்தை வெளியிடுவதை நற்செய்தியில் வாசிக்கிறோம். மனித சட்டங்களோடு எமக்குள்ள தொடர்பு என்ன?

### வரி செலுத்துதல்

இயேசுவின் காலத்தில் யூதர்கள் உரோமையரின் ஆட்சியில் இருந்ததால் அவர்கள் உரோமைய அரசன் சீசருக்கு வரி செலுத்தக் கட்டாயப்படுத்தப் பட்டனர். இதனால் உரோமைய அரசுக்குச் சார்பாக வரி தண்டுவோரை யூதர்கள் பாவிகள் என்று எதிர்த்து வந்தனர். ஆயினும் ஆலயவரி என்பது சமயத்தோடு சம்பந்தப்பட்ட ஒன்று. எருசலேம் கோவிலின் பராமரிப்புக்காக அனைத்து யூதர்களும் வரி செலுத்த வேண்டும் என்பது சட்டம் (காண். விப 30: 11-16). இதற்கென வரிப் பெட்டிகளும் வைக்கப்பட்டிருந்தன. மத்தேயு ஓர் வரி தண்டுபவர் என்பதால் அவர் மட்டுமே இந்த பகுதியைத் தருகின்றார்.

நற்செய்தியில், இயேசு வரி செலுத்துவது பற்றி வரி தண்டுவோர் கேள்வி எழுப்ப பேதுரு 'செலுத்துகிறார்' என்று பதிலளித்தார். இயேசுவோ பதிலாக தன் அரசர்க்குரிய பணியை மறைமுகமாக அங்கு வெளிப்படுத்துகின்றார். அரசர்கள் தமது குடும்பத்தவரிடமிருந்து வரி வசூலிப்பதில்லை. அதேபோல இயேசு, உலகின் அரசர், வரி செலுத்தத் தேவையில்லை. ஆயினும் இந்த உண்மையை யாவரும் அறிந்திருக்கவில்லை.

### உலக சட்டங்கள்

இயேசு அரசர்க்கெல்லாம் அரசராக இருந்தாலும் நாளாந்த நடைமுறை களுக்கு எதிராகப் போக விரும்பாமல் தனக்கும் பேதுருவுக்கும் வரி செலுத்தினார். சமூகச் சட்டங்களுக்கு எதிராக அவர் போகவில்லை. சீசருக்கு வரி செலுத்த வேண்டுமா என்று அவரைச் சோதிக்கக் கேட்டபோதும் அவர் சீசருக்குரியதை சீசருக்குக் கொடுக்கும்படிக் கூறினார். ஆனால் சட்டம் நல்வாழ்வுக்கும் சமய சடங்குகளுக்கும் எதிராகப் போகும்போது என்ன பதில் சொல்லலாம். பேதுருவே குறிப்பிட்டார். 'மனிதருக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும்?' (திப 5: 29).

சமூக, நாட்டுச் சட்டங்களை நாம் அவமதிக்கக் கூடாது. அதைவிட கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 ~ செவ்வாய் - ஆவணி 2008

*எசே 2: 8-3: 4 திபா 119: 14, 24, 72, 103, 111, 131 மத் 18: 1-5, 10-14*

## குழந்தை உள்ளம்

இறையாட்சியில் குழந்தைகள், பெரியோர் எனும் பாகுபாடு இல்லாமல் அனைவரும் சமமாகக் கருதப்படுவார்கள் எனும் எண்ணத்தை இயேசு இன்றைய நற்செய்திப் போதனையின் மூலமாக வலியுறுத்துகின்றார்.

### குழந்தைகளைப் போல...

விண்ணரசில் பெரியவர் யார் எனும் கேள்விக்கு இயேசு உதாரணமாக எடுத்த அடையாளம் குழந்தை. ஏன் சிறு பிள்ளை ஒன்றை இயேசு உதாரண மாகக் காட்டினார்? இவர்கள் தமக்கென்று சொத்துக்கள் சேர்ப்பதில் கவனம் செலுத்தாமல் அடுத்தவரோடு மகிழ்ச்சியாக வாழ்வதில் குறியாயிருப்பார்கள். உள்ளத்தில் வஞ்சம் வைத்திராமல் அன்பாய்ப் பழகுவார்கள். அனைத்திற்கும் மேலாக தமது பெற்றோரில் தங்கியிருப்பார்கள். அவர்களே தம்மைப் பாதுகாத்து, தமக்கு வேண்டியதைத் தருவார்கள் எனும் நம்பிக்கையோடு வாழ்வார்கள்.

இதுபோன்ற பண்புகள் எமக்கும் தேவை. மனிதர் தன்னிறைவு அடைவது முக்கியம். அடுத்தவரில் தங்கி வாழாமலும் அடுத்தவருக்குத் தொல்லை கொடுக்காமலும் வாழ்வது முக்கியம். ஆனாலும் ஒருவர் தன்னிறைவு அடைய அடைய அவருள் பெருமை, இறுமாப்பு, நான் அடுத்தவரில் தங்கியிருக்கத் தேவையில்லை எனும் மனநிலை உருவாகும். அந்த மனநிலை நல்ல உறவுகள் வளரத் தடையாகிவிடும். எனவே நாம் தன்னிறைவு அடைந்தாலும் ஏதோவொரு வகையில் அடுத்தவரை நம்பியிருப்பது நல்லது.

### இழிவாகக் கருத வேண்டாம்

சிறு பிள்ளைகளைப் போல ஏழைகள், துயருறுவோர், ஒதுக்கப்பட்டோர், அடிமைகள், பாவிகள், சிசுக்கள், அனாதைகள், முதியோர், உடல்நலம் குன்றியோர் போன்ற இவர்களை நாம் இழிவாகக் கருதக்கூடாது. ஏனெனில் இவர்களும் இறைவனின் பார்வையில் சமமானவர்களே. இவர்கள் துன்புற்றால், தவறினால் இறைவன் இவர்களையும் தேடி வருகின்றார்.

நாம் இவ்வுலகில் வாழும்போதே விண்ணரசிற்கான ஆயத்தங்களைச் செய்ய வேண்டும். அதற்கு எமக்கு முதன்மையாகத் தேவையானது தூய உள்ளம், தூய மனநிலை. எமக்கு எந்தத் தீங்குகள் வந்தாலும் நாம் அடுத்தவரைப் பகைக்காமல் அவர்களையும் அன்பு செய்து, ஏற்று வாழும் பக்குவம் வேண்டும். அதுவே எமது இலக்காக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 ~ புதன் – ஆவணி 2008

எசே 9: 1-7, 10: 18-22 திபா 113: 1-6 மத் 18: 15-20

### மன்னிப்பு

பாவம் செய்யும் சகோதரரை எவ்வாறு திருத்த வேண்டும் எனும் பாடத்தை இன்றைய நற்செய்தியின் மூலமாக இயேசு எமக்குத் தருகின்றார். யூதர்களின் மனநிலைக்கு எதிராக இருந்த இயேசுவின் அணுகுமுறை இன்று எமக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

### திருத்தும் மனநிலை

பாவம் செய்யும் ஒருவரை யூத சமூகம் விலக்கியே வைத்திருந்தது. விபசாரத்தில் பிடிபட்ட பெண் நல்ல உதாரணம் (யோவா 8: 1~11). இவர்கள் கடவுள் முன்னிலையில் சபிக்கப்பட்டவர்கள் எனும் எண்ணம் இவர்களுக்குள் இருந்தது. ஆனால் பாவம் செய்த சகோதர சகோதரியை எந்த மனநிலையோடு அணுகி அவரைத் திருத்த வேண்டும் என விளக்குகிறார் இயேசு.

**1. நல்ல மனநிலை:** ஒருவர் பாவம் செய்தாலும் அவரும் கடவுளின் பிள்ளையே எனும் மனநிலை முதலில் எமக்குத் தேவை. அவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என எண்ணினால் அதைக் கடந்து நாம் அவர்களை மன்னித்து ஏற்றுக்கொள்ள முன்வரமாட்டோம். எனவே நல்ல மனநிலையை உருவாக்குவோம். இயேசு பாவிகளை மன்னித்தார். காணாமற்போன மகன் உவமையில் இறைத் தந்தையின் அன்பையும் இரக்கத்தையும் காட்டினார்.

**2. அணுகுமுறை:** நல்ல மனநிலை உருவாகினால் எமது அணுகுமுறையும் நல்லதாகும். ஒருவரைப் புண்படுத்தியபின் அவர் திரும்பி வரவேண்டும் என எதிர்பார்ப்பது தவறு. மாறாக, திருந்தி வந்தாலும் அவரை ஏற்றுக்கொள்ளும் நல்லெண்ணத்தை நாம் வெளியிட வேண்டும்.

தனித்திருக்கும்போது அணுகலாம், அல்லது ஒன்றிரண்டு சாட்சிகளோடு அணுகலாம், அல்லது திருச்சபைக்குத் தெரிவித்துத் திருச்சபையின் உதவியைப் பெறலாம். அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தால் அவர் திருந்தும்வரை அவரை தனிமைப்படுத்த வேண்டும். இங்கும் எமது அன்பையும் நல்லெண்ணத்தையும் நாம் வெளிப்படுத்த வேண்டும். தனிமைப்படுத்துவது திருந்துவதற்கே எனும் மனநிலை அவருள் இருக்க வேண்டும்.

'மன்னியுங்கள் மன்னிக்கப்படுவீர்கள்' என்றார் இயேசு. மன்னிப்போம், மன்னிப்புப் பெறுவோம். தவறுவது மனித இயல்பு, மன்னிப்பது இறை இயல்பு. இறைவன் இரக்கம் உள்ளவர் என்பதை உணர்ந்து மன்னிப்பின் மக்களாக வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 ~ வியாழன் – ஆவணி 2008

எசே 12: 1–12  திபா 78: 56–59, 61–62  மத் 18: 21–19: 1

### மன்னிப்பு

மன்னிப்பின் பாடம் தொடர்கின்றது. இறைவனின் இரக்கத்தையும் மனிதனின் கடின உள்ளத்தையும் இயேசு நற்செய்தியில் ஒப்பிட்டுக் காட்டி மன்னிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றார். நாம் அடுத்தவரை மன்னியாவிடில் எமக்கே தீர்ப்பை வருவித்துக்கொள்கிறோம் என்பதையும் உணர்த்துகின்றார்.

### ஏழுமுறை எழுபதுமுறை

'உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக, பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக' என்பது சட்டங்களில் ஒன்று (காண். லேவி 19: 18). தமக்கு எதிராகக் குற்றம் செய்யும் ஒருவரை மூன்று முறை மன்னித்தால் போதும் என்று யூத ராபிக்கள் மக்களுக்குப் போதித்து வந்தனர். பேதுரு அதையும் கடந்து முழுமை எண்ணாகிய 'ஏழு' முறை மன்னித்தால் போதுமா என்று இயேசுவிடம் கேட்டார். இயேசுவின் பதில் அவர்களுக்கு பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கும். எத்தனை முறை மன்னிக்கிறேன் என்று குறிப்பிடும் அளவிற்கு தடையங்கள் இருக்கக்கூடாது. மன்னிக்கும் மனநிலை ஒருவருக்கு இருந்தால் அவர் எத்தனை தடவை மன்னித்தேன் என எண்ணிக்கை வைத்திருக்க மாட்டார்.

### மன்னிக்க மறுக்கும் நிலை

நாம் எமது பிழைகளுக்கு மன்னிப்பு வேண்டும் என எதிர்பார்த்தாலும் எமக்கு எதிராகக் குற்றம் செய்தவரை மன்னிக்க மறுத்துவிடுவது வழமை. இது தவறு என்று காட்ட இயேசு நல்ல உவமையைப் பயன்படுத்தினார். நாம் அடுத்தவரை மன்னிக்க ஆயத்தமில்லையென்றால் இறைவனின் மன்னிப்பையும் எதிர்பார்க்கக் கூடாது. இறைவனிடம் எமது குற்றங்களை மன்னிக்கும்படி கேட்கும் நாம் அடுத்தவர் குற்றங்களை மன்னிக்கும் மனநிலையையும் உருவாக்க வேண்டும்.

'பிறர் குற்றங்களை நாம் மன்னிப்பது போல எமது குற்றங்களையும் மன்னித்தருளும்' என்று நாளாந்தம் செபிக்கின்றோம். அதை வாழ்ந்து காட்ட அழைக்கும் உவமையாக இன்றைய உவமை அமைந்துள்ளது. அடுத்தவர் எமக்கு எதிராக எந்தத் தீமைகளைச் செய்தார் என்பது முக்கியமல்ல. மாறாக மன்னிக்கும் மனநிலை எமக்கு உண்டா என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 ~ வெள்ளி – ஆவணி 2008

திவெ 11: 19, 12: 1-6, 10 திபா 45: 9-11, 15 1கொரி 15: 20-26 லூக் 1: 39-56

## தூய மரியாவின் விண்ணேற்புப் பெருவிழா

மரியாவின் விண்ணேற்பு என்பது மறையுண்மை, விசுவாச சத்தியம். அவர் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பது திருச்சபையின் பாரம்பரியம். சரித்திரம், மீட்பு சரித்திரத்தில் மரியாவின் பங்களிப்பு, மரியாவின் காட்சிகள், காட்சிகளின் மூலமாக அவர் தந்த செய்திகள் போன்ற ஆதாரங்களை அடிப்படையாக வைத்து ஆராய்ச்சிகள் பல செய்து கடைசியில் திருத்தந்தை 12ம் பத்திநாதர் மரியாவின் விண்ணேற்பை ஓர் மறையுண்மையாகப் பிரகடனம் செய்தார். காணக்கூடிய விடயங்களிலிருந்து காணமுடியாத உண்மைக்கு நாம் செல்கிறோம். நற்செய்தி நூல்களில் மரியாவின் வாழ்வு பற்றி ஆராய்வோம்.

### 'ஆம்" என்று பதில் கொடுத்தார்

மரியாவுக்கு அழைப்பும் பணியும் கொடுக்கப்பட்டது. அதை அவரால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் தெரிந்துகொண்டவையிலிருந்து இறைவனின் அழைப்பை ஏற்று, அவரில் நம்பிக்கை வைத்து 'ஆம்' என்று பதில்கூறினார். ஏனைய அழைப்புகளைவிட இவருக்கு வந்த அழைப்பு பல சவால்களையும், வரக்கூடிய வேதனைகளையும் சுட்டிக்காட்டியது.

1. கன்னி கருத்தாங்க வேண்டும். இது சமூகத்தில் அவப்பெயரைப் பெற்றுத் தரும். சட்டப்படி கல்லால் எறிந்துகொள்ளப்படவும் முடியும்.
2. யோசேப்புவோடு அவர் செய்துகொண்ட மணஒப்பந்தம் முறியும் அபாயமும் உள்ளது. யோசேப்பு அவரைத் தவறாகப் புரிந்துகொள்ள அது வேறு பல சிக்கல்களையும் கொண்டுவரலாம்.

ஆயினும் இது இறைவன் தரும் அழைப்பு. இறைவனின் திட்டம். எனவே அவரே பார்த்துக்கொள்வார் என்று நம்பிய மரியா 'நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்' (லூக் 1: 38) என்று பதில் கூறினார். இவரில் பணிவு இருந்தது. அவர் நம்பியவாறே யோசேப்புவை இறைவன் நல்ல முறையில் வழிநடத்தி மரியாவை ஏற்றுக்கொள்ள வைத்தார். குழந்தைக்கு ஆபத்து வந்தபோதெல்லாம் இறைவனே கனவில் வழிநடத்தி அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பையும் கொடுத்தார்.

அழைக்கும் இறைவன் அனைத்தையும் நடாத்துவார். அவரில் நம்பிக்கை வைத்து எம்மை அர்ப்பணிக்கும்போது இறைவனின் அதிசயிக்கத்தக்க வழிகாட்டலையும் உணர்ந்து அவரைப் புகழமுடியும். நம்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 ~ சனி – ஆவணி 2008

எசே 18: 1–10, 13, 30–32 திபா 51: 10–13, 16–17 மத் 19: 13–15

## குழந்தை மனநிலை

சிறு பிள்ளைகளை உதாரணமாகக் காட்டி இயேசு தன் சீடர்களுக்குப் போதித்தார். விண்ணரசை அடைய குழந்தைகள் உள்ளம் கொண்டிருப்பது அவசியம் என்பதை வலியுறுத்தினார். குழந்தைகளையும் வளர்ந்தோரையும் ஒப்பிட்டுப்பார்ப்போம்.

### குழந்தைகள் மனநிலை

குழந்தைகள் கள்ளங்கபடற்றவர்கள். உள்ளத்தில் ஒன்று வைத்து வெளியே இன்னொன்றைப் பேசமாட்டார்கள். உள்ளம் தூய்மையாக இருப்பதால் அவர்கள் பேச்சும், செயலும் தூய்மையாகவே இருக்கும்.

அதைவிட மேலாக இவர்கள் தம்மில் நம்பியிருக்காமல் தம் பெற்றோரில் முழுமையான நம்பிக்கை வைத்து வாழ்வர். அவர்கள் இறைவனில் கலப்பற்ற நம்பிக்கை வைத்திருப்பர். எனவே இயேசுவும் அவர்களை ஏற்று, அரவணைத்து, ஆசீர்வதித்தார். தடுத்த சீடரையும் கண்டித்தார்.

### வளர்ந்தோரின் மனநிலை

வளர்ந்தோருக்கு தமது கல்வி, அனுபவம், அறிவு, கருத்துகள், அந்தஸ்து போன்றவையே முன்னுரிமை பெறும். இறைவனை நம்பி அவர்வழி செல்ல வளர்ந்தோருக்கு நம்பிக்கை அவசியம். எமக்கு எல்லாம் தெரியும் எனும் எண்ணமே இறைவனிடமிருந்து அவர்களைப் பிரித்துவிடும். மாறாக, தம்மைத் தாழ்த்தி நல்ல மனநிலையோடும் உள்ளத்தோடும் இறைவனை அணுகினால் அவரது வழிகாட்டலை உணரலாம்.

இயேசுவின் காலத்து பரிசேயரும் யூதத் தலைவர்களும் தம்மை வெளிப் படுத்துவதிலேயே கருத்தாய் இருந்தார்கள். தமக்கு சட்டம் முழுமையாகத் தெரியும் என்று காட்டவும் அதை முறையாகக் கடைப்பிடிக்கிறார்கள் என்று மக்களுக்கு உணர்த்தவுமே அவர்கள் முனைப்பாய் இருந்தார்கள்.

'நீங்கள் மனந்திரும்பிச் சிறுபிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள்...' என்றார் இயேசு. எமது மனநிலை என்ன? இறைவனில் நம்பிக்கை வைக்கும் நாம் நிபந்தனைகளோடு கூடிய பக்தியை வளர்க்கின்றோமா? அல்லது அவரே அனைத்தையும் பார்த்துக்கொள்வார் என்று அவரில் நம்பிக்கை வைக்கின்றோமா? அன்பு, தூய்மை, நம்பிக்கை போன்ற பண்புகளை எமது வாழ்வாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 20ம் ஞாயிறு
## 17 – ஆவணி 2008

எசா 56: 1, 6–7 திபா 67: 1–2, 4–5, 7 உரோ 11: 13–15, 29–32 மத் 15: 21–28

### மீட்பு

மீட்பு தமக்கு மட்டுமானது என்று எண்ணிய யூதர்களுக்கு இன்றைய வாசகங்கள் தரும் செய்தி ஆச்சரியமாகவே இருந்திருக்கும். மீட்பு உலக மக்கள் அனைவருக்கும் உண்டு எனும் சிந்தனையும் இறைவனின் திட்டமும் சிறிது சிறிதாக வெளிப்பட்டது. அதன் விளக்கங்களை ஆராய்வோம்.

### 'இறைமன்றாட்டின் வீடு"

இறைவனின் மீட்புத் திட்டத்தில் யூதர்கள் அழைக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு மட்டுமே மீட்புண்டு என்பது அவர்களது அறிவீனம். உன் இனத்தைப் பெருகச் செய்வேன் என்று இறைவன் ஆபிரகாமிற்கு வாக்களித்து அவர் மூலமாக புதிய இனம் உருவாக்கினாலும் இறைவனின் மீட்புத் திட்டத்தில் இது ஓர் ஆரம்பமே. உலகம் முழுமையும் மீட்படைய வேண்டும். உலக மக்கள் அனைவரும இறைவனின் பிள்ளைகளாக வேண்டும். இத் திட்டத்தை முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் மூலமாக இறைவன் குறிப்பிடுகின்றார். பிற இன மக்களை ஆண்டவர் தன் திருமலைக்கு அழைத்து வருவார். ஆலயம் என்பது இறைவன் வாழும் இல்லம். அங்கு இறைவேண்டல் செய்யப்படும், பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். பிற இனத்தவர்கள் இறைவனின் ஆலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆலயம் அனைத்து மக்களுக்குமான ஓர் ஆலயமாக மாறும். அதற்கு பிற இனத்தவர் செய்ய வேண்டியதென்ன?

### நீதியும் நேர்மையும்

இறைவனின் ஆசீர் அனைவருக்கும் உண்டு. அவரை அறிந்து ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் மீட்பு உண்டு. அவரை மக்கள் அறியாவிட்டாலும் நீதி, நேர்மை நிறைந்த வாழ்வு வாழும் அனைவருக்கும் இறைவன் தரும் மீட்பு உண்டு. இவ்வாறு இறைவனின் அன்பு, மீட்பு அனைவருக்கும் உண்டு என்பதை இறைவனே காலத்துக்குக் காலம் அறிவித்து வந்துள்ளார். இறைவன் தமது இறைவன், தமக்கு மட்டுமே அவர் தரும் மீட்பு உண்டு என எண்ணிய யூதர்கள் இந்த உண்மையை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இயேசுவின் காலத்திலேயே சரியாகப் புரியப்படாவிட்டாலும் உரிய காலத்தில் அது சிறிது சிறிதாக வெளிப்பட்டது. பவுலின் அழைப்பும், பணியும் இதற்கு உதாரணம் (காண். திப 9: 15).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கானானியப் பெண்

காணானியப் பெண் ஓர் பிற இனத்தவர். இயேசு பல பிற இனத்தவருக்கும் பணியாற்றியுள்ளார். கலிலேயாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள தீர், சீதோன் பகுதிகளைச் சேர்ந்தவர் இவர். இது ஓர் பிற இனத்தவருடைய பகுதி. யூதரிடமிருந்து இவரைப் பிரித்துக் காட்ட மத்தேயு இவரைக் காணானியப் பெண் என்று அறிமுகம் செய்கின்றார்.

இப்பெண்ணை அனுப்பிவிடும் என்று சீடர்கள் இயேசுவிடம் கூறினார்கள். சீடர்கள் இவரது தேவைக்கும் உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுக்கவில்லை. இவரை ஒரு தொந்தரை செய்பவராகவே கணித்தனர். ஆனால் இயேசுவோ அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சீடர்களுக்கும் ஏணையோருக்கும் நல்ல பாடத்தைக் கற்றுக்கொடுத்தார்.

இஸ்ரயேல் இனத்தில் காணாமல்போன ஆடுகளிடமே வந்தேன் என்ற இயேசுவின் வார்த்தைகள் சில விவிலியப் பகுதிகளுக்கு முரணானதா? (காண். திபா 22: 27, எசா 56: 7, மத் 28: 19, உரோ 15: 9~12). ஆனால் அவரோ ஏனைய உலக மக்களைவிட யூதருக்கே மீட்புத் திட்டத்தில் முதல் சந்தர்ப்பம் என்பதைக் குறிப்பிட்டிருக்கலாம் (காண். தொநூ 12: 3). எனவே காணானியப் பெண்ணை விலக்காமல் அவரது நம்பிக்கையை பரீட்சித்துப் பார்க்க இயேசு விரும்பியிருக்கலாம்.

## பிள்ளைகள், நாய்கள்

யூதர்கள் பிற இனத்தவரை பொதுவாக நாய்கள் என்று குறிப்பிடுவர். ஏனெனில் கடவுளின் ஆசீரைப் பெற்றுக்கொள்ள இவர்கள் நாய்களைவிட சிறந்தவர்கள் அல்ல எனும் எண்ணம் இவர்களுக்கு இருந்தது. இயேசுவோ இங்கு 'நாய்கள்' என்று குறிப்பிட்டாலும் தனது மனநிலையை யூதர்களின் மனநிலையோடு ஒப்பிட்டுக்காட்ட விரும்பினார். அதேவேளை இப்பெண் இயேசுவோடு வாதிடவில்லை. மாறாக, அவர் பிரயோகித்த வார்த்தைகளை வைத்தே இறையாசீரைப் பெற முயன்றார்.

இப்பெண்ணின் நம்பிக்கையைப் பெரிதும் பாராட்டிய இயேசு அவர் கேட்டதற்கிணங்க அவரது மகளைக் குணமாக்கினார்.

## மீட்புப் பணியில் நாம்

இறைவன் தனது மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற இன்று எம்மையும் பயன்படுத்தலாம். இறைவனின் அன்பும், இரக்கமும் எமக்கு மட்டும் எனும் மனநிலையை மாற்றி அனைவரும் மீட்புப் பெறவேண்டும் எனும் மனநிலையோடு அடுத்தவர் மீட்புக்காகவும் பாடுபடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 ~ திங்கள் _ ஆவணி 2008

எசே 24: 15-24, இச (பதிலுரை) 32: 18-21 மத் 19: 16-22

### செல்வம்

நிலைவாழ்வை அடைய நான் என்ன செய்ய வேண்டும் எனும் நியாயமான கேள்வியோடு வந்த ஓர் இளைஞனுக்கு இயேசு கொடுத்த பதிலையும் இளைஞனின் முடிவையும் நற்செய்தியில் வாசிக்கிறோம். எமக்கும் இன்று சவால் தரும் போதனையாக அமைந்துள்ளது நற்செய்தி.

### தெரிந்த விடயத்திலிருந்து...

தெரிந்த விடயத்திலிருந்து தெரியாத விடயத்திற்கு அழைத்துச் செல்கிறார் இயேசு. நிலைவாழ்வை அடையத் தேவையான வழிகளைக் காட்டினார் அவர். கட்டளைகளைக் கடைப்பிடியும் என்றார். அவை கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே... என்று இயேசு சில முக்கிய கட்டளைகளை நிரல்படுத்தினார். இளைஞனுக்கு இயேசுவின் பதில் ஆச்சரியத்தைத் தரவில்லை. இவை அனைத்தையும் நாம் கடைப்பிடித்து வருகின்றேன் என்றான். அதாவது 'இவ்வளவுதானா?' என்பதைப்போல அவனது பதில் இருந்தது. கட்டளைகள் பல உள்ளன. யூதர்கள் மோசே மூலமாக இறைவன் கொடுத்த கட்டளைகளைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். இவை தெளிவாகவே இருந்தன. செய்யக் கூடாதது, செய்ய வேண்டியது என்று அவை நிரல்படுத்தப்பட்டு இருந்தன.

### தெரியாத விடயத்திற்கு...

தெரிந்த கட்டளைகளைக் குறிப்பிட்ட இயேசு இப்போது இளைஞனுக்குப் பெரும் சவாலை முன்வைத்தார். உன்னிடமுள்ள உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். பின் வந்து என்னைப் பின்செல்லும் என்றார் இயேசு (மத் 19: 21). இளைஞனால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவனுக்கு பெரும் சொத்து இருந்தது. பத்துக் கட்டளைகளுள் முதல் கட்டளை உன் கடவுளாகிய ஆண்டவரை அன்பு செய் என்பதாகும். ஆனால் இங்கு இறைவனைவிட தன் உடைமைகளை அன்பு செய்த இளைஞன் முதல் கட்டளையையே மீறினான். செல்வம் இவனுக்குத் தடையாக இருந்தது.

நாம் எதற்கு முன்னுரிமை கொடுக்கிறோம் என்பதில் விழிப்பாயிருக்க வேண்டும். எமக்குத் தேவையானது ஆன்மீக செல்வமே. உலக செல்வங்கள் நிலையற்றவை. அவை மேலும் எமக்கு துன்பங்களையே தரவல்லன. ஆனால் நாம் இறைவனுக்கு முன்னுரிமை கொடுத்தால் அனைத்தும் எமக்கு வந்துசேரும். அவரே எமது செல்வம் என்பதை ஏற்று வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசே 28: 1-10 இச (பதிலுரை) 32: 26-28, 30, 35-36 மத் 19: 23-30

## தூய யோவான் யுதா நினைவு

பணத்தால் வரக்கூடிய தடைகளை இயேசு நற்செய்தியில் குறிப்பிட்டு நிலைவாழ்வை அடைவதற்கான வழிமுறைகளையும் முன்வைக்கிறார். இயேசு முன்வைக்கும் சவாலை ஏற்று வாழ முன்வருவோம்.

### மனிதரால் இயலாதது...

செல்வரான இளைஞர் இயேசுவின் வழிகாட்டலை ஏற்காது தன்வழியே செல்ல செல்வத்தால் வரக்கூடிய ஆபத்து பற்றி இயேசு இங்கு விளக்குகின்றார். பணக்காரர் விண்ணரசில் நுழைவது என்பது கடினமானது. அன்று யூதர்களின் மனநிலைப்படி பொருளும் செல்வமும் இறைவனின் ஆசீராகக் கருதப்பட்டன. ஆபிரகாம் முதல் யோபு வரை செல்வர்கள் கடவுளுக்கு விசுவாசமுள்ளவர் களாகவே இருந்தனர். எனவே இயேசுவின் வார்த்தைகள் சீடர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

### இறைவனால் இயலும்...

செல்வமும் பொருளும் பொதுவாக ஒருவர் விண்ணரசில் நுழைவதற்கு முட்டுக்கட்டைகளெனக் கருதவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இயேசுவைப் பின்சென்ற பல பணக்காரரையும் நாம் நற்செய்திகளில் காணலாம். மத்தேயு (மத் 9: 9), சக்கேயு (லூக் 19: 8), அரிமத்தியா சூசை (மத் 27: 57) போன்றோர் இதற்கு சான்று.

ஆனால் செல்வத்தில் நிலைத்திருந்து அதையே தமது கடவுளாக்கி அதற்கு அடிமைகளாக்கிக்கொண்டவர்கள் விண்ணரசில் நுழைவது அரிது என்பது உண்மை. எனவே இறுதிவரை நிலைத்திருப்பவர்களும் (மத் 10: 22), இறைவனால் தெரிவுசெய்யப்பட்டவருமே (மத் 24: 22) முடிவில்லா வாழ்வை உரிமையாக்கிக்கொள்வர்.

'கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை' என்று வானதூதர் எலிசபெத்தைப் பற்றி மரியாவுக்கு முன்னறிவித்தபோது குறிப்பிட்டார். இறைவன் உலகில் பல வல்ல செயல்களைச் செய்துள்ளார். அதே இறைவன் அவரிடம் வரும் யாருக்கும் மீட்பைக் கொடுக்க வல்லவராகவும் இருக்கின்றார்.

மீண்டும் எமது முன்னுரிமைகள் பற்றி ஆராய்ந்து பார்ப்போம். அனைத்தையும் ஆண்டவருக்காக இழக்கவும் தயாராவோம். இந்த மனநிலை இருந்தால் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றி நிலைவாழ்வு பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 ~ புதன் _ ஆவணி 2008

எசே 34: 1-11 திபா 23: 1-6 மத் 20: 1-16

## தூய பெர்னாட் நினைவு

திராட்சைத் தோட்ட வேலையாளர்கள் உவமை மூலமாக இறைவன் தனது நீதியை வெளிப்படுத்துகின்றார். இறைவனது மனநிலை, மனிதனது மனநிலை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்க அழைக்கின்றது நற்செய்தி.

### இறைவனின் மனநிலை...

தனது திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்வதற்கென்று நிலக்கிழார் பலரையும் அழைத்தார். 9 மணி, 12 மணி, 3 மணி, 5 மணி என்று பலதரப்பட்ட நேரங்களிலும் அழைத்தார். எப்போது அழைப்பது, யாரை அழைப்பது, எவ்வளவு கூலி கொடுப்பது போன்றவை நிலக்கிழாரின் உரிமை, சுதந்திரம். எனவே தனது விருப்பப்படி இறைவன் தனது பணியாளர்களுக்கு உரிய ஊதியத்தைக் கொடுக்கிறார். ஒருவர் வாழ்நாள் முழுவதும் இறைபணியில் தன்னை அர்ப்பணித்திருக்கலாம். இன்னொருவர் வாழ்நாள் முழுவதும் பெரும் பாவியாக இருந்து கடைசிக் காலத்தில் மனம்மாறி இறைபணியில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் நிலைவாழ்வில் இறைவன் தன் விருப்பப்படி தனது பரிசைக் கொடுக்கிறார். அதைக் குறைகூற மனிதருக்கு எந்த அதிகாரமும் இல்லை. அனைவரும் மீட்படைய வேண்டுமென்பதே இறைவனின் ஒரே நோக்கமாக இருக்கின்றது.

### மனிதரின் மனநிலை...

உலகப் போக்கில் அனைத்தையும் பார்ப்பவன் மனிதன். இறைவனின் எண்ணங்களுக்கும் மனிதனின் எண்ணங்களுக்கும் பாரிய இடைவெளி உண்டு. வேலைக்கு வந்தவர்களுக்கு மாலையிலேயே உரிய ஊதியத்தைக் கொடுத்துவிட வேண்டும் என்பது யூதச் சட்டம் (காண். லேவி 19: 13). காலையில் வந்தவர்கள் நாள் முழுவதும் வேலை செய்ததால் மாலையில் வந்தவர்களைவிட தமக்கு சம்பளம் அதிகம் கிடைக்கும் என எதிர்பார்த்தனர். ஆனால் அனைவருக்கும் சமமாக கூலி கொடுக்கப்பட இவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டனர். ஆனால் அவர்களோடு ஒப்பந்தம் செய்தபடியே நிலக்கிழார் கூலி கொடுத்தார். எனவே இவர்கள் முறையிடுவது நியாயமானதல்ல.

எமக்கு எவ்வளவு கிடைக்கும் என்பது முக்கியமல்ல. மாறாக, நாம் இறைவன் தரும் பணியை குறைவின்றி முடிக்கின்றோமா என்பதே முக்கிய மானது. இறைவனின் விருப்பமே எமது விருப்பமாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசே 36: 23-28 திபா 51: 10-13, 16-17 மத் 22: 1-14

## திருத்தந்தை தூய 10ம் பத்திநாதர் நினைவு

திருமண விருந்துக்கு அழைப்பு உண்டு. ஆனால் அதை ஏற்காதவர்கள் தண்டிக்கப்படுகின்றனர். திருமண விருந்து உவமையின் மூலமாக நற்செய்தியில் இயேசு எமது மனநிலைகளை ஆராய்ந்து பார்க்க அழைக்கின்றார்.

### அழைக்கப்பட்டவர்கள்

பாலஸ்தீன நாட்டுப்புறங்களில் திருமணவிருந்து போன்ற பெரிய விருந்துகளுக்கு அழைக்கும்போது நாட்களைக் குறிப்பிடமாட்டார்கள். பொதுவான அழைப்பு தொடக்கத்தில் கொடுக்கப்படும். பின் விருந்துக்கு அனைத்தும் தயாரானதும் இறுதி அழைப்பைக் கொடுப்பார்கள். அதற்கு வேலையாட்களை அனுப்பி வைப்பார்கள். விண்ணரசு அரசனுக்கு ஒப்பிடப்படுகின்றது. இவ்வாறு அழைப்பு குறிப்பிட்டவர்களுக்கே விடுக்கப்படுகின்றது.

இறைவனின் மீட்புத் திட்டத்தில் ஆபிரகாம் தொடக்கம் யூத இனம் அழைக்கப்பட்டது. இந்த இனத்தை இறைவன் வழிநடாத்தி தனது அன்பையும் இரக்கத்தையும் காலத்துக்குக் காலம் வெளிப்படுத்தியுள்ளார். இறைவாக்கினர்கள் காலத்துக்குக் காலம் அழைக்கப்பட்டு தம் பணியைச் செய்துள்ளனர். இயேசுவின் காலத்தில் யூதத் தலைமை இயேசுவையும் அவர் கொண்டுவந்த நற்செய்தியையும் ஏற்றுக்கொள்ள மறுத்தது. இவர்களுள் சிலரைத் தவிர ஏனையோர் இயேசுவிற்கு எதிராகவே செயல்பட்டனர். இவ்வாறு அழைப்பைப் பெற்றும் அதற்குத் தம்மைத் தகுதியுடையோராக மாற்றிக்கொள்ள இவர்களால் முடியவில்லை. பெருமை, பொறாமை, அகந்தை தடையாக வந்து இந்த அழைப்பை உணரவைக்கவில்லை.

### தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்

இயேசு எங்கும் சென்று போதித்தும் புதுமைகள் செய்தும் வந்தாலும் யூதத் தலைமையைவிட சாதாரண மக்களே அவரை நம்பி நன்மைகள் பல பெற்றனர். தொழுநோயாளர் (மத் 8: 1~3), இரத்தப் போக்குடைய பெண் (மத் 9: 20~22), கானானியப் பெண் (மத் 15: 21~28), சக்கேயு (லூக் 19: 1~10), நூற்றுவர் தலைவர் (லூக் 7: 1~10), தைலம் பூசிய பாவியான பெண் (லூக் 7: 36~50) போன்றோர் நல்ல உதாரணம்.

இயேசுவின் அழைப்பு இன்று எமக்கும் வருகின்றது. அதை உணர்ந்து அழைப்பை ஏற்று எம்மை விண்ணரசுக்கு தகுதியுள்ளவராக்கிக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 ~ வெள்ளி – ஆவணி 2008

எசா 9: 2-4, 6-7 திபா 113: 1-8 லூக் 1: 39-47

### அரசியான தூய கன்னிமரியா நினைவு

இறைவனில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்த இரு பெண்கள் சந்திக்கின்றனர். இவர்களது இந்த சந்திப்பு பல மறையுண்மைகளை வெளிப்படுத்தியது.

**எலிசபெத்து**

இஸ்ரயேல் இனத்தில் குழந்தைப் பாக்கியம் இறைவனின் ஆசீராகக் கருதப்பட்டது. ஆனால் குழந்தை இல்லா மலட்டு நிலை இறைவனின் சாபமாகவும், பொது வெட்கத்திற்கு உரியதாகவும் கருதப்பட்டது. இந்த நிலை குழந்தைப் பாக்கியம் இல்லாப் பெண்களுக்கு பெரும் துன்பத்தையே கொடுத்தது. எலிசபெத் இந்த நிலைக்கு ஆளாகியிருந்தாலும் அவர் கடவுளில் நம்பிக்கை வைத்திருந்தார். எலிசபெத்தும் அவரது கணவர் செக்கரியாவும் குருத்துவ குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். கடைசியாக இவர்கள் மீது இறைவன் இரக்கம் கொண்டு நல்ல செய்தியை வானதூதர் மூலமாகக் கொடுத்தார். எலிசபெத் கருத்தாங்கியிருப்பது அயலவர்களுக்கும் தெரியவர அனைவரும் மகிழ்ந்தனர்.

**மரியா**

மரியாவுக்கு அழைப்புக் கொடுக்கப்பட்டபோது அவருக்கு அடையாளமாக எலிசபெத் கருத்தாங்கியிருக்கிறார் என்று சொல்லப்பட்டது. இந்த மகிழ்ச்சியான செய்தியை எலிசபெத்தோடு பகிர்ந்து கொள்ளவும் அவருக்கு உதவியாக இருந்துவிட்டு வரவும் மரியா எலிசபெத் வீடு நோக்கிச் சென்றார்.

இருவரும் சந்தித்தபோது எலிசபெத் வயிற்றில் குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது. மரியாவைப் பார்த்து எலிசபெத் '...என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?' (லூக் 1: 42) என்று கூறியபோது மரியாவும் தனது அழைப்பை, தான் கருத்தாங்கியிருப்பது கடவுளின் குழந்தையே என்பதை உறுதிசெய்துகொண்டார்.

இறைவன் பலர் மூலமாக எமக்கும் அடுத்தவர்க்கும் பல நன்மைகளைச் செய்துவருகின்றார். அதில் நாம் மரியா போல அவரது கருவிகளாக அழைக்கப்படலாம். மகிழ்ச்சியோடு பணிசெய்ய முன்வருவோம். அடுத்தவர்க்கு நாம் ஆசீராக மாறவேண்டும். அப்போது அடுத்தவர் இறைவனின் கைவன்மையை உணர்ந்து அவரைப் புகழ்வார்கள். கருவிகளாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 ~ சனி – ஆவணி 2008

எசே 43: 1-7 திபா 85: 8-13 மத் 23: 1-12

## பணிவு

மறைநூல் அறிஞர், பரிசேயரின் தவறான வழிகாட்டலைக் கண்டித்தார் இயேசு. இவர்கள் தமது சுயநலன்களுக்காகவே செயல்படுகின்றனர் என்பது இயேசுவின் கருத்து. இவர்கள்போல நீங்கள் இருக்க வேண்டாம் எனவும் தன் சீடர்களை எச்சரித்தார் அவர்.

### மறைநூல் அறிஞர், பரிசேயர் தவறு

இவர்கள் சமூக, சமயத் தலைவர்கள். சட்டங்கள், சம்பிரதாயங்களை அறிந்திருந்தவர்கள். அதிகம் கொடுக்கப்பட்டதுபோலவே இவர்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இவர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட வசதிகள், கல்வி, அனுபவம், அதிகாரங்களை தமது சுயமகிமைக்காகப் பயன்படுத்தத் தொடங்கினர்.

1. மக்களுக்கு சுமைகளை சுமத்தினர்: மக்களின் உணர்வுகள், கஷ்டங்களை தாம் சிறிதும் அறிய விரும்பாமல் அவர்கள்மீது பழுவான சுமைகளை சுமத்தினர். சட்டங்களைக் கடைப்பிடித்தல், வழிபாட்டு நடைமுறைகள் போன்றவற்றின் மூலமாக மக்களுக்கு இவர்கள் பெரும் பாரத்தைக் கொடுத்தார்கள்.

2. வெறும் ஆடம்பரம்: தாங்கள் சட்டங்களை கடைப்பிடிக்கிறார்கள் என்று காட்டினார்கள் (காண். இச 6: 8, விப 13: 9, 16).

3. முதன்மையான இடங்கள்: தமது பிரசன்னத்தை உறுதிசெய்யவும் பகிரங்கப்படுத்தவும் இவர்கள் முதன்மையான இடங்களைத் தேடிச் சென்றனர்.

4. வணக்கம் செலுத்தப்பட...: தமது செயல்கள், செபம் செய்யும் முறைகளைப் பார்த்து மக்கள் தம்மை வணங்க வேண்டும், ரபி என்று அழைக்க வேண்டும் எனவும் இவர்கள் எதிர்பார்த்தனர்.

### இயேசுவின் சீடர்கள்

ஆனால் இயேசுவின் சீடர்களோ அவ்வாறு இருக்கக் கூடாது என்று இயேசு எச்சரித்தார். அவர்கள் சொல்வதைச் செய்யுங்கள். ஆனால் அவர்கள் செய்வதுபோல செய்யாதீர்கள் என்றார் இயேசு. சீடர்கள் தம்மைத் தாழ்த்தி அடுத்தவர்க்குத் தொண்டர்களாக இருந்து பணி செய்ய வேண்டும். இதையே கடவுள் நிலையில் இருந்த இயேசுவும் செய்துகாட்டினார்.

எமது பணியைப் பார்க்கின்றவர்கள் எம்மையல்ல, மாறாக, இறைவனைப் புகழ வேண்டும். அதுவே எமக்குப் பெருமையாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்காலம் 21ம் ஞாயிறு
## 24 – ஆவணி 2008

*எசா 22: 19–23 திபா 138: 1–3, 6, 8 உரோ 11: 33–36 மத் 16: 13–20*

**இயேசு**

இறைவனால் தலைமைப் பதவியைப் பெறும் ஒருவர் இறைவனின் திட்டத்திற்கு அமைவாக நடக்க வேண்டும். இறைவன் தரும் பணியை முறையாக ஏற்று அவரது நீதிக்கேற்ப நிறைவேற்ற வேண்டிய முக்கியத்துவத்தை இன்றைய வாசகங்கள் தருகின்றன. எமது அழைப்பை நாம் அவருக்கு உரிய முறையில் வாழ்ந்து காட்டுகின்றோமா என்று தியானிக்க நாமும் அழைக்கப்படுகின்றோம்.

## தலைவர்களின் தவறு

செபுனா இஸ்ரயேல் அரண்மனைப் பொறுப்பாளனும் அதிகாரியுமாவார். பாலஸ்தீன நாடு ஒரு கட்டத்தில் அசீரிய நாட்டிடமிருந்து பெரும் ஆபத்தை எதிர்நோக்கியது. இந்த ஆபத்திலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள நாட்டுத் தலைவர்கள் எகிப்து மன்னனோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள முடிவு செய்தனர். இந்த ஒப்பந்தத்தை வலியுறுத்தியவர் செபுனா.

ஆனால் இறைவாக்கினர் எசாயா இதை எதிர்த்தார். மக்கள் மனம்மாறி இறைவனிடம் சரணடைந்தால் இறைவனே மக்களையும் நாட்டையும் காப்பார் என்பது இறைவாக்கினரின் போதனை. இஸ்ரயேலர் கடவுளில் நம்பிக்கை வைக்காததே அடிப்படைப் பிரச்சனையாக இருந்தது.

தொடக்கத்திலேயே மக்கள் தம்மை ஆளவென ஓர் அரசர் தேவை என்று சாமுவேலிடம் கேட்டபோது கடவுளும் நாமே உங்கள் அரசர் என்று வலியுறுத்தினார். மக்கள் இறைவனில் முழு நம்பிக்கை வைத்து அவரது வழியில் வாழ்ந்தால் இறைவன் அவர்களை என்றும் காப்பார் என்று இறைவாக்கினர்கள் காலத்துக்குக் காலம் கூறி வந்துள்ளனர். ஏனெனில் ஆண்டவரே அரசர்க்கெல்லாம் அரசர். ஆயினும் மக்களுக்கு நடைமுறையில் வரும் பிரச்சனைகளை அவர்கள் கண்ணோட்டத்தில் தீர்ப்பதிலேயே கருத்தாய் இருக்கின்றனர். அதில் ஓர் திருப்தியும் ஏற்படுகின்றது.

எனவே இறைவனில் நம்பிக்கை வைக்காமல் வேற்று நாட்டுடன் ஒப்பந்தம் செய்ய முனைந்த செபுனாவை ஆண்டவர் பதவியிலிருந்து நீக்கி எலியாக்கிமுக்கு அப்பதவியைக் கொடுக்கிறார். தன் விருப்பப்படி நடவாத அனைவரையும் ஆண்டவர் தண்டிக்கிறார். ஏனெனில் மக்களை இறைவழியில் வழிநடத்த வேண்டியவர்கள் தவறிவிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களுக்கு இயேசு யார்?

இயேசுவிற்கு நாட்கள் செல்லச் செல்ல பல கோணங்களிலிருந்து எதிர்ப்புகள் வந்தவண்ணமே இருந்தன. சிலர் அவரை அழிக்கவும் உரிய சந்தர்ப்பத்தைத் தேடினர். யூதர்கள், யூதத் தலைவர்கள், பிற இனத்தவர், அவரது உறவினர்கள் என்று பலரும் அவரையும் அவரது பணியையும் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தப் பின்னணியில் இயேசுவே தன் சீடர்களிடம் தன்னைப் பற்றி மக்கள் யார் என்று சொல்கிறார்கள் என்று கேட்டார். அவர்களது பதிலோ பல: திருமுழுக்கு யோவான், எலியா, எரேமியா, இறைவாக்கினர்களுள் ஒருவர். ஏன் இவர்கள் சிறப்பிடம் பெறுகின்றனர்?

மெசியாவின் இறவாத் தோழர்கள் கூட்டத்தில் மோசே, எசாயா, எலியா மூவரும் இடம்பெறுகின்றனர் (காண். 2மக் 2: 1~11, 15: 14). ஏனெனில் இவர்கள் எவ்விதம் இறந்தனர், எங்கு அடக்கம் செய்யப்பட்டனர் போன்ற தகவல்கள் பழைய ஏற்பாட்டு நூல்களில் இல்லை. எனவே இவர்கள் சாகாமல் மெசியாவின் தோழர்களாக இருந்துவிட்டு மெசியா வருவதற்குமுன் உலகிற்கு வருவார்கள் என்று யூதர்கள் பரவலாக நம்பியிருந்தனர். எனவேதான் திருமுழுக்கு யோவானை மெசியாவின் வருகைக்குமுன் தோன்றிய எலியா என்று மக்கள் எண்ணினர் (காண். மத் 11: 14, 17: 10~13).

அதேபோல திருமுழுக்கு யோவானின் இறப்பிற்குப் பின்பு இயேசுவைத் திருமுழுக்கு யோவான் என்றும் (காண். மத் 14: 12), எலியா என்றும் (காண். மத் 17: 3, 10~13) நம்பினார்கள். அவ்வாறே இயேசுவை எரேமியா என்றும் நம்பினார்கள் (காண். 2மக் 2: 1~12). மேலும் நாடு துன்பத்தில் இருக்கும்போது எரேமியா வருவார் என்பதும் யூதர்களின் நம்பிக்கை (காண். 2மக் 15: 1~14).

## சீடர்களுக்கு இயேசு யார்?

மானிடமகன், மெசியா இரண்டும் இயேசுவையே குறித்து நிற்கின்றன. மக்கள் இயேசு, மெசியா பற்றிய பல கருத்துகளைக் கொண்டிருந்தனர். ஆனால் இயேசுவோடு உண்டு, குடித்து, தங்கி, அவரது போதனைகளைக் கேட்டு, புதுமைகளைப் பார்த்து, அவரது அதிகாரத்தை உணர்ந்த இயேசுவின் சீடர்களின் அனுபவத்தில் இயேசு யார்? பேதுரு அனைத்து சீடருக்குமாக சேர்த்து 'நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்' என்றார்.

நாமும் இயேசுவை அறிந்திருக்கின்றோம். எமக்கு இயேசு யார்? சரியான பதிலை எம்மாலும் சொல்ல முடியும். ஆனால் அந்தப் பதிலை நாம் வாழ்ந்து காட்டுகின்றோமா? இயேசு எனது வாழ்வின் மீட்பராக இருக்கிறார். அவரை மேலும் அறிந்து வாழ்ந்து காட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 - திங்கள் - ஆவணி 2008

2தெச 1: 1-5, 11-12 திபா 96: 1-5 மத் 23: 13-22

## வெளிவேடம்

தாமும் தவறான வழியில் சென்று தமது பொறுப்பில் இருந்த மக்களையும் தவறான வழியில் வழிநடத்தும் மறைநூல் அறிஞர்களையும் பரிசேயர்களையும் இயேசு கடுமையாகக் கண்டிக்கிறார். 'ஐயோ! உங்களுக்குக் கேடு!' என்று இயேசு குறிப்பிடும் கடுமையான சொற்றொடர் அவரது இரு உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றது. துக்கம் கலந்த கோபம், தண்டனைக்கான எச்சரிக்கை. எம்மையும் பார்த்து ஐயோ உங்களுக்குக் கேடு என்று அழைக்குமளவிற்கு எமது வாழ்வு மோசமடைந்துள்ளதா என்று சிந்தித்துப் பார்க்க அழைக்கின்றது இன்றைய நற்செய்தி.

### விண்ணரசின் வாயில்களை...

மறைநூல் அறிஞர்கள் இறைவனின் வார்த்தைகளை நுணுக்கமாக ஆராய்ந்து விளக்கம் கொடுப்பவர்கள். திருச்சட்டத்தை முறையாகக் கடைப் பிடிக்க உருவானதே பரிசேயர் கூட்டம். இவர்களுக்கு இறைவனின் வாக்கு, சட்டம், இறைவனின் இரக்கம், அன்பு, சரியான ஆன்மீக வாழ்வு போன்றன தெரிந்திருந்தன. விண்ணரசுக்கு வாயில் இவை எனலாம். இவர்களுக்கு சட்டமும் அதன் விளக்கங்களும் நன்றாகத் தெரிந்திருந்தாலும் இவற்றிற்கு தமது வசதிக்கேற்ப தவறான விளக்கங்கள் கொடுப்பதால் மக்கள் தவறாகவே வழிநடத்தப்பட்டனர். இதனால் இவர்கள் விண்ணரசுக்குள் நுழைவதுமில்லை, அடுத்தவர் நுழைய அனுமதிப்பதுமில்லை.

### சமயத்தில் சேர்ப்பதற்கு...

அன்று யூத மறைக்கு ஆள் சேர்க்கும் பணி மும்முரமாக அதி வேகத்துடனும், மூர்க்கத்தனத்துடனும் நடைபெற்றது. இதில் ஈடுபட்டோரைவிட புதிதாக யூத மறையைத் தழுவியோர் இன்னும் வேகத்துடன் செயல்பட்டனர். மறைநூல் அறிஞர்கள், பரிசேயர் காட்டிய சுயநலம் நிறைந்த வாழ்க்கை இப் புதியவர்களையும் பாதித்தது. எனவே இவர்கள் இருமடங்கு நரகத்திற்கு ஆளாகின்றனர் என்பதை இயேசு குறிப்பிடுகின்றார்.

எமது வாழ்வில் நாமும் உண்மைக் கிறிஸ்தவராக வாழ்கிறோம் என்று எண்ணலாம். ஆனால் எம்மையும் அறியாமல் எமது தீய வாழ்வு மற்றவருக்குத் தடையாகவே இருந்துவிடும் என்பதைக் கவனத்தில் கொள்வோம். அடுத்தவர் இயேசுவை அறிய நான் தடையாக இருக்கின்றேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 ~ செவ்வாய் _ ஆவணி 2008

*2தெச 2: 1-3, 14-17 திபா 96: 10-13 மத் 23: 23-26*

## வெளிவேடம்

மறைநூல் அறிஞர்கள், பரிசேயர் பற்றிய இயேசுவின் கண்டனங்கள் தொடர்கின்றன. வாழ்வின் உட்புறம், வெளிப்புறம் இரண்டையும் குறிப்பிடும் இயேசு இவர்கள் வெளிப்புறத்தைப் பார்க்குமளவிற்கு உட்புறத்தைப் பார்க்கத் தவறிவிடுகின்றனர் என்றார். எமது வாழ்வு இவர்களைப் போல வெளிவேடங்கள் நிறைந்துள்ளதா என்று சிந்திக்க அழைக்கின்றது நற்செய்தி.

### வெளிப்புறம்

இன்றைய நற்செய்தியில் இருவிதமான வெளியடையாளங்களை இயேசு குறிப்பிட்டார்.

**1. பத்தில் ஒரு பங்கு:** காணிக்கையோ, எந்த வருமானமோ சட்டப்படி ஒருவர் பத்தில் ஒரு பங்கு இறைவனுக்கென்று ஒதுக்க வேண்டும் என்பது சட்டம் (லேவி 27: 30, இச 14: 22, எசே 45: 13).

***2. வழிபாட்டுச் சுத்தம்:*** யூதத் தலைவர்கள் தண்ணீர் குடிப்பதிலிருந்து அனைத்திலும் கவனம் செலுத்தி சட்டத்தின்படி வாழ வேண்டுமென செயல்படுவார்கள். ஆனால் தமது உள்ளத் தூய்மையைப் பற்றிக் கவலையில்லாமல் இருந்தார்கள். அதாவது மக்கள் பார்க்கக்கூடிய விடயங்களில் மட்டும் இவர்கள் கவனமாக இருந்தார்கள்.

### உட்புறம்

'கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே...' (திபா 51: 17). சட்டத்தையும் ஆன்மீக வாழ்வையும் பற்றி அறிந்திருந்த மறைநூல் அறிஞர்களும் பரிசேயரும் வாழ்ந்தது வெளிவேட வாழ்வே. மக்கள் பார்க்கும் சந்தர்ப்பங்கள், இடங்களில் இவர்களது வாழ்வு ஒன்றாகவும், தனிப்பட்ட வாழ்வு இன்னொன்றாகவும் இருந்தது. நீதி, இரக்கம், நம்பிக்கையை இவர்கள் விட்டுவிடுகின்றனர். இறைவன் விரும்புவதோ இரக்கம், பலிகளல்ல (காண். ஓசே 6: 6, மீக் 6: 8, செக் 7: 9). இரக்கத்தையும், கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்துகொள்வதையுமே இறைவன் விரும்புகிறார்.

இறைவனிடமிருந்து எமது உள்ளத்தை மறைக்க முடியாது என்பதை நாம் எப்போதும் அறிந்திருப்போம். அன்று யூதத் தலைவர்கள் மக்களை ஏமாற்றினாலும் இயேசுவை ஏமாற்ற முடியவில்லை. நானும் எனது உள்ளத்தை ஆராய்ந்து பார்த்து நீதி, இரக்கம், நம்பிக்கையில் வளர்ந்திடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2தெச 3: 6-10, 16-18 திபா 128: 1-2, 4-5 மத் 23: 27-32

# வெளிவேடம்

மறைநூல் பரிசேயரை வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்று குறிப்பிடுகிறார் இயேசு. நாளாந்த சம்பவங்களை இயேசு உதாரணமாகக் காட்டி அவர்களைக் கண்டித்தார். உணர்ந்து செயல்பட வேண்டியவர்கள் அவர்கள் மட்டுமல்ல, இன்று நாங்களுமாகும். ஏனெனில் எமது வாழ்வும் வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறைகளைப் போல இருக்கலாம்.

## கல்லறைகள்

தீட்டுள்ள பொருட்களையோ மனிதரையோ மக்கள் தொடக்கூடாது என்றும் அவர்களோடு எவ்வித தொடர்பும் வைத்திருக்கக்கூடாது என்றும் யூதத் தலைவர்கள் வலியுறுத்தி வந்தனர். தீட்டுப்பட்டதையோ, தீட்டுப் பட்டவரையோ தொடுபவரும் தீட்டுப்பட்டவரே என அவர்கள் கருதினர். அதேபோல இறந்தவரின் உடலை மட்டுமல்ல, இறந்தவர்களை அடக்கம் செய்திருக்கும் கல்லறைகளைத் தொடுபவரும் தீட்டுப்பட்டவரே. பாலஸ்தீனாவில் கல்லறைகள் வழியோரமாகவும் இருந்தன. பாஸ்காத் திருவிழா போன்ற பெரிய திருவிழாக்களுக்கு எருசலேம் நோக்கி வருவோர் கல்லறைகளை அடையாளம் தெரியாமலும் தீட்டுப்படாமலும் இருக்க திருவிழாக்காலங்களில் கல்லறைகளுக்கு வெள்ளையடித்துவிடுவார்கள். ஆனால் கல்லறைகள் வெள்ளையாகவும் அழகாகவும் தெரிந்தாலும் இவற்றினுள் இருப்பதோ அசுத்தமும் எலும்புக் கூடுகளுமே. இதை உதாரணமாகக் காட்டி இயேசு யூதத் தலைவர்களைச் சாடினார்.

## மூதாதையர்கள்

தமது மூதாதையர்கள் இறைவாக்கினர்களைக் கொன்றார்கள் என்று குறிப்பிடும் யூதத் தலைவர்கள் அதே பரம்பரையில் வந்த இவர்களும் அதேபோன்ற குற்றங்களையே செய்கிறார்கள் என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் இறைவாக்கினர்களின் கல்லறைகளை அழகுபடுத்துவதில் நேரத்தை ஒதுக்குகின்றனர்.

அன்று அவர்கள் வாழ்வில் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்ட வெளிவேடம் இது. இன்று என்னைத் தேடி இயேசு வந்தால் எந்த வெளிவேடங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவார்? எனக்கு மட்டுமே தெரிந்த தவறைக் களைந்து நேர்மையான வாழ்வு வாழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 ~ வியாழன் - ஆவணி 2008

1கொரி 1: 1-9 திபா 145: 2-7 மத் 24: 42-51

## விழிப்பு

உலகின் இறுதிநாட்கள், நீதித் தீர்ப்பு போன்றவற்றைப் பற்றிய தனது போதனையில் மக்கள் விழிப்பாகவும் ஆயத்தமாகவும் இருக்க வேண்டுமென இயேசு வலியுறுத்துகின்றார். இதே விழிப்பு இன்று எமக்கும் தேவை. அதற்கு வேண்டிய ஆயத்தங்கள் என்ன என்பதை இன்றைய சிந்தனையில் பார்ப்போம்.

### விழிப்பு, ஆயத்தம்

ஆண்டவரின் நாள் யாருக்கும் தெரியாது. அது எந்த வடிவில் வரும் என்பதும் உறுதியாக யாருக்கும் தெரியாது. பல விளக்கங்களும் தருவர். அது எமது மரணம் என்றும், உலக முடிவோடு வரக்கூடிய இறுதித் தீர்ப்பு என்றும் விளக்கங்கள் தருவர்.

**1. விழிப்பு:** ஆண்டவரின் நாள் திடீரென்று நிகழும் என்பதே இதன் விளக்கம். அந்த நாளுக்காக விழிப்பாயிருந்து காத்திருக்க வேண்டும். இதற்குச் செபம், நம்பிக்கை அவசியமாகும்.

**2. ஆயத்தம்:** உலக வாழ்வு, உலகம் அனைத்தும் முடியப்போகிறது என்று நினைத்துக்கொண்டு நாம் சோம்பேறிகளாக இருந்துவிடக்கூடாது. தெசலோனிக்க மக்கள் பலர் வேலை எதுவும் செய்யாமல் சோம்பித்திரிந்தார்கள். பவுல் இவர்களைக் கண்டித்தார் (காண். 2தெச 3: 11-12). ஆயத்தமாயிருக்க வேண்டும் என்பதற்கு இயேசு பயன்படுத்திய உவமை நம்பிக்கைக்குரிய பணியாளர் உவமையாகும். தலைவர் வரக் காலம் தாழ்த்துகிறார் என்று எண்ணி நல்ல ஊழியர் தன் பொறுப்புகளை ஊதாசீனம் செய்யவில்லை. மாறாக பொறுப்போடு தன் கடமைகளைச் செய்தார். தன் கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டுமென்பதே இவரது குறியாக இருந்தது. தலைவர் வந்து இவருக்கு சன்மானமும் வழங்குவார்.

ஆனால் சோம்பேறியோ தலைவர் இல்லையென்று உண்டு, குடித்தான். தலைவரின் தண்டனையையும் பெற்றான்.

### எமது விழிப்பு, ஆயத்தம்

எமது நம்பிக்கை, செபம், நம்பிக்கையும் செபமும் நிறைந்த வாழ்வு எம்மையும் விழிப்பாகவும் ஆயத்தமாகவும் இருக்கச் செய்யும். நிலைவாழ்வே எமது குறிக்கோளாக வேண்டும். அதையடைய எமது உடல், பொருள், ஆவியை ஒப்படைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 ~ வெள்ளி - ஆவணி 2008

எரே 1: 17-19 திபா 71: 1-6, 15, 17 மாற் 6: 17-29

## திருமுழுக்கு யோவானின் பாடுகள்

திருமுழுக்கு யோவான் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் எப்போதும் கருத்தாயிருந்தார். அவருக்குக் கிடைத்த பரிசோ மரணம். ஆனாலும் அவர் துணிந்து உண்மைக்குச் சான்று பகர்ந்தார். துன்பங்களைவிட இறைவனின் பணியை முடிப்பதிலேயே நாமும் முனைப்பாயிருக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றது இன்றைய நற்செய்தி.

### திருமுழுக்கு யோவான்

இவர் ஓர் தனித்துவமானவர். சாதாரணத் துணி, வித்தியாசமான உணவு, அசாதாரண போதனை. மக்களில் பலதரப்பட்டவர்களும் அவரைத் தேடிச் சென்றார்கள். புதுவாழ்வு பெறவேண்டும் என்பதே இவர்களது நோக்கமாக இருந்தது. திருமுழுக்கு யோவானோ தனித்துவமான வாழ்வைப் பற்றிக் கருத்திற்கொள்ளாது இறைவனுக்கு கீழ்ப்படிவதிலேயே கருத்தாய் இருந்தார். மீட்பரின் வருகையை அறிவிக்கும் உயரிய பணி தனக்கிருக்கின்றது என்பதை அறிந்திருந்தார். அவர் எப்போதும் தனது அழைப்பிற்கும் இறைவனுக்கும் விசுவாசமாயிருந்தார்.

### அதிகாரப் போதனை

திருமுழுக்கு யோவானுக்கு அதிகாரமோ, அந்தஸ்தோ இருக்கவில்லை. ஆனால் அவர் அதிகாரம் மிக்கவராகப் போதித்தார். அவர் உண்மையை மட்டுமே பேசியதால் மக்கள் அவரை நம்பி மனம்மாறி திருமுழுக்குப் பெற்றனர்.

அவரது அதிகாரமிக்க போதனை ஒழுக்கம் தவறிய வாழ்வு வாழ்ந்த ஏரோதுவையும் விட்டுவிடவில்லை. தன் சகோதரன் பிலிப்புவின் மனைவி ஏரோதியாவை அவன் தனது மனைவியாகக் கொண்டிருந்தான். இதைக் கண்டித்த யோவானை தீன எண்ணம் கொண்டிருந்த ஏரோதியாள் சந்தர்ப்பம் பார்த்துப் பழிவாங்கினாள். தனது மகளைப் பயன்படுத்தி ஏரோதைப் பொறிக்குள் சிக்கவைத்து யோவானின் தலையை வெட்டிக் கொண்டுவர வைத்தாள்.

திருமுழுக்கு யோவானின் வாழ்க்கை அனைவருக்கும் நல்ல பாடமே. உண்மையையே அவர் துணிந்து பேசினார். மீட்பராம் இயேசுவின் வருகையை ஆயத்தம் செய்தார். நாமும் உண்மைக்கு எப்போதும் சான்றுபகர்வோம். அந்த உண்மையை நாளாந்தம் வாழ்ந்துகாட்டுவோம். அப்போது துன்பங்கள் வந்தாலும் ஆண்டவரின் ஆசீரை உணர்ந்துகொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1கொரி 1: 26-31 திபா 33: 12-13, 18-21 மத் 25: 14-30

## கணக்கு

எமது வாழ்வு பற்றி நாம் ஒருநாள் இறைவனுக்குக் கணக்குக் கொடுத்தாக வேண்டும் என்பதைத் தாலந்து உவமை மூலமாகக் காட்டுகின்றார் இயேசு. எமது கடமைகள், பொறுப்புகளை முறையாக நிறைவேற்றுகின்றோமா என்பதை சிந்தித்துப்பார்க்க அழைக்கின்றது இன்றைய நற்செய்தி.

### பயன்படுத்திய இருவர்

ஐந்து, இரண்டு தாலந்துகள் பெற்றவர்கள் அவற்றைப் பெருக்கினார்கள். வீணாக்கவில்லை. பொறுப்போடு அவற்றைப் பெருக்கி தலைவரின் பாராட்டு தலைப் பெற்றனர். அதைப் பெருக்க இவர்கள் பட்ட கஷ்டங்களை தலைவர் வினவவில்லை. மாறாக இவர்களது முயற்சியைப் பாராட்டினார்.

### பயன்படுத்தாத ஒருவர்

இவர் தனக்குக் கிடைத்த தாலந்தை பயன்படுத்தாமல் அப்படியே வைத்திருந்தார். தான் இவ்வாறு பயன்படுத்தாமல் இருந்ததை நியாயப்படுத்தவும் தொடங்கினார். இதை ஏற்றுக்கொள்ளாத தலைவர் அவனைத் தண்டித்தார்.

இயேசுவின் காலத்து பரிசேயர், மறைநூல் அறிஞர்கள், சட்ட வல்லுனர்கள் தமக்குக் கிடைத்த அறிவையும் சந்தர்ப்பங்களையும் பெரும் பாக்கியமாகக் கருதி அவற்றை தமது நன்மைக்காகவும், அடுத்தவர் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தினார்களா? இயேசுவின் உவமை இப்படிப்பட்டவர் களையே குறிப்பிடுகின்றது. இறைவனின் கொடைகளைப் பயன்படுத்தி தமது ஆன்மீக வளர்ச்சிக்கும் அடுத்தவரை ஆன்மீகத்தில் வழிநடத்தவும் பயன்படுத்தாமல் இருந்தால் இவர்களுக்கும் இறைவனின் தண்டனை நிச்சயம்.

இயேசு தன் உவமையில் பயன்படுத்திய 'தாலந்தை' எமது சூழ்நிலைக்கு வரம், கொடைகள், சொத்துகள், வாழ்வின் செல்வங்கள், ஆன்மீக வளங்கள், சந்தர்ப்பங்கள் போன்றவற்றோடு ஒப்பிடலாம். கிறிஸ்தவர் எனும் நிலையில் எமது அழைப்பு, கிறிஸ்தவத்தில் பல பணிகளிலும் பொறுப்புகளிலும் இருக்கும் எமக்கு இருக்கும் சந்தர்ப்பங்கள் எத்தனை? நாம் ஆன்மீகத்தில் வளர்ந்து எமது பராமரிப்பில் கொடுக்கப்பட்டவர்களை ஆன்மீகத்தில் வளர உதவு கின்றோமா? தாலந்து உவமை எமக்குத் தரும் பாடத்தை உணர்ந்து இறைவனுக்குப் பதில் சொல்ல எம்மை ஆயத்தம் செய்வோம். தினமும் ஓர் முயற்சி எம்மையும் அடுத்தவரையும் இறைவனிடம் சேர்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்காலம் 22ம் ஞாயிறு
### 31 _ ஆவணி 2008

*எரே 20: 7-9 திபா 63: 1-5, 7-8 உரோ 12: 1-2 மத் 16: 21-27*

### *சீடத்துவம்*

இறைவன் அழைக்கும் சீடத்துவத்தில் வரக்கூடிய துன்பங்கள் இன்றைய ஞாயிறு வாசகங்களில் காட்டப்படுகின்றன. அனைத்தும் தடையின்றி நடைபெறும், நல்லவையாகவே முடியும் என்று இருந்தால் எமக்கு ஏமாற்றமே கிடைக்கும். துன்பங்கள், சவால்கள், தடைகள் வந்தாலும் அவற்றையும் தாண்டி நாம் இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ்வதே முக்கியமானது. வாசகங்கள் தரும் சவால்களைத் தியானிப்போம்.

## எரேமியாவின் அழைப்பு

கி.மு. 6ம் நூற்றாண்டில் இறைவாக்குரைக்க அழைக்கப்பட்டவர் எரேமியா. இவர் 'துன்புறும் மனிதர்' என்று வர்ணிக்கப்படுகின்றார். இவரது இறைவாக்குகளெல்லாம் எருசலேமின் அழிவைப்பற்றியதாகவே இருந்தது. ஏனெனில் இவர் காலத்தில் இஸ்ரயேலர் இறைவன் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி வாழ்ந்து வந்தனர். எனவே நாடு பாபிலோனியாவுக்கு அடிமையாகும் எனும் கசப்பான செய்தியைக் கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆனால் இந்த கசப்பான செய்திகளை கேட்க விரும்பாத தலைவர்களும் மக்களும் எரேமியாவை வருத்தினார்கள், சிறையில் தள்ளினார்கள், நாடுகடத்தினார்கள்.

எரேமியா தாயின் வயிற்றிலிருக்கும்போதே தெரிவுசெய்யப்பட்டவர். அழைக்கப்பட்டபோது அவர் தனது இயலாமையை தெரிவித்தும் ஆண்டவர் அவரோடு எப்போதும் இருக்கிறார் எனும் உறுதிமொழியைக் கொடுத்தார்.

## எரேமியாவின் முறைப்பாடு

எரேமியா தனது பணிவாழ்வில் பல இன்னல்களை அனுபவித்தவராக இறைவனிடமே முறையிடுகின்றார். அவர் தன்னை அழைத்த இறைவனிடமே வந்து முறையிட்டது சிறப்பம்சமாகும். ஆயினும் அவர் இறைவனின் வாக்கை அறிவிக்காமல் தன்னுள் வைத்தபோதெல்லாம் அவருள் இறைசெய்தியை அறிவிப்பதற்கான ஆர்வம் தீபோல பற்றியெரிந்ததாகவும் குறிப்பிடுகின்றார். இது உண்மை இறைவாக்கினரின் அனுபவமாகும். இறைவனின் அழைப்பை உணர்ந்து ஏற்றுக்கொள்ளும்போது அவரால் அமைதியாக இருக்க முடிவதில்லை என்பதே உண்மை நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேதுருவின் அறியாமை

இயேசு தனது சாவை முன்னறிவித்ததையும் பேதுரு அவருக்குத் தடையாக வந்ததையும் நற்செய்தியில் வாசிக்கிறோம். இயேசுவின் சீடர் எவ்வளவு துன்பங்களையும் அனுபவிப்பதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். இயேசுவின் வாழ்வையும் சக்தியையும் பார்த்த பேதுருவும் ஏனைய சீடர்களும் அவர் புகழ்ச்சியோடே வாழவேண்டும், உலகை மீட்க வேண்டும் என எதிர்பார்த்திருக்கலாம். இது இவர்களது அறியாமை.

ஆனால் சூழ்நிலை வேறாக இருந்தது. இன்றைய நற்செய்திப் பகுதிக்கு முன்பு தமது கணிப்பின்படி இயேசு 'மெசியா, வாழும் கடவுளின் மகன்' (மத் 16: 16) என்று பேதுரு கூறியிருந்தார். 'அந்நேரம் முதல் எடுத்துரைக்கத் தொடங்கினார்' எனும் பதம் போதனையின் மாற்றத்தை சுட்டிநிற்கின்றது. மகிமை மட்டுமே என்று இருந்த சீடர்களுக்கு துன்பங்களின் மூலமே மீட்பு என்பதை கூறவேண்டிய காலம் வந்துவிட்டது இயேசுவிற்கு. மெசியா இப்படித்தான் இருப்பார் எனும் இவர்களது சிந்தனையை மாற்ற வேண்டிய அவசியத்தை இயேசு உணர்ந்திருந்தார். ஆரம்பத்திலிருந்தே தடைகள். 'என் கண்முன் நில்லாதே சாத்தானே...' என்று இயேசு தடையாக வந்த பேதுருவைக் கடிந்துகொண்டார். தொடர்ந்து அவர்களை வழிநடத்தினார்.

## தன்னலம் துறந்து தம் சிலுவையைத்...

உரோமையரின் ஆட்சியில் சிலுவை சுமப்பது என்றால் என்ன என்று சீடர்கள் நன்கு அறிந்திருப்பர். அதன் கொடூரத்தைப் பார்த்துமிருப்பர். தீர்ப்பிடப்பட்ட பெருங் குற்றவாளிகள் தமது சிலுவையைச் சுமந்தவண்ணம் வீதிகளினூடாக கொலைக்களத்திற்குச் செல்ல வேண்டும். இந்த நிலைக்கும் ஆண்டவரின் சீடர்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும். தம் வசதிகள், சொத்துகள், குடும்பங்கள் போன்றவற்றை இழக்கவும் பணிவாழ்வில் வரக்கூடிய அனைத்துத் துன்பங்களையும் ஏற்கவும் சீடர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். சவால்கள் நிறைந்தது கிறிஸ்தவ சீடத்துவம்.

## நேரிய வாழ்வு தேவை

பணி வாழ்வுக்கென்று சிறப்பான அழைப்புப் பெறுபவர்கள் சிலர். இன்றைய வாசகங்களில் எரேமியா, பேதுரு, திருத்தூதர்கள், பவுல் என்று பலர் பணியை ஏற்று கடவுளின் பணிக்காகப் பல துன்பங்களையும் எதிர் கொண்டனர். அதேபோல திருமுழுக்குப் பெறும் அனைவருக்கும் நேரிய கிறிஸ்தவ வாழ்வு வாழ அழைப்பு உண்டு. இதை உணர்ந்து பவுல் இரண்டாம் வாசகத்தில் கூறுவதைப்போல நல்லதையும் உகந்ததையும் வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது விவிலிய நூல்களின் பெயர்களும் சுருக்கக் குறியீடுகளும்
### பழைய ஏற்பாடு

| புதிய பெயர்கள் | பழைய பெயர்கள் | சுருக்கக் குறியீடு |
|---|---|---|
| 1. தொடக்க நூல் | ஆதியாகமம் | தொநூ |
| 2. விடுதலைப் பயணம் | யாத்திராகமம் | விப |
| 3. லேவியர் | லேவியராகமம் | லேவி |
| 4. எண்ணிக்கை | எண்ணாகமம் | எண் |
| 5. இணைச்சட்டம் | உபாகமம் | இச |
| 6. யோசுவா | யோசுவா | யோசு |
| 7. நீதித்தலைவர்கள் | நீதிபதிகள் | நீத |
| 8. ரூத்து | ரூத் | ரூத் |
| 9. 1 சாமுவேல் | 1 சாமுவேல் | 1சாமு |
| 10. 2 சாமுவேல் | 2 சாமுவேல் | 2சாமு |
| 11. 1 அரசர்கள் | 1 அரசர்கள் | 1அர |
| 12. 2 அரசர்கள் | 2 அரசர்கள் | 2அர |
| 13. 1 குறிப்பேடு | 1 நாளாகமம் | 1குறி |
| 14. 2 குறிப்பேடு | 2 நாளாகமம் | 2குறி |
| 15. எஸ்ரா | எஸ்ரா | எஸ் |
| 16. நெகேமியா | நெகேமியா | நெகே |
| 17. எஸ்தர் | எஸ்தர் | எஸ் |
| 18. யோபு | யோபு | யோபு |
| 19. திருப்பாடல்கள் | சங்கீதங்கள் | திபா |
| 20. நீதிமொழிகள் | பழமொழி ஆகமம் | நீமொ |
| 21. சபை உரையாளர் | சங்கத் திருவுரை | சஉ |
| 22. இனிமைமிகு பாடல் | உன்னத சங்கீதம் | இபா |
| 23. எசாயா | இசையாஸ் | எசா |
| 24. எரேமியா | எரேமியாஸ் | எரே |
| 25. புலம்பல் | புலம்பல் | புல |
| 26. எசேக்கியேல் | எசேக்கியேல் | எசே |
| 27. தானியேல் | தானியேல் | தானி |
| 28. ஓசேயா | ஓசே | ஓசே |
| 29. யோவேல் | யோவேல் | யோவே |
| 30. ஆமோஸ் | ஆமோஸ் | ஆமோ |
| 31. ஒபதியா | அப்தியாஸ் | ஒப |
| 32. யோனா | யோனாஸ் | யோனா |
| 33. மீக்கா | மிக்கேயாஸ் | மீக் |
| 34. நாகூம் | நாகும் | நாகூ |
| 35. அபக்கூக்கு | அபாக்கூக் | அப |
| 36. செப்பனியா | செப்போனியாஸ் | செப் |
| 37. ஆகாய் | – – – | ஆகா |
| 38. செக்கரியா | சக்கரியாஸ் | செக் |
| 39. மலாக்கி | மலாக்கியா | மலா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைத் திருமுறை நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. தோபித்து | தொபியாக ஆகமம் | தோபி |
| 2. யூதித்து | யூதித் | யூதி |
| 3. எஸ்தர் | --- | எஸ் (கி) |
| 4. சாலமோனின் ஞானம் | ஞானாகமம் | சாஞா |
| 5. சீராக்கின் ஞானம் | சீராக் ஆகமம் | சீஞா |
| 6. பாரூக்கு | பாரூக் | பாரூ |
| 7. தானியேல் இணைப்புகள் | --- | தானி (இ) |
| 8. 1 மக்கபேயர் | 1 மக்கபே ஆகமம் | 1மக் |
| 9. 2 மக்கபேயர் | 2 மக்கபே ஆகமம் | 2மக் |

## புதிய ஏற்பாடு

| புதிய பெயர்கள் | பழைய பெயர்கள் | சுருக்கக் குறியீடு |
|---|---|---|
| 1. மத்தேயு நற்செய்தி | மத்தேயு | மத் |
| 2. மாற்கு நற்செய்தி | மாற்கு | மாற் |
| 3. லூக்கா நற்செய்தி | லூக்காஸ் | லூக் |
| 4. யோவான் நற்செய்தி | அருளப்பர் | யோவா |
| 5. திருத்தூதர் பணி | அப்போஸ்தலர் பணி | திப |
| 6. உரோமையர் | உரோமையர் | உரோ |
| 7. 1 கொரிந்தியர் | 1 கொரிந்தியர் | 1கொரி |
| 8. 1 கொரிந்தியர் | 2 கொரிந்தியர் | 2கொரி |
| 9. கலாத்தியர் | கலாத்தியர் | கலா |
| 10. எபேசியர் | எபேசியர் | எபே |
| 11. பிலிப்பியர் | பிலிப்பியர் | பிலி |
| 12. கொலோசையர் | கொலோசேயர் | கொலோ |
| 13. 1 தெசலோனிக்கர் | 1 தெசலோனிக்கேயர் | 1தெச |
| 14. 2 தெசலோனிக்கர் | 2 தெசலோனிக்கேயர் | 2தெச |
| 15. 1 திமொத்தேயு | 1 தீமோத்தேயு | 1திமொ |
| 16. 2 திமொத்தேயு | 2 தீமோத்தேயு | 2திமொ |
| 17. தீத்து | தீத்து | தீத் |
| 18. பிலமோன் | பிலமோன் | பில |
| 19. எபிரேயர் | எபிரேயர் | எபி |
| 20. யாக்கோபு | யாகப்பர் | யாக் |
| 21. 1 பேதுரு | 1 இராயப்பர் | 1பேது |
| 22. 2 பேதுரு | 2 இராயப்பர் | 2பேது |
| 23. 1 யோவான் | 1 அருளப்பர் | 1யோவா |
| 24. 2 யோவான் | 2 அருளப்பர் | 2யோவா |
| 25. 3 யோவான் | 3 அருளப்பர் | 3யோவா |
| 26. யூதா | யூதா | யூதா |
| 27. திருவெளிப்பாடு | திருவெளிப்பாடு | திவெ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

### ஆனி

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| 01 | 7: 21–27 | – | – | – |
| 02 | – | 12: 1–12 | – | – |
| 03 | – | 12: 13–17 | – | – |
| 04 | – | 12: 18–27 | – | – |
| 05 | – | 12: 28–34 | – | – |
| 06 | – | 12: 35–37 | – | – |
| 07 | – | 12: 38–44 | – | – |
| 08 | 9: 9–13 | – | – | – |
| 09 | 5: 1–12 | – | – | – |
| 10 | 5: 13–16 | – | – | – |
| 11 | 10: 7–13 | – | – | – |
| 12 | 5: 20–26 | – | – | – |
| 13 | 5: 27–32 | – | – | – |
| 14 | 5: 33–37 | – | – | – |
| 15 | 9: 36–10: 8 | – | – | – |
| 16 | 5: 38–42 | – | – | – |
| 17 | 5: 43–48 | – | – | – |
| 18 | 6: 1–6, 16–18 | – | – | – |
| 19 | 6: 7–15 | – | – | – |
| 20 | 6: 19–23 | – | – | – |
| 21 | 6: 24–34 | – | – | – |
| 22 | 10: 26–33 | – | – | – |
| 23 | 7: 1–5 | – | – | – |
| 24 | – | – | 1: 57–66, 80 | – |
| 25 | 7: 15–20 | – | – | – |
| 26 | 7: 21–29 | – | – | – |
| 27 | 8: 1–4 | – | – | – |
| 28 | 8: 5–17 | – | – | – |
| 29 | 16: 13–19 | – | – | – |
| 30 | 8: 18–22 | – | – | – |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

### ஆடி

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| 01 | 8: 23–27 | – | – | – |
| 02 | 8: 28–34 | – | – | – |
| 03 | – | – | – | 20: 24–29 |
| 04 | 9: 9–13 | – | – | – |
| 05 | 9: 14–17 | – | – | – |
| 06 | 11: 25–30 | – | – | – |
| 07 | 9: 18–26 | – | – | – |
| 08 | 9: 32–38 | – | – | – |
| 09 | 10: 1–7 | – | – | – |
| 10 | 10: 7–15 | – | – | – |
| 11 | 10: 16–23 | – | – | – |
| 12 | 10: 24–33 | – | – | – |
| 13 | 13: 1–23 | – | – | – |
| 14 | 10: 34–11: 1 | – | – | – |
| 15 | 11: 20–24 | – | – | – |
| 16 | 11: 25–27 | – | – | – |
| 17 | 11: 28–30 | – | – | – |
| 18 | 12: 1–8 | – | – | – |
| 19 | 12: 14–21 | – | – | – |
| 20 | 13: 24–43 | – | – | – |
| 21 | 12: 38–42 | – | – | – |
| 22 | – | – | – | 20: 1, 11–18 |
| 23 | 13: 1–9 | – | – | – |
| 24 | 13: 10–17 | – | – | – |
| 25 | 20: 20–28 | – | – | – |
| 26 | 13: 24–30 | – | – | – |
| 27 | 13: 44–52 | – | – | – |
| 28 | 13: 31–35 | – | – | – |
| 29 | – | – | – | 11: 19–27 |
| 30 | 13: 44–46 | – | – | – |
| 31 | 13: 47–53 | – | – | – |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

## ஆவணி

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| 01 | 13: 54–58 | – | – | – |
| 02 | 14: 1–12 | – | – | – |
| 03 | 14: 13–21 | – | – | – |
| 04 | 14: 22–36 | – | – | – |
| 05 | 15: 1–2, 10–14 | – | – | – |
| 06 | 17: 1–9 | – | – | – |
| 07 | 16: 13–23 | – | – | – |
| 08 | 16: 24–28 | – | – | – |
| 09 | 17: 14–20 | – | – | – |
| 10 | 14: 22–33 | – | – | – |
| 11 | 17: 22–27 | – | – | – |
| 12 | 18: 1–5, 10–14 | – | – | – |
| 13 | 18: 15–20 | – | – | – |
| 14 | 18: 21–19: 1 | – | – | – |
| 15 | – | – | 1: 39–56 | – |
| 16 | 19: 13–15 | – | – | – |
| 17 | 15: 21–28 | – | – | – |
| 18 | 19: 16–22 | – | – | – |
| 19 | 19: 23–30 | – | – | – |
| 20 | 20: 1–16 | – | – | – |
| 21 | 22: 1–14 | – | – | – |
| 22 | – | – | 1: 39–47 | – |
| 23 | 23: 1–12 | – | – | – |
| 24 | 16: 13–20 | – | – | – |
| 25 | 23: 13–22 | – | – | – |
| 26 | 23: 23–26 | – | – | – |
| 27 | 23: 27–32 | – | – | – |
| 28 | 24: 42–51 | – | – | – |
| 29 | – | 6: 17–29 | – | – |
| 30 | 25: 14–30 | – | – | – |
| 31 | 16: 21–27 | – | – | – |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்புகளும், அவை கொடுக்கப்பட்டுள்ள திகதிகளும்


| | | | |
|---|---|---|---|
| வாழ்வு | ஆனி 1,2,26, | உயிர்ப்பு | ஆனி 4, |
| மெசியா | ஆனி 6, | பேறுகள் | ஆனி 9, |
| உப்பு, ஒளி | ஆனி 10, | பாவம் | ஆனி 13, |
| செபம் | ஆனி 19, | கவலை | ஆனி 21, |
| நோன்பு | ஆடி 5, | துன்பம் | ஆடி 11,ஸ |
| அமைதி | ஆடி 14, | உறவு | ஆடி 16, |
| ஆறுதல் | ஆடி 17, | விபசாரம் | ஆடி 21, |
| தேடுதல் | ஆடி 22, | இறைவாக்கு | ஆடி 23, |
| உவமை | ஆடி 24,30, | முன்னுரிமை | ஆடி 27, |
| விண்ணரசு | ஆடி 28,31, | சீடத்துவம் | ஆவணி 8,31 |
| போலிகள் | ஆனி 25, | மன்னிப்பு | ஆவணி 13,14, |
| மீட்பு | ஆவணி 17, | விழிப்பு | ஆவணி 28, |

| | | |
|---|---|---|
| இரக்கம் | ஆனி 8,27, | ஆடி 8, |
| வார்த்தை | ஆனி 14, | ஆடி 13, |
| அர்ப்பணம் | ஆனி 3,7, | ஆவணி 2,20,29, |
| வெளிவேடம் | ஆனி 18, | ஆவணி 25,26,27, |
| செல்வம் | ஆனி 20, | ஆவணி 18,19, |
| குழந்தையுள்ளம் | ஆவணி 12,16, | |

| | | | |
|---|---|---|---|
| அழைப்பு | ஆனி 30, | ஆடி 4,9, | ஆவணி 15,21,22, |
| இயேசு | ஆடி 1,2, | ஆடி 19, | ஆவணி 24, |
| சட்டம் | ஆனி 5, | ஆடி 18, | ஆவணி 11, |
| இறைபராமரிப்பு | ஆனி 15, | ஆடி 6,20,26, | ஆவணி 3,4,10, |
| நம்பிக்கை | ஆனி 22,28, | ஆடி 3,7,12,29, | ஆவணி 1,6,7,9, |
| தீர்ப்பு | ஆனி 23, | ஆடி 15, | ஆவணி 30, |
| பணிவாழ்வு | ஆனி 11,24,29, | ஆடி 10,25, | ஆவணி 23, |
| அன்பு | ஆனி 12,16,17, | ஆவணி 5, | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org